# இலங்கை சுங்கம்

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# **2018**

# சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைச் சுங்கத்தின் 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். மீளாய்வின் கீழான ஆண்டுக் காலத்தில், இலங்கைச் சுங்கத்தினால் அரச வரி வருமானமாக ரூபா 919.05 பில்லியன்களை சேகரிக்க முடிந்துள்ளது. இது அரசாங்கத்தின் மொத்த வரி வருமானமான ரூபா 1,712.31 பில்லியன் ஆன தொகையில் 53.7% பங்களிப்பாகும்.

இறக்குமதியின் அளிவிலான வீழ்ச்சி, உயர் தீர்வை விலக்களிப்புகள் வழங்கப்பட்டமை மற்றும் நாணய மாற்று வீதத்திலான துரித ஏற்ற இறக்கம் போன்றன உள்ளடங்கலாக மந்த கதியுடன் கூடிய வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்தியில் மேற்படி சாதனையினை இலங்கைச் சுங்கத்தினால் அடைய முடியுமாகவிருந்தது. இந்த சாதனையானது, அமுல்படுத்தல் மற்றும் வசதியாக்கம் ஆகிய இரண்டு அம்சங்கள் தொடர்பில் உலக சுங்க அமைப்பினால் பரிந்துரை செய்யப்பட்ட சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகள் மற்றும் பயனுறுதிமிக்க சுங்கக் கட்டுப்பாட்டு முன்னெடுப்புகள் ஆகியவற்றை பொருந்திக்கொண்டதன் விளைவினையே பிரதிபலிக்கின்றது. இது தானியக்க சுங்கச் செயலாக்கம் மற்றும் இடர் மைய பரிசோதனையின் அறிமுக அளவுகோல்கள் போன்றவற்றை உள்ளடக்குகிறது. இலங்கைச் சுங்கமானது, அரசாங்கத்திற்குரிய வருமானத்தினைச் சேகரிக்கின்ற அதேவேளை, போதைப்பொருள் போன்ற மட்டுப்படுத்தப்பட்டதும் தடைசெய்யப்பட்டதுமான பொருட்களை இறக்குமதி செய்வதையும் மற்றும் அவற்றை ஏற்றுமதி செய்வதையும் தடுப்பதில் பயனுறுதிமிக்க முறையில் பணியாற்றி வருவதோடு, சமூக-பொருளாதார, கலாசார மற்றும் சூழலியல் சார்ந்த சமூகத்தின் ஆர்வம் மிக்க விடயங்களையும் பாதுகாப்பதில் பயனுறுதி மிக்க முறையில் பணியாற்றிவருகின்றதுடன், சட்டபூர்வமான வர்த்தக நடவடிக்கைகளுக்கு உரிய வசதியாக்கத்தினையும் வழங்கி வருகிறது.

இத்தகையதொரு சாதனையை அடைந்துகொள்வதற்காக பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பினை வழங்கிய, கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், திறைசேரி மற்றும் சுங்கத்தின் அதிகாரிகள், மற்றும் வியாபார சமூகங்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பீ.எஸ்.எம். சார்ள்ஸ்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| இலங்கைச் சுங்கம் - அறிமுகம் | 6 |
| இலங்கைச் சுங்கத்தின் அமைப்பக கட்டமைப்பு | 8 |
| பிரதான அலுவலர்கள் | 10 |
| ஓட்டுமொத்த செயலாற்றுகை | 12 |
| அரசிறை சேகரிப்பு - 2018 | |
| அமுல்படுத்தல் கொத்தணி | |
| தடுப்புப் பணிப்பகம் | 22 |
| சமூக பாதுகாப்புப் பணிப்பகம் | 26 |
| போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு | 26 |
| உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு | 30 |
| பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு | 43 |
| துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு | 48 |
| மத்திய விசாரணைகள் பணிப்பகம் | 50 |
| சட்ட விவகாரங்கள் பணிப்பகம் | 54 |
| மத்திய புலனாய்வுகள் பணிப்பகம் | 56 |
| அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி | |
| பிரகடனங்கள் பணிப்பகம் | 60 |
| ட பிரிவு | 61 |
| நீள் அறை | 62 |
| மோட்டார் வாகனப் பிரிவு | 64 |
| ஆவணங்ள் கையாளும் நிலையம் | 64 |
| கானே | 66 |
| கைத்தொழில் மற்றும் சேவைகள் பணிப்பகம் | 70 |
| மத்திய சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம் | 74 |
| பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம் | 76 |
| ஏற்றுமதிகள் பணிப்பகம் | 80 |
| கூட்டுறவுக் கொத்தணி | |
| கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம் | 86 |
| இணக்காப்படு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம் | 94 |
| வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவு | 97 |
| மீளளிப்புகள் பிரிவு | 101 |
| இடர் முகாமைத்துவப் பிரிவு | 102 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம் | 106 |
| மத்திய பெறுமதியிடல் பணிப்பகம் | 110 |
| விசேட சேவைகள் பணிப்பகம் | 114 |
| பொருள் வகைப்படுத்தல் பிரிவு | 114 |
| சுங்க ஆய்வுகூடப் பிரிவு | 117 |
| இரத்தினக்கல் பிரிவு | 118 |
| வரி அடையாளப்படுத்தல் இலக்கம் / பெறுமதி சேர் வரி பதிவுப் பிரிவு | 122 |
| மனித வளங்கள் கொத்தணி | |
| மனித வள முகாமைத்துவப் பணிப்பகம் | 126 |
| மனித வள அபிவிருத்திப் பணிப்பகம் | 128 |
| ஊழியர் சேவைகள் பணிப்பகம் | 132 |
| பொருள் வினியோகப் பணிப்பகம் | 134 |
| பிராந்தியக் கொத்தணி | |
| பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகம் | 138 |
| அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம் | 142 |
| அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம் | 144 |
| சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள் | |
| முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம் | 148 |
| நிதிப் பணிப்பகம் | 150 |
| வருவாய் செயலணி | 154 |
| உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு | 158 |
| மேன் முறையீடுகள் பணிப்பகம் | 160 |
| இணைப்பு | 162 |

# இலங்கைச் சுங்கம் - அறிமுகம்

தொலை நோக்கு

இலங்கையைப் பாதுகாப்புடனும் செழிப்புடனும் மேம்படுத்துகின்ற ஒரு "சிறந்த நடைமுறையுள்ள" சுங்க நிர்வாகமாக அடையப் பெறுவதாகும்.

பணி நோக்கு

தேசிய செயற்பாடுகளுக்கும் மற்றும் சர்வதேச சுங்க நியமங்களுக்கும் உறுதுணையாக இருக்கும் சட்டவாக்க வாணிபம், பயணம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றினை இலகுபடுத்தும் அதே வேளை, சுங்கச் சட்டம், அரசிறைகளைக் கருத்திற் கொண்ட தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் சமூக, சூழல் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்கிச் செயற்படுவதும் அதனை மேம்படுத்துவதுமாகும்.

குறிக்கோள்கள்

- நாட்டின் எல்லைப் புறங்களில் அரசினது சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள், வாணிபம் மற்றும் இறுப்புக் கொள்கைகளைச் சரியான முறையில் அமுலாவதை உறுதிப்படுத்தல்.
- இடையூறு இல்லாத அரசிறைகளை அரசுக்குத் தோற்றுவித்து, உரிய அரசிறையைச் சேகரித்து உரிய நேரத்தில் அவற்றினைக் கணக்கிடுதலை உறுதிப்படுத்தல்.
- நாட்டின் எல்லைப்புறத்தினைப் பாதுகாத்து உள்நாட்டுப் பாதுகாப்பினை பலப்படுத்தும் நோக்கில் உலகின் பயங்கரவாதத்திற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- சட்ட ரீதியான வர்த்தகச் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்தாத வகையில், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பணத் துவிதாக்கம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் நாட்டின் அரசிறையினையும் சமூகப் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல்.
- உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியாக்கல் உடன்படிக்கைக்கு ஏற்ப சட்டங்களை ஒரேவிதமாக அமுல்படுத்தி அதனைப் பிரயோகிப்பதனை உறுதிப்படுத்தல்.
- நாட்டின் எல்லைப்புறங்களில் அரசினால் அமுல்படுத்தப்படவிருக்கும் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் அரசிறையினைத் தீர்மானிப்பதில் கொள்கைத் திட்டமிடலாளருக்கு அறிவுரைப் பாகமாக இருத்தல்.
- சுங்க மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களது அமுலாக்கலையும் உறுதிப்படுத்தும் அதேவேளை, பயணிகளதும் பொருட்களதும் அசைவுகளையும் அவற்றோடு தொடர்பிலான போக்குவரத்தையும் தடங்கலற்றதாக்குதல்.
- உலக சுங்க அமைப்பினால் விருத்திசெய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்களைக் கொண்டும் மேலும் சம்பந்தப்பட்ட கருவிகள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்தியும் நாட்டில் எல்லைப் பகுதிகளில் சுங்கத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- பயணிகள், பொருட்கள் மற்றும் போக்குவரத்து தொடர்பான வசதிகள் போன்றவற்றின் அசைவுகள் தகவல் பரிமாற்றம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட விடயங்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சகல சர்வதேச கடப்பாடுகளையும் அனுசரித்தல்.
- அரசுக்கும் பொது மக்களுக்கும் தகவல் மற்றும் புள்ளிவபரங்களை வழங்குதல்.
- அரசினது சகல முயற்சிகளிலும் முன்னேற்றத்தின் பங்காளியாகவும், தொழில் ரீதியான சேவைகளில் நிபுணத்துவத்துடன் வாடிக்கையாளரின் நேசமுள்ளவராகவும் இருத்தல்.
- கணக்காய்வு வழிமுறையியல் மற்றும் தெளிவுத்தன்மையை உறுதியாக்கல் என்பவற்றின் அடிப்படையிலான சிறந்த நிருவாகத்தின் மூலம் சுங்க சேவையில் முன்னேற்றத்துக்காக உழைத்தல்.

பிரதான தொழிற்பாடுகள்

- ✓ இறுப்பு வர்த்தகம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட அரச கொள்கைகளை அமுல்படுத்தல்.
- ✓ இறக்குமதி, ஏற்றுமதி சுங்கத் தீர்வைகளை மதிப்பிடலும் சேகரித்தலும்.
- ✓ ஏனைய அரச அமைப்புகள் மற்றும் பிற சட்டங்கள் சார்பில் தீர்வைகள் /வரிகள் மற்றும் இதர வரிகளை மதிப்பிடலும் சேகரித்தலும்.
- ✓ தீர்வைத் தள்ளுபடிகள், விலக்களிப்புகள் மற்றும் தீர்வை சலுகைகளை (வழங்குதல்) அமுல்படுத்தல்.
- ✓ தீர்வைகள் மற்றும் இதர வரிகளை உத்தரவாதப்படுத்தலும் அவைகளைக் கணக்கில் இடுதலும்.
- ✓ சுங்கத் தீர்வைகளது மீளமைப்பு, தீர்வைக் குறைப்பு மற்றும் தள்ளுபடிகளை மேற்கொள்ளல்.
- ✓ சட்டவிரோத கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தலும் தடை செய்தலும்.
- ✓ தடை செய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட பண்டங்கள் தொடர்பிலான சட்டங்களை அமுல்படுத்தல்.
- ✓ சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் தொடர்பிலான இதர சட்டங்களின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை புலன்விசாரணை செய்வதும் விசாரிப்பதும்.
- ✓ குற்றவாளிகளைத் தண்டணைக்குட்படுத்தலும் /பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைக் கைப்பற்றலும்.
- ✓ பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை விற்றுத் தீர்த்தல்.
- ✓ இறக்குமதி, ஏற்றுமதிச் சரக்குகளை அகற்றுவதற்கு உதவுதல்.
- ✓ பயணிகளையும் அவர்களின் பொதிகளையும் வெளியாக்க உதவுதல்.
- ✓ சரக்கு மற்றும் பயணிகள் அகற்றும் செயன்முறைகளைக் கணனி மயப்படுத்தல்.
- ✓ உள்நாட்டு கைத்தொழில் மற்றும் விவசாய பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் அரசிறை அளவுகோல்களை அமுல்படுத்தல்.
- ✓ ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களை முகாமை செய்தல்.
- ✓ சரக்கு குத இல்லங்களை முகாமை செய்தல் (பிணைத் திட்டம்)
- ✓ ஏற்றுமதி வாய்ப்புள்ள கைத்தொழில் திட்டங்களைக் கண்காணித்தல்.
- ✓ தகவல், வகைப்படுத்தல் விதிகள் போன்றவைகளை வழங்குதல்.
- ✓ வர்த்தக ஒன்றியங்கள், பொருள் அனுப்பும் முகவர்கள், சுங்க இல்ல முகவர்கள் ஆகியோருடன் கிரமமான கலந்துரையாடல்.
- ✓ பயிற்சி / விழிப்புனர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- ✓ பெயர் அட்டவணை, பகுப்பாய்வு, மதிப்பிடுதல் மற்றும் அமுலாக்கல் செயன்முறைகள் தொடர்பான விடயங்கள் பற்றி உலக சுங்க ஸ்தாபனத்துடன் கிரமமான தொடர்பினைப் பேணுதல்.
- ✓ உள்நாட்டு இறைவரித் திணைக்களம். நிதி அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, மது வரித் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் மற்றும் தொடர்பான முகவர்களுடன் தகவல் பரிமாற்றத்திற்காக கூட்டிணைப்பினை மேற்கொள்ளல்.

இலங்கைச் சுங்கத்தின் அமைப்பக கட்டமைப்பு

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்**

- **சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (அமுல்படுத்தல் கொத்தணி)**
  - சு.ப - தடுப்புப் பணிப்பகம்
  - சு.ப - சமூக பாதுகாப்புப் பணிப்பகம்
  - சு.ப - மத்திய விசாரணைகள் பணிப்பகம்
  - சு.ப - மத்திய புலனாய்வுகள் பணிப்பகம்
  - சு.ப - சட்டவிவகாரங்கள் பணிப்பகம்
- **சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி)**
  - சு.ப - பிரகடனங்கள் பணிப்பகம்
  - சு.ப - கைத்தொழில் மற்றும் சேவைகள் பணிப்பகம்
  - சு.ப –மத்தியசரக்குப் பரிசோதனைப் பணிப்பகம்
  - சு.ப - ஏற்றுமதிகள் பணிப்பகம்
  - சு.ப - பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்
- **சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவுக் கொத்தணி)**
  - சு.ப - கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி/ சர்வதேச விவகாரங்கள் பணிப்பகம்
  - சு.ப - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம்
  - சு.ப - மத்திய பெறுமதியிடல் பணிப்பகம்
  - சு.ப - இணக்காப்படு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்
  - சு.ப - விசேட சேவைகள் பணிப்பகம்
- **சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள் கொத்தணி)**
  - சு.ப - மனிதவள முகாமைத்துப் பணிப்பகம்
  - சு.ப - மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம்
  - சு.ப - ஊழியர் சேவைகள் பணிப்பகம்
  - சு.ப - பொருள் வினியோகப் பணிப்பகம்
- **சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (பிராந்தியக் கொத்தணி)**
  - சு.ப - பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகம்
  - சு.ப - அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம்
  - சு.ப - அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்
  - சு.ப - பயணிகள் சேவை (மாகாணம்) பணிப்பகம்
- **பிரதம நிதி அலுவலர்**
  - ப - நிதிப் பணிப்பகம்
- சு.ப - வருவாய் செயலணி
  சு.ப - மேன் முறையீடுகள் பணிப்பகம்
  ப - முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்
- ப - உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு
- புள்ளிவிபரவியலாளர்

சுருக்கக் குறிப்பு : சு.ப - சுங்கப் பணிப்பாளர்
ப - பணிப்பாளர்

# இலங்கைச் சுங்கம்
# 2018
### பிரதான அலுவலர்கள்

**திருமதி. பீ.எஸ்.எம். சார்ள்ஸ்**
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

**திரு. எச்.பீ. ஜயநந்த**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்)

**திரு. எஸ். மஹேசன்**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு)

**திரு. கே.எச்.யூ.ஜே. கீர்த்தி**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அரசிறை மற்றும் சேவைகள்)

**திரு. எல். கஜதீர**
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அமுல்படுத்தல்)

**திரு. பீ.எஸ். சேனாரத்ன**
பதில் சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (பிராந்தியம்)

**திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவந்த**
பிரதம நிதி அலுவலர்

**திரு. டீ.ஜீ. சேனாநாயக**
சுங்கப் பணிப்பாளர் (இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல்)

**திரு. டபிள்யு.கே. ரந்தெனிய**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய சரக்குப் பரிசோதனை)

**திரு. ஆர்.ஏ.ஜே. புத்ததாஸ**
சுங்கப் பணிப்பாளர் (தடுப்பு)

**திரு. கே.எச். தர்மகீர்த்தி**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய புலனாய்வு)

**திரு. எஸ். ஆனந்தஈஸ்வரன்**
சுங்கப் பணிப்பாளர் (விசேட சேவைகள்)

**திரு. ஆர்.எம்.எஸ்.டீ. ரணவண**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய பெறுமதியிடல் )

**திரு. ஆர்.கே. ஜயலத்**
சுங்கப் பணிப்பாளர் (பொருள் விநியோகங்கள்)

**திருமதி. டீ.சீ. ஜயதேவ**
சுங்கப் பணிப்பாளர் (ஊழியர் சேவை)

**திரு. ஐ.ஏ.எம். அர்த்தநாயக**
சுங்கப் பணிப்பாளர் (அரசிறை செயலணி)

**திரு. ரீ. ரவீந்ரராஜா**
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கொழும்பு)

**திரு. டபிள்யு.ஜீ. சந்திரிகா**
பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)

**திரு. ஜீ. சரத் குமார**
பிரதம கணக்காளர்

**திரு. ஜே.எச்.எல்.கே. ஜயதிலக**
சுங்கப் பணிப்பாளர் (மத்திய விசாரணை)

**திரு. எச்.கே.எம்.எஸ். ஜயரத்ன**
சுங்கப் பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)

**திரு. எம்.ஏ. கருணாரத்ன**
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கட்டுநாயக)

**திரு. ஓ.எம். ஜபீர்**
சுங்கப் பணிப்பாளர் (அரசிறை மற்றும் சேவைகள் - கட்டுநாயக)

**திரு. எம்.எச்.கே. பிறியரத்ன**
சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில் மற்றும் சேவைகள்)

**திரு. எஸ்.கே. டீ சில்வா**
சுங்கப் பணிப்பாளர் (பிரகடனங்கள்)

**திரு. பீ.ஜீ. சுமனபால**
சுங்கப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு)

**திரு. எஸ்.டீ. சுனில்**
சுங்கப் பணிப்பாளர் நாயகம் (ஏற்றுமதிகள்)

**திரு. சீ. பேரின்பநாயகம்**
சுங்கப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்)

**திரு. எச்.ஆர்.என்.சீ. ஹேரத்**
சுங்கப் பணிப்பாளர் (சட்ட விவகாரங்கள்)

**திரு. எச்.ஏ.வீ.பீ. ஹபங்கம**
சுங்கப் பணிப்பாளர் (மனித வள முகாமை)

**திருமதி. ஈ.எம்.என். எதிரிசிங்க**
சுங்கப் பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)

**திரு. யூ. லொகுசூரிய**
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை- மாகாணம்)

**திரு. டபிள்யு.ஏ.யூ. அபேவர்தன**
சுங்கப் பணிப்பாளர் (மேன் முறையீடுகள்)

**திரு. டபிள்யு.ஏ.கே. அபேவர்தன**
சுங்கப் பணிப்பாளர் (வருவாய்கள் மற்றும் சேவைகள் - மாகாணம்)

**திரு. ஏ.பீ.என்.ஏ. அபேரத்ன**
சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில் மற்றும் சேவைகள் -மாகாணம்)

**திரு. எச்.ஆர்.வீ.பீ. விஜேவர்தன**
பணிப்பாளர் (உற்பத்தி வரி – விசேட ஏற்பாடுகள்)

**திரு. ஆர்.டீ.என். பிரேமவன்ச**
பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்)

# ஓட்டுமொத்த செயலாற்றுகை

அரசிறை சேகரிப்பு - 2018

தேசிய வரி வருமானத்தினதொரு பங்காக*




*தற்காலிகத் தரவு

இறக்குமதி மூலமான அரசிறை சேகரிப்பு – 2018 : வரிச் சேர்க்கை

| வகை | அரசிறை (ரூபா மில்) | மொத்த அரசிறையின் ஒரு விகிதமாக |
|---|---|---|
| சர்வதேச வியாபாரம் தொடர்பிலான வரிகள் | 340,156 | 37.01% |
| | | |
| உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) | 370,351 | 40.30% |
| | | |
| உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பிலான வரிகள் | 199,328 | 21.69% |
| | | |
| வரியல்லா வருமானம் | 6,287 | 0.68% |
| | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரிகள் | 2,923 | 0.32% |




| அரசிறைக் குறியீடு | விபரம் | 2018 ஜனவாரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான செயலாற்றுகை (ரூபா மில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடுகள் | அடையப் பெற்றவை | செயலாற்று கை விகிதம் | வேறுபாடு | வேறுபாடுக ளிலான விகிதம் |
| சர்வதேச வியாபாரம் தொர்பிலான வரிகள் | | | | | | |
| 1001.01.00 | இறக்குமதித் தீர்வை | 175,000 | 96,991 | 55% | (78,009) | -45% |
| 1001.02.00 | ஏற்றுமதித் தீர்வை | 40 | 40 | 99% | (0) | -1% |
| 1001.04.00 | துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 115,000 | 113,950 | 99% | (1,050) | -1% |
| 1001.05.01 | இறக்குமதி செஸ் அறவீடு | 47,000 | 50,777 | 108% | 3,777 | 8% |
| 1001.05.02 | ஏற்றுமதி செஸ் அறவீடு | 2,500 | 2,592 | 104% | 92 | 4% |
| 1001.08.00 | விசேட பண்ட அறவீடு | 80,000 | 75,807 | 95% | (4,193) | -5% |
| | | | | | | |
| உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) | | | | | | |
| 1002.05.01 | சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரி | 90,000 | 92,198 | 102% | 2,198 | 2% |
| 1002.05.02 | மதுபானம் மீதான உற்பத்தி வரி | - | 53 | - | 53 | - |
| 1002.05.03 | பெற்றோலியம் மீதான உற்பத்தி வரி | 80,000 | 66,318 | 83% | (13,682) | -17% |
| 1002.05.04 | மோட்டார் வாகனம் மீதான உற்பத்தி வரி | 230,000 | 204,081 | 89% | (25,919) | -11% |
| 1002.05.99 | ஏனையவை தொடர்பிலான உற்பத்தி வரி | 10,000 | 7,701 | 77% | (2,299) | -23% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | | | | | | |
| 1002.01.04 | பெறுமதி சேர் வரி (பெ.சே.வரி) | 210,000 | 179,163 | 85% | (30,837) | -15% |
| 1002.12.03 | தேச கட்டுமான வரி | 25,000 | 20,165 | 81% | (4,835) | -19% |
| 1002.10.00 | சமூக பாதுகாப்பு அறவீடு | - | - | - | - | - |
| | | | | | | |
| வருவாய் மற்றும் இலாபங்கள் மீதான வரிகள் | | | | | | |
| 1004.04.02 | பொருளாதார சேவைக் கட்டணம் | 1,200 | 2,923 | 244% | 1,723 | 144% |
| | | | | | | |
| வரியல்லா வருமானம் | | | | | | |
| 2003.02.17 | ஆடைகள் தொடர்பில் உள்நாட்டு விற்பனை மீதான கட்டணம் | 150 | 306 | 204% | 156 | 104% |
| 2003.02.99 | இதர | 1,600 | 5,464 | 342% | 3,864 | 242% |
| 2003.03.01 | தண்டங்களும் பறிமுதல்களும் | 315 | 349 | 111% | 34 | 11% |
| 2003.99.00 | ஏனைய பெறுகை | 70 | 167 | 239% | 97 | 139% |
| மொத்தம் | | **1,067,875** | **919,045** | **86%** | **(148,830)** | **-14%** |

அதிகூடிய அரசிறையினை ஈட்டித்தருகின்ற முதல் ஐம்பது பண்டங்கள்
(இயைபு முறைத்தலைப்பு வாரியாக)

| | இ.மு குறியீடு | விபரம் | 2018 | |
|---|---|---|---|---|
| | | | அளவு | வருவாய் |
| 1 | 27101221, 27101220, 27101222 | பெற்றோல் | 1,133,424,918 | 80,699,045,792 |
| 2 | 87032169 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான பிற மோட்டார் கார்கள், 1 வருடத்திற்கு மேற்பட்டவை | 32,896 | 51,784,212,320 |
| 3 | 87112010 | 55 சி.சிக்கு மேற்பட்ட ஆனால் 200சி.சிக்கு மேற்படாதவை, மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை | 347,307 | 40,491,201,770 |
| 4 | 27101942, 27101940, 27101941 | டீசல் அடங்கலான வாயு எண்ணெய் | 1,453,056,958 | 39,125,225,545 |
| 5 | 87034028 | பிற, மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை | 32,199 | 26,640,816,714 |
| 6 | 15119030 | செம்மைசெய்யப்படாத பாம் ஒலெய்ன் | 173,748,709 | 22,128,346,376 |
| 7 | 87032250 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை | 14,033 | 16,547,122,178 |
| 8 | 22071000 | கனவளவிற்கு 80% வீதக் கனவளவு வலுவுடைய அல்லது அதற்கு மேற்பட்ட வலுவுடைய இயல்பிழக்காத ஈதல் அல்ககோல். | 13,676,787 | 13,082,055,758 |
| 9 | 04022100 | பால் மற்றும் பாலாடை, சீனி சேர்க்கப்பட்டவை அல்லது பிற இனிப்பூட்டுபவையினை கொண்டிராதவை | 85,914,494 | 13,029,216,886 |
| 10 | 17019910 | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு வெல்லம் | 350,792,191 | 11,626,430,642 |
| 11 | 69072190 | பிற | 13,745,156 | 9,083,020,410 |
| 12 | 87032154 | பிற, முச்சக்கர வண்டிகள். 1 வருடத்திற்கு குறைந்தவை | 20,279 | 8,494,829,612 |
| 13 | 10019910 | கோதுமைத் தானியம | 1,098,708,050 | 8,310,619,235 |
| 14 | 87043193 | பிற, நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | 6,230 | 8,305,320,465 |
| 15 | 25232930 | பிற போர்ட்லந்து சீமெந்து 50 கிலோ கிராமும் அதற்குக் கீழ்பட்டவை அடைப்பான்களில் அல்லது | 2,193,082,246 | 7,552,076,409 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குவியலாக இறக்குமதி செய்யப்பட்டவை. | | |
| 16 | 72071110 | சிறு உலோகக் கட்டடை | 504,734,865 | 6,309,863,164 |
| 17 | 17019920 | வெள்ளைப் பளிங்குருவான பீற் வெல்லம் | 190,200,385 | 6,108,554,384 |
| 18 | 27011200 | பெற்றோலியக் கழிவிலிருந்து பெறப்பட்ட (பிற்றுமினஸ் நிலக்கரி), திரட்டப்படாதவை | 2,058,408,788 | 6,069,578,239 |
| 19 | 07031020 | பீ வெங்காயம் | 246,731,359 | 5,467,748,024 |
| 20 | 87034035 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை | 4,293 | 5,414,679,090 |
| 21 | 87036058 | பிற, மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை | 660 | 5,196,311,351 |
| 22 | 25231000 | சீமெந்து உருக்காங்கல் (கிளிங்கல்) | 2,302,661,666 | 5,022,887,354 |
| 23 | 25232920 | பிற போர்ட்லந்து சீமெந்து 50 கிலோ கிராமும் அதற்குக் கீழ்பட்டவையும் அடைப்பான்களில் இறக்குமதி செய்யப்பட்டவை. | 1,095,424,317 | 4,861,001,769 |
| 24 | 85176290 | குரல் போன்றவற்றின் வரவேற்பு, மாற்றுதல் மற்றும் குரல் பரப்புதல் அல்லது மீளுருவாக்கம் என்பவற்றுக்கான இயந்திரங்கள் | 219,283 | 4,843,802,005 |
| 25 | 23040000 | எண்ணெய் புண்ணாக்கும், வேறு திண்ம மீதிகளும் அரைக்கப்பட்டவை, சோயா அவரை எண்ணெய் பிரித்தெடுத்தலின் போது கிடைக்கப் பெறுபவை. | 213,730,589 | 4,388,118,656 |
| 26 | 27101980 | மசகுகள் | 22,083,767 | 4,211,447,589 |
| 27 | 07019000 | உருளைக் கிழங்குகள், புதியவை அல்லது குளிரூட்டப்பட்டவை, உருளைக் கிழங்கு விதை நீங்கலாக | 159,304,034 | 4,169,386,431 |
| 28 | 87042261 | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | 3,892 | 3,934,241,800 |
| 29 | 27090010 | பெற்றோலிய எண்ணெய் | 1,578,546,629 | 3,870,726,850 |
| 30 | 15119090 | பாம் எண்ணெய், இரசாயன ரீரியில் செம்மைசெய்யப்படாதவை, செம்மைசெய்யப்படாத எண்ணெய், பாம் ஒலெய்ன் நீங்கலாக, 210 லீற்றர் மற்றும் அதற்குக் குறைவான பொதிகளிலானவை | 27,835,127 | 3,733,478,432 |
| 31 | 39172100 | குழாய்கள். பைப்புகளும். நெளி குழாய்களும் இறுக்கமானவை, எதைலீன் பல்பகுதியங்களிலானவை | 13,631,840 | 3,491,943,606 |
| 32 | 87042191 | பிற, 3.5 வருடங்களுக்கு மேற்படாதவை | 1,233 | 3,362,200,462 |
| 33 | 40111000 | மோட்டார் கார்களுக்குப் பாவிக்கும் ஒரு வகையானவை (ஸரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக) | 654,818 | 3,219,521,925 |
| 34 | 39011000 | 0.94 க்குப் குறைவான தண்ணீர்ப்பினைக் கொண்ட பொலி எதிலின் | 73,035,924 | 3,186,348,361 |
| 35 | 27111910 | திரவ பெற்றோலிய வாயு | 410,879,319 | 2,999,171,325 |
| 36 | 39041000 | பொலிவைனல் குளோரைட், ஏதேனும் பிற பொருட்களுடன் கலக்கப்படாதவை, முதன்மை வடிவங்களில் | 55,000,668 | 2,900,294,195 |
| 37 | 73030000 | வார்ப்பு இரும்பிலான குழாய்களும் துவாரங்களையுடைய வெற்றுகளும் | 21,943,618 | 2,893,950,220 |
| 38 | 87042193 | பிற, நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | 635 | 2,870,851,550 |
| 39 | 87042163 | சரக்குக் கொள்ளவானது 800 கி.கிராம் அல்லது அதற்கு மேற்பட்டவை, நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை | 3,882 | 2,736,411,487 |
| 40 | 14049010 | பீடி இலைகள் | 770,133 | 2,707,487,653 |
| 41 | 27101970 | மசகு எண்ணெய் (பேஸ் ஒயில்கள்) மசகுகள் தயாரிப்பதற்கான | 39,351,452 | 2,639,179,658 |
| 42 | 39021000 | பொலிபுறோபைலீன், முதன்மை வடிவங்களில் | 44,578,340 | 2,603,159,414 |
| 43 | 48010000 | செய்தி அச்சிடும் தாள் - சுருள்களில் அல்லது தகடுகளாக | 63,507,137 | 2,475,027,757 |
| 44 | 72259200 | பிறவானது நாகத்தினால் முலாமிடப்பட்டவை அல்லது படலமிடப்படாதவை, 600 மி.மீற்றர் அல்லது மேலான அகலத்தினையுடைய | 80,130,907 | 2,462,123,778 |
| 45 | 72107000 | வண்ணம் பூசப்பட்ட வார்ணிசு செய்யப்பெற்ற அல்லது பிளாஸ்திரிக் முலாம் செய்யப்பட்டவை | 75,778,855 | 2,395,754,001 |

| | | | | |
|---|---|---|---|---|
| 46 | 15179000 | ஏனையவை | 10,796,099 | 2,243,594,335 |
| 47 | 40112019 | பிற | 176,608 | 2,124,647,325 |
| 48 | 87032359 | உருளைக் கொள்ளளவானது 2,000 சி.சிக்கு மேற்பட்ட, ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், 1 வருடங்களுக்கு மேற்பட்டவை | 2,318 | 2,105,151,976 |
| 49 | 85171220 | பிற கையடக்கத் தொலைபேசிகள் | 4,932,074 | 2,069,733,391 |
| 50 | 85176210 | வரவேற்புக் கருவிகளுடன் அல்லது வரவேற்புக்கருவிகளுடனல்லாத பரிமாற்றக் கருவிகள் | 967,145 | 2,026,046,199 |

அரசிறை சேகரிப்பினது ஒப்பீட்டாய்வு - 2017 மற்றும் 2018 (ரூபா மில்)

| அரசிறைக் குறியீடு | விபரம் | **2018** | **2017** | வேறுபாடு | விகிதம் |
|---|---|---|---|---|---|
| **1001.01.00** | இறக்குமதித் தீர்வை | 96,991 | 136,501 | (39,511) | -28.95 |
| **1001.02.00** | ஏற்றுமதித் தீர்வை | 40 | 30 | 9 | 31.38 |
| **1001.04.00** | துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 113,950 | 102,360 | 11,590 | 11.32 |
| **1001.05.01** | இறக்குமதி செஸ் அறவீடு | 50,777 | 56,574 | (5,797) | -10.25 |
| **1001.05.02** | ஏற்றுமதி செஸ் அறவீடு | 2,592 | 2,980 | (388) | -13.03 |
| **1001.07.00** | பிராந்திய கட்டுமான அபிவிருதத்தி அறவீடு | - | - | - | - |
| **1001.08.00** | விசேட பண்ட அறவீடு | 75,807 | 71,402 | 4,404 | 6.17 |
| | மொத்த சுங்க வரி வருமானம் | **340,156** | **369,848** | **(29,693)** | **-8.03** |
| | | | | | |
| **1002.05.01** | சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரி | 92,198 | 85,956 | 6,242 | 7.26 |
| **1002.05.02** | மதுபானம் மீதான உற்பத்தி வரி | 53 | 470 | (416) | -88.66 |
| **1002.05.03** | பெற்றோலியம் மீதான உற்பத்தி வரி | 66,318 | 73,983 | (7,665) | -10.36 |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் - இறக்குமதி | 54,426 | 66,943 | (12,517) | -18.70 |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் - உள்நாடு | 11,893 | 7,040 | 4,853 | 68.93 |
| **1002.05.04** | உற்பத்தி வரி ï மோட்டார் வாகனம் | 204,081 | 189,740 | 14,341 | 7.56 |
| **1002.05.99** | உற்பத்தி வரி ï ஏனையவைகள் | 7,701 | 6,091 | 1,609 | 26.42 |
| | இறக்குமதித் தீர்வை | 1,636 | - | 1,636 | - |
| | உற்பத்தி வரி ï ஏனையவைகள் - உள்நாடு | 6,065 | 6,091 | (26) | -0.43 |
| | மொத்த உற்பத்தி வரி வருமானம் | **370,351** | **356,240** | **14,111** | **3.96** |
| | | | | | |
| **1002.01.04** | பெறுமதி சேர் வரி (பெ.சே.வரி) | 179,163 | 168,393 | 10,770 | 6.40 |
| **1002.10.00** | சமூக பாதுகாப்பு அறவீடு | - | 2 | (2) | -100.00 |
| **1002.12.03** | தேச கட்டுமான வரி | 20,165 | 19,320 | 845 | 4.37 |
| **1004.04.02** | பொருளாதார சேவைகள் கட்டணம் | 2,923 | 2,160 | 764 | 35.36 |
| | மொத்த வரி வருமானம் | **202,252** | **189,875** | **12,377** | **6.52** |
| | | | | | |
| **2003.02.17** | ஆடைகள் தொடர்பில் உள்நாட்டு விற்பனை மீதான கட்டணம் | 306 | 218 | 88 | 40.32 |
| **2003.03.01** | தண்டங்களும் பறிமுதல்களும் | 5,464 | 1,964 | 3,500 | 178.21 |
| **2003.02.99** | இதர | 349 | 326 | 24 | 7.33 |
| **2003.99.00** | ஏனைய பெறுகை | 167 | 126 | 41 | 32.07 |
| | மொத்த ஏனைய வரி வருமானம் | **6,287** | **2,634** | **3,653** | **138.66** |
| | | | | | |
| *மொத்த வருமானம்* | | ***919,045*** | ***918,597*** | ***448*** | ***0.05*** |

மோட்டார் வாகன இறக்குமதிகள் தொடர்பிலான வரி வருமான சேகரிப்பு ஒப்பீட்டாய்வு 2016 - 2018 (ரூபா மில்)

| மாதம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| ஜனவரி | 16,063 | 16,605 | 15,793 |
| பெப்ரவரி | 13,868 | 14,097 | 16,171 |
| மார்ச் | 16,017 | 19,961 | 19,653 |
| ஏப்ரல் | 12,911 | 14,549 | 20,247 |
| மே | 13,548 | 16,588 | 18,134 |
| ஜுன் | 13,713 | 14,902 | 24,250 |
| ஜுலை | 14,847 | 14,470 | 15,786 |
| ஆகஸ்ட் | 19,399 | 18,600 | 14,749 |
| செப்டம்பர் | 14,698 | 13,411 | 12,883 |
| ஒக்டோபர் | 16,337 | 13,511 | 16,946 |
| நவம்பர் | 16,612 | 14,578 | 13,081 |
| டிசம்பர் | 15,711 | 18,441 | 11,076 |
| முழு மொத்தம் | **183,723** | **189,713** | **198,770** |



# அமுலாக்கல் கொத்தணி

# தடுப்புப் பணிப்பகம்

அறிமுகம்

தடுப்புப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிரதானமான சட்ட அமுலாக்கல் கரமாகச் செயற்பட்டுவருகிறது. குறிப்பாக கப்பற்துறைமுகங்கள், கரையோரப் பிரதேசங்கள், கடல் வழிப்பாதைகள் மற்றும் எல்லைப்புற கடற்பிரதேசங்கள், சர்வதேச விமானநிலையங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்றுமதிச் செயலாக்கல் வலயங்கள், பொருள் சோதனைச் சாலைகள் மற்றும் உள்நாட்டு வெளியாக்கல் நிலையங்கள் போன்ற சுங்கத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டுப் பிரதேசங்கள் குறித்தான கண்காணிப்பினை மேற்கொண்டு வருகிறது.

இது நிர்வாகம்,ாீபீ்் கிளை, செயற்பாடுகள், புலன்விசாரணைகள், கடல் சார் பிரிவு, பாரிய-கப்பற்துறை கண்காணிப்பகம், விற்பனைகள், மற்றும் தீவு முழுவதிலும் கரையோர நகரங்களில் உபாய முறையில் நிறுவப்பட்டுள்ள அனேக உப தடுப்புக் காரியாலயங்கள் ஆகிய பல்வேறு கிளைகளைக் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

1. கள்ளக்கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுத்தல்.
2. சுங்க குற்றமிழைப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. சுங்க குற்றமிழைப்புக்களை அதன் ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தல், தவறான பொருட்களை பறிமுதல் செய்தல், குற்றமிழைத்தோருக்கு எதிராக புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மற்றும் வழக்குத்தொடர்தல்களையும் மேற்கொள்ளல்.
4. உரிய அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்தல்.
5. நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழலியல்/ சுற்றால் சார்ந்த சிறப்பம்சங்களைப் பாதுகாப்பதோடு, இவற்றுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்தைப் பேணுதல்.
6. கொழும்புத் துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
7. படகுகளின் நடமாட்டத்தையும் மற்றும் எல்லைப்புற செயற்பாடுகளையும் கட்டுபடுத்தல்.
8. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்.

1. கடத்தல், வர்த்தக ரீதியான மோசடிகள், மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் போன்றவற்றைத் தடுத்தல்.

கோட்டை தடுப்பு அலுவகத்தின் அமைவிடம் மாற்றப்பட்டதோடு, பிரதான அலுவலகத்திலிருந்த கிளை அலுவலகங்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயுமான 03 இடங்களுக்கு இடமாற்றப்பட்டன. தற்போது தடுத்தல் நிர்வாகக் கிளை அலுவலகமும் தடுத்தல் அலுவலகப் பணிப்பாளரும் சுங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளன. இவை தவிர, திருகோணமலை, காலி, கொக்கலை, நீர்கொழும்பு மற்றும் சின்னப்பாடு ஆகிய குறிப்பான பாரிய கரையோரப் பிரதேசங்களில் பல ாீஉப-தடுப்பு அலுவலகங்கள்ò உள்ளன.

மேற்படி அலுவலகங்களிலுள்ள தடுப்பு அதிகாரிகள், நாட்டிற்குள் நோக்கியதும் மற்றும் நாட்டிலிருந்து வெளிநோக்கியதுமான கடத்தல்கள், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களை தடுப்பதற்கான ஆக்கபூர்வமானதும் முனைப்பானதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இது தவிர, சுதந்திர வர்த்தக வலயங்களில் கடமையாற்றும் தடுப்பு அதிகாரிகள் அவ்வலயங்களிலிருந்து தீர்வை விதிக்கப்படத்தக்க பொருட்களின் இரகசிய வெளியாக்கல்களைத் தடுக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டில் சமாதானம் நிலவியதன் பின்னர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலும் அதன் உப-தடுப்பு அலுவலகங்களை மீளத்தொடங்குவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் எடுத்துள்ளது. இருந்த போதிலும், சுங்கத்திற்கான படகுகள் மற்றும் பயிற்றப்பட்ட அதிகாரிகள் இன்மையின் காரணத்தால் கடல் சார்ந்த நடவடிக்கைகளை திணைக்களத்தினால் மீள-ஆரம்பிக்க முடியாமற்போனது. எனினும், இவ்விடயம் தொடர்பில்

ஆராயும் நோக்கிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அது பற்றிய விரிவானதொரு அறிக்கையும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை கப்பற்துறைமுகம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் போன்ற இடங்களில் தற்போது தடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. கண்டுபிடிப்புகள், பறிமுதல்கள், புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுப்புகள்.

தடுப்புப் பணிப்பகத்திற்கு பல்வேறு சுங்க-குற்றச்செயல்கள் (கடத்தல், வர்த்தக மோசடிகள், மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்கள்) பற்றிய தகவல்கள் பிரதானமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகள் மூலம் கிடைக்கப்பெறுகிறது :

(அ) தடுப்புப் பணிப்பகத்திலுள்ள அதிகாரிகளின் தனிப்பட்ட தகவலாளர்கள்.

(ஆ) பொதுமக்கள் தகவலாளர்கள்

இவை தவிர, தடுப்பு அலுவலக அதிகாரிகள் தமது சொந்த முயற்சிகளின் பேரில் சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் இறக்குமதி வெளியாக்கல் ஆவணங்கள் போன்றவற்றை கண்டறிந்து பல்வேறு மோசடிச் செயற்பாடுகளை அடையாளங்கண்டிருந்தனர். மோசடிமிக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை கண்டு பிடிப்பதற்கான இணையம் மூலமான வசதியானது கைமுறை மூலமான சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் சுங்கப்பிரகடனம் போன்றவற்றைக் கொண்டு கண்டு பிடிப்பதை விடவும் அதிகம் வழியமைத்துள்ளது.

தடுப்புப் பணிப்பகத்தின் மதிநுட்பம் மிக்க செயற்பாடுகள் சோதனைச் செயற்பாடுகளையும் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளதோடு, கடத்தப்பட்ட அல்லது சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்படாத பொருட்களைக் கண்டறிவதற்கும் வழிவகுத்துள்ளது. தடுப்பு அதிகாரிகளால் புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடரல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரிதாகவுள்ள மனித வளங்களின் பயனுறுதிமிக்க தன்மையினை சுங்க அமுலாக்கல் பிரிவின் மூலம் மேம்படுத்தும் வகையில் பொருத்தமான இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியினைப் பெறுவதற்கான கோரிக்கையினை அமுல்படுத்தவேண்டிய தேவை காணப்படுகிறது. மேலும், அமுலாக்கல் செயற்பாடுடன் தொடர்புடைய இலக்குகள் மற்றும் கடமைகள் தொடர்பான விசேட அவதானத்தைக் கொண்ட திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்களை தடுப்பு அலுவலக அதிகாரிகளுக்கு நடத்துவதும் அவசியமாகவுள்ளது.

3. அரசுக்குரிய வருமானச் சேகரிப்பினை உறுதிசெய்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களிலிருந்தான அரசிறையினை சேகரித்தல் சுங்கத்தின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாகும். நம்பிக்கை மிக்க வர்த்தகர்களுக்காக சுங்கத் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட நீண்டகால அடைவுடைய வர்த்தக வசதியேற்பாட்டு நடவடிக்கைகள், அரசிறையினைச் செலுத்தாது சுங்கத்தினூடாக தப்பித்துச் செல்லும் மோசடிச் செயற்பாடுகள் தொடர்பிலான தீர்வினை ஓரளவு வழங்கியுள்ளது. அனேக வர்த்தகர்கள் சட்டத்தை மதித்து இணக்கப்பாடுகளை தன்னார்வமாக விரும்புபவர்களாகவிருக்கும் அதேவேளை, தமது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சரியாக விபரிக்காத, குறை மதிப்பிடுகின்ற அல்லது வெளிப்படுத்துகை செய்யாத சில தீய சக்திகளும் உள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் போது தடுப்புப் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை விடயங்களின் விபரங்கள் பின்வருமாறு

கீழே குறிப்பிடப்பட்ட பணிப்பகத்தின் கிளை அலுவலகங்களில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் மாத்திரம் உள்ளடங்குகின்றன.

1. உ.த.அ - நீர்கொழும்பு
2. உ.த.அ - கொக்கலை
3. உ.த.அ - காங்கேசன்துறை
4. உ.த.அ - திருகோணமலை
5. உ.த.அ - சின்னப்பாடு
6. உ.த.அ - நய்க்கந்த
7. கடல் துறை
8. நுளைவாயில் அலுவலகம்
9. புலனாய்வுப் பிரிவு
10. பீ ï நிருவாகம்
11. பீ ï பரிசோதனை
12. பீ பிரிவு
13. ஓ பிரிவு

01. கண்டுபிடிப்புகள்

| | | |
|---|---|---|
| 1.1 | புதிய விடயங்கள் | |
| 1.1.1 | தோடங்கப்பட்ட விடயங்கள் / அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை | 356 |
| 1.1.2 | பிற முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் | 34 |
| 1.1.3 | பதிவு செய்யப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1 + 1.2) | 390 |
| 1.1.4 | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | |
| 1.1.4.1 | சுங்க குற்றமல்லாதவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் | 67 |
| 1.1.4.2 | பிற பிரிவுகளுக்கு / கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் | 6 |
| 1.1.4.3 | சாதாரன வாயில் ஊடாக செய்முறைப்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்ட விடயங்கள் | - |
| 1.1.4.4 | தடுத்து நிறுத்துவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட வினியோகம் | 1 |
| 1.1.4.5 | திறம்பட முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் | |
| 1.1.4.5.1 | அபராதங்கள் / பறிமுதல்கள் / மேலதிக பதிவு என்பவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் | 160 |
| 1.1.4.5.2 | மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (பெறுமதியிடல் தொடர்பில்) | 25 |
| 1.1.4.5.3 | மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (தடுப்பு தொடர்பில்) | 4 |
| (அ) | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1.4.1 தொடக்கம் 1.1.4.5.3) | 262 |
| 1.1.5 | முடிவுறுத்தப்படாத விடயங்கள் | |
| 1.1.5.1 | முடிவுறுத்தப்படாத சுங்க விசாரணைகள் தொடர்பிலான விடயங்கள் | 81 |
| 1.1.5.2 | முடிவுறுத்தப்படாத புலனாய்வு தொடர்பிலான விடயங்கள் | 22 |
| 1.1.5.3 | தணிப்பிற்காக முறையீடுகள் நிலுவையிலுள்ள விடயங்கள் | - |
| 1.1.5.4 | நடவடிக்கை பற்றிய அறிவித்தல்கள் சமா்ப்பிக்கப்பட்ட விடயங்கள் | |
| (ஆ) | முடிவுறுத்தப்படுவதற்கு நிலுவையிலுள்ள விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1.4.1 தொடக்கம் 1.1.4.5.3) | 104 |

02. அறவீடுகள் (ரூபாக்களில்)

| | | |
|---|---|---|
| 2.1 | பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி | 507,384,749.00 |
| 2.2 | ஆண்டின் ஆரம்பத்தில் அறவிடப்படவிருக்கும் அபராதங்கள்/ பறிமுதல்கள் | 137,240,062.00 |
| 2.3 | இவ்வாண்டுக் காலப்பகுதியில் விதிக்கப்பட்ட அபராதங்கள் / பறிமுதல்கள் | 314,960,112.14 |
| 2.4 | இவ்வாண்டுக் காலப்பகுதியில் அறவிடப்பட்ட அபராதங்கள் / பறிமுதல்கள் | 286,889,465.14 |
| 2.5 | ஆண்டின் இறுதியில் அறவிடப்படவிருக்கும் அபராதங்கள் / பறிமுதல்கள் | 211,202,938.00 |
| 2.6 | பெறுமதி மதிப்பீட்டு பிரிவில் மேலதிக பதிவுகளாக அறவிடப்பட்டவை | 59,624,959.00 |

**4.** நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சாா்ந்த நலன்களை பாதுகாத்தலும், மற்றும் தொடர்புபட்ட சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்தலும்.

தடுப்புப் பணிப்பகத்தினால் நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சாா்ந்த நலன்களை அதன் நடவடிக்கைகள் மூலமாக பாதுகாக்க முடிந்துள்ளது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் மேலாக, கீழே குறிப்பிடப்பட்டன போன்ற ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சட்டங்களுடன் இணங்கிச் செல்வதனையும் தடுப்புப் பணிப்பகத்தின் அலுவலா்கள் உறுதிசெய்கின்றனா் :

1. ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் சட்டம்
2. தாவர, விலங்கினச் சட்டம்
3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்
4. ஒப்பனைப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டம்
5. தொலைத் தொடர்பு ஒழுங்குவிதி ஆணைக்குழுச் சட்டம்
6. உணவு மற்றும் மருந்துகள் சட்டம்
7. வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
8. புலமைச் சொத்துரிமைச் சட்டம்

5. கொழும்பு துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், சுதந்திர வா்த்தக வலயங்கள் மற்றும் பண்டாரநாயக்கா சா்வதேச விமான நிலையம் ஆகிய தொடா்பான கண்காணிப்பு

கொழும்புத் துறைமுகம் தொடா்பிலான கண்காணிப்பினை இப்பணிப்பகத்தின், துறைமுக தடுப்பு அலுவலகம் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலகம் ஆகிய இரண்டு பிரிவுகளும் மேற்கொள்வதோடு, இவை முறையே துறைமுகப் பிரதேசம் மற்றும் கொச்சிக்கடைப் பிரதேசம் போன்றன தொடா்பிலான கண்காணிப்பிற்கு பொறுப்பாகவுள்ளன. கொழும்புத் துறைமுகத்தைப் பொறுத்தவரை, துறைமுகத் தடுப்பு அலுவலகத்திலுள்ள தரைமார்க்க கடமை அதிகாரியும் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலத்திலுள்ள கொச்சிக்கடை கடமை அதிகாரியும் தொடா்ச்சியான சேவையில் ஈடுபடுவதனால், இவ் அலுவலகங்கள் ஒருபோதும் மூடப்படுவதில்லை. இவ் அதிகாரிகள் மேற்படி பிரதேசங்கள் உரிய முறையில் ஆட்களைக் கொண்டு சிறப்பாக தொழிற்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் நுழைவாயில்களில் பாா்வையிடுகின்றனா்.

பண்டாரநாயக்கா சா்வதேச விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்கா சுதந்திர வா்த்தக வலயம் ஆகியன நய்க்கந்தவிலுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுவதோடு, பியகம உப-தடுப்பு அலுவகத்தினால் பியகம சுதந்திர வா்த்தக வலயம் கண்காணிக்கப்படுகிறது.

இருப்பினும், பல்லேகல, ஹொரண, மீரிகம போன்ற இடங்களிலுள்ள ஏற்றுமதிச் செயலாக்க வலயங்கள் தடுப்புப் பணிப்பகத்தின் கண்காணிப்பின் கீழ் இல்லை. எனினும், சுங்கம் தொடா்பான அம்சங்களை முன்னெடுப்பதற்கு மேற்படி வலயங்களில் உப-தடுப்பு அலுவகங்களைத் தாபித்தல் அல்லது ஏனைய உப-தடுப்பு அலுவலகங்களின் அதிகாரிகளை அங்கு ஈடுபடுத்துவது அவசியமாகும்.

அண்மையில் செயற்பட ஆரம்பிக்கப்பட்ட டிகோவிட்ட மீன்பிடித்துறைகத்திலான அலுவலக செயற்பாட்டினை தொடங்குவதற்கும் மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தவதற்குமான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய வசதிகள் வழங்கப்படவில்லை என்பதுடன் டிகோவிட்ட மீன்பிடித்துறைமுகத்திலான தடுப்பு அலுவலக செயற்பாடுள் இன்னமும் ஆரம்பிக்கப்படவுமில்லை.

6. கப்பல்களின் நகர்வுகள் மற்றும் எல்லைப்புறச் செயற்பாடுகள் தொடா்பான கட்டுப்பாட்டு நடவடிக்கை

நான்கு பிரதான துறைமுகங்களிலும் (அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட) கப்பல்களின் இயக்கத்தைக் கண்காணிப்பதும் தடுப்புப் பணிப்பகத்தின் பொறுப்புக்களில் ஒன்றாகும். கொழும்புத் துறைமுகத்தில் இந்நடவடிக்கையானது துறைமுகத் தடுப்பு அலுவகத்தினால் கண்காணிக்கப்பட்டு வரும் அதேவேளை, காலி, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் இந்நடவடிக்கைகள் அந்தந்த துறைமுகத்தில் தாபிக்கப்பட்டுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

துறைமுகத் தடுப்பு அலுவலகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள துறைமுக கடமை அதிகாரி கப்பல்களின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக 24 மணி நேர தொடா்ச்சியான சேவையிலுள்ளாா். இவா் கொழும்புத் துறைமுகத்தில் அழைப்பிலுள்ள கப்பல்களைப் பெறுவதோடு, இவை கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைவதற்கான ftஇறுதியான துறைமுக அழைப்பும் இலிருந்தான அனுமதியைப் பெற்றுள்ளமையையும் உறுதிப்படுத்துவாா். மேலும், ஐ.எம்.ஓ. விமானப் பணியாளா்களின் வெளிப்படுத்தல்களையும் பரிசோதிப்பா். கொழும்பு துறைமுகத்தின் அழைப்பிலுள்ள ஒவ்வொரு கப்பலும் தொடா்பிலும் உள்வரும் சரக்குகள் பற்றிய வெளிப்படுத்துகை, கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை மற்றும் மாற்றியேற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை என்பன தொடா்பான விரபங்களை சமா்ப்பித்து அவற்றை வெளிப்படுத்துகை செய்வது உள்நாட்டுக் கப்பல் முகவரின் பொறுப்பாகவுள்ளது.

புறப்பட்டுச் செல்கின்ற ஒவ்வொரு கப்பலுக்கும் துறைமுக தீா்வை அதிகாரியால் ftவெளிச்செல்வதற்கான வெளிப்படுத்துகைð வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளும் பூா்த்திசெய்யப்பட்டிருப்பதனை அந்தந்த கப்பலின் மாலுமிக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற கப்பலின் உள்நாட்டு முகவரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இது வழங்கப்படுகிறது.

தற்போதுள்ளவாறு, கப்பல் முகவா்கள் ஏற்றுமதிச் சரக்குகளின் வெளிப்படுத்துகை பற்றிய விபரங்களை தடுப்பு அலுவலகத்திற்கு சமா்ப்பிப்பதில்லை. எனவே, வெளிச்செல்லத் தயாராகவுள்ள கப்பலிலுள்ள ஏற்றுமதிச் சரக்குகள் பற்றிய விபரங்கள் தொடா்பில் வெளிச்செல்லல் அனுமதியை வழங்குகின்ற அதிகாரி அறிந்திருக்கமாட்டாா்.

7. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்

மத்திய பொருள் அகற்றுகைப் பிரிவானது திணைக்களத்தின் பல்வேறு அனைத்து பணிப்பகங்கள் மற்றும் பிரிவுகளினாலும் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுத்தீர்ப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலமிடல் மூலம் விற்றுத் தீர்ப்பதற்கான அதிகாரத்தை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்குவதோடு, அத்தகைய ஏலமிடலின் போது நிதிசாா் ஒழுங்குவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட வினைமனு விற்பனை நடைமுறை பின்பற்றப்படுகின்றன.

# சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

அறிமுகம்

சமூகப் பாதுகாப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சுங்கத்தின் பல்வேறு பணிப்பகங்களிலும் இயங்கிவந்த சம்பந்தப்பட்ட பிரிவுகளை இதனுடன் ஒருங்கிணைத்துத் தனியானதொரு பணிப்பகம் தாபிக்கப்பட்டது. குறிப்பாக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு, நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு, மற்றும் உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு ஆகியன சுங்கச்சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களை கண்டிப்பாக அமுல்படுத்துவத்தும் பிரிவுகளென இனங்காணப்பட்டுள்ளன.

பிரதான தொழிற்பாடுகள்

இப்பணிப்பகத்தின் தொழிற்பாடுகள், சுங்க நிலையங்களில் இடம்பெறுகின்ற வர்த்தகர்களுக்கு வசதியளிக்கும் வகையிலான சம்பந்தப்பட்ட சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அரசுக்குரிய வருமானத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை, போதைப்பொருள், உள நிலைமாற்ற மருந்துப்பொருட்களைக் கடத்திச் செல்வதை தடுத்தல்/ இடைமறித்தல், மற்றும் சுற்றாடல், உயிர்ப்பல்வகைமை, கலாசாரம், தேசிய மரபுரிமைகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றையும் பாதுகாத்தல்.

## போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, சமூக-பொருளாதார, சுற்றாடல் மற்றும் கலாச்சார நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளை, சுங்கச் சட்டங்களையும் மற்றும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள், அன்பளிப்புப் பொதியுடைய அஞ்சல்கள், கூரியர் சேவைகள், பயணிகள் மற்றும் பயணிகள் பொதிகள் போன்றனவற்றுடன் போதைப்பொருட்கள் மற்றும் உள நிலைமாற்ற மருந்துகளைக் கடத்துவதைத் தடுப்பதுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களையும் அமுல்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டதாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. விமானநிலையத்தில் 24 மணிநேர கண்காணிப்பு
2. விமானம் மூலமான சரக்குகள், கப்பல் சரக்குகள், தபால் மற்றும் கூரியர் பொருட்கள் தொடர்பில் எழுமாறான கண்காணிப்பு
3. ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இடம்பெறக்கூடிய இறக்குமி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களோடு போதைப் பொருட்கள் மற்றும் உள நிலைமாற்றி மருந்துகள் ஆகியவற்றின் கடத்தல்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்தல்.
4. நம்பத்தகு தகவல்கள் குறித்தான புலன்விசாரணைகளை மேற்கொள்ளல்.
5. விழிப்பூட்டல் மற்றும் திறன் கட்டியெழுப்புகை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
6. முன்னோடி இரசாயனப் பொருள் இறக்குமதிகள், கப்பல் மாற்றி ஏற்றுகைகள், ஏற்றுமதிகள் போன்றன தொடர்பில் விழிப்புடன் செயற்படல்.
7. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

செயலாற்றுகை பற்றி ஒரே பார்வையில்

போதைப்பொருள் கட்டுப்பாட்டு அலகில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற அதிகாரிகள் பல்வேறு நுழைவு மையங்களிலும் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்து நிறுத்தியதன் மூலம் இலங்கைச் சுங்கத்திற்கான மற்றுமொரு வெற்றிகரமான ஆண்டினைப் பதிவுசெய்துள்ளனர். விமானநிலையம், கப்பல் துறைமுகம், மத்திய அஞ்சல் பரிவர்த்தனை மற்றும் கூரியர் நிலையங்களில் இது பற்றிய 36 விடயங்கள் அறிவிக்கப்பட்டன.







மேற்படி 36 விடயங்களிலும், விமானப் பயணிகள் தொடர்பிலான 09 விடயங்கள் விமானநிலையத்தில் வைத்து கண்டறியப்பட்டன. மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் 24 பறிமுதல்கள் தொடர்பில் அறிக்கை செய்யப்பட்டன. இது போதைப்பொருள் பறிமுதல் தொடர்பில் சுங்கத்தின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இது குறித்தான போக்கானது போதைப் பொருட்களின் பகுதியளவு உருவாக்கத்திலிருந்து முழு உருவாக்கத்திற்கு மாறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.



| பிரதான செயற்பாடு 1 : இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினை வடிவமைத்தல் - போதைப்பொருள் கடத்தல்கள் அல்லது இடர்களைக் கொண்ட அனுப்பு சரக்குகள் குறித்தான பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் தேவையான தகவல்களை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு அலகிற்கு வழங்கக் கூடிய நடைமுறைகள் மற்றும் வழக்கங்களை முகாமை செய்யும் ஒரு முறையான பிரயோகம். | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. குறித்த சூழ்லைத் தாபித்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 2. இடர்களை மதிப்பீடு செய்தல்<br>அ. இடர்களை அடையாளம் காணல்<br>ஆ. இடர்களை பகுப்பாய்வு செய்தல்<br>இ. இடர்களை மதிப்பாய்வு செய்து முன்னுரிமையளித்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 3. இடர்களைக் கையாளுதல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 4. இணக்கப்பாட்டு நடவடிக்கையை கண்காணித்து மீளமைத்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| தொடர்பாடல் மற்றும் ஆலோசனை செய்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |

| பிரதான செயற்பாடு 2 : தேவை தணிப்பு உபாய முறைகளை அமுல்படுத்தல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. எல்லைப் புறப் பிரதேசங்களில் கண்காணிப்பு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் பாரிய இடருடைய நாடுகளாக இனங்காணப்பட்ட குறித்த நாடுகளின் தேசிய முகவர்களுடனான ஒத்துழைப்பினை விருத்தி செய்தல். | ஆண்டு முழுவதும் | அத்தகைய நாடுகளுடன் தொடர்பாடல் ஆரம்பிக்கப்பட்டது |
| 2. போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட புலனாய்வுகளை பகிர்வதற்காக சர்வதேச முகவர்களுடன் கூட்டிணைப்பினை விருத்தி செய்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |
| 3. சட்டவிரோதமான போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய இலக்கு குழுக்களுக்கு அறிவூட்டுதல் | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |

| பிரதான செயற்பாடு 3 : விநியோகக் குறைப்பு உபாய முறைகளை அமுல்படுத்தல் - பறிமுதல் நுட்பங்கள் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. விமானநிலையங்களில் (பண்டாரநாயக்கா மற்றும் மத்தளை) கண்காணிப்புக் கடமைகளை மேற்கொள்ளல். | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |
| 2. துறைமுகங்களில் (கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை) கண்காணிப்புக் கடமைகளை மேற்கொள்ளல். | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |
| 3. இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கண்காணிப்புக் கடமைகளை மேற்கொள்ளல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 4. இடர் குறித்தான நாடுகளிலிருந்தான சரக்குகளை பரிசோதனை செய்தல் (விமானச் சரக்கு முனையம், யூ.பி.பீ. களஞ்சியங்கள்) | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |
| 5. இடர் குறித்தான நாடுகளிலிருந்து வருகின்ற பொதிகள் மற்றும் ஏனைய தபால் மூலமான பொரருட்களைப் பரிசோதனை செய்தல் (அஞ்சல் பொதி பரிசோதனை அலகு, கூரிய முகவர் பரிசோதனை) | ஆண்டு முழுவதும் | நிறைவுபெற்றது |
| 6. இடர் குறித்தான நாடுகளிலிருந்து வருகின்ற கொள்கலன்களைப் பரிசோதனை செய்தல் - துறைமுகக் கட்டுப்பாட்டு அலகு, ம.பு.பணிப்பகம், ம.வி.பணிப்பகம், எச்.ஆர்.சி. போன்ற அலகுகளின் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களுடன் மேற்கொள்ளல். | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |

| பிரதான செயற்பாடு 4 : போதைப்பொருளுக்கான கேள்வி மற்றும் போதைப்பொருள் விநியோகம் என்பவற்றினை குறைக்கும் நோக்கில் பொது மக்களுக்கும் மற்றும் சுங்க பதவியணியினர் அல்லாதவர்களுக்கும் அறிவூட்டல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. சட்டவிரோத போதைப்பொருள்கடத்தல் குறித்தான கடுமையான சட்டரீதியான தாக்கங்கள் மற்றும் தவறான போதைப் பொருளினது விளைவுகள் குறித்து இலக்கு குழுக்களுக்கு அறிவூட்டல் திட்டங்களை வடிவமைத்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| அ. பொது மக்களுக்கும் மற்றும் சுங்கப் பதவியணியினர் அல்லாதவர்களுக்கும் அறிவூட்டும் வகையில் உலகளாவிய நிகழ்ச்சித்திட்டங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுட்டிக்காட்டப்பட் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுதத்தல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 2. சுங்க பதவியணியினர்களுக்கு பயிற்சிகளை ஏற்பாடு செய்து வழங்குதலும் | ஆண்டு முழுவதும் | |
| அ. இயற்கை, அரைப்பகுதி செயற்கை மற்றும் செயற்கை மருந்துகள் போன்றவற்றினை அடையாளங்காணல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளன. |
| ஆ. பிரதான கள்ளக்கடத்தல் வழிகளை புரிந்து கொள்ளல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| இ. போதைப்பொருளை மறைத்து வைத்தல் முறை பற்றி கற்றறிந்துகொள்ளல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| ஈ. போதைப்பொருள் சோதனையிடல் குறித்தான பல்வேறு முறைகள் பற்றி கற்றறிந்துகொள்ளல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| உ. எக்ஸ் கதிர் மற்றும் சீ.ரீ ஸ்கேனர்களது உரிய பாவனை | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| ஊ. பணியாளர் தேடல் நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களிலான பயிற்சியளிப்பு | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 3. முனைப்பானதொரு பிரிவுக்கு விருத்தி செய்வதில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவுக்கு பயிற்சி லழங்குதல். | ஆண்டு முழுவதும் | |
| அ. துப்பாக்கி பயிற்சியினை வழங்குதல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| ஆ. தகவலாளர்களை விருத்தி செய்வதற்கான நுட்பங்கள் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |

| பிரதாக செயற்பாடு 5 : போதைப்பொருள் கடத்தலின் அச்சுறுத்தலுக்கு எதிரான புதிய தொழில் நுட்பங்களையும் நடைமுறைகளையும் விருத்தி செய்தல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் பற்றிய பாதுகாப்பிற்கு சீ.சீ.ரீ.வீ கண்காணிப்பு வசதியினை வழங்குதல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 2. அதிகாரிகளை சிவில் உடையுடன் கடமையில் ஈடுபடுத்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 3. ஒரேவகையான குறிக்கோள்களைக் கொண்ட நிறுவுனங்களுடன் தொடர்பாடல் வலைப்பின்னல் ஒன்றினை விருத்தி செய்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 4.முன்கூட்டிய பயணி தகவல் முறைமையொன்றினை விருத்தி செய்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 5.பயணிகளது பெயர் பதிவேட்டு முறைமையொன்றினைத் தாபித்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |

| பிரதான செயற்பாடு 6 : நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டணைச் சட்டத்துக்கான திருத்தங்கள் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. NDDCB இற்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படல் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |

| பிரதான செயற்பாடு 7 : ஒரேவகையான குறிக்கோள்களைக் கொண்ட நிறுவனத்துடன் தொடர்பாடல் மற்றும் கூட்டுறவினை விருத்தி செய்தல். அதத்கைய நிறுவனங்களுடன் சிறந்த உறவினை பேணல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. புலனாய்வுகளை பகிா்ந்துகொள்ளல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |
| 2. சட்டரீதியான தடைகளை குறைப்பதற்கான படிமுறைகள் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்றுவருகிறது |
| 3. நடைமுறை சாா்ந்த தடைகளை குறைப்பதற்கான படிமுறைகள் | ஆண்டு முழுவதும் | இடம்பெற்று வருகிறது |
| 4. இணைந்த செயற்பாடுகளை முன்னெடுத்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |

| பிரதான செயற்பாடு 8 : பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உடல் ஸ்கேனிங் செயற்பாட்டினை ஆரம்பித்தல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. உடல் ஸ்கெனிங் செயற்பாட்டுக்கான அங்கீகாரத்தினை பெறல் (உரிய திணைக்களக் கட்டளைகளை வரைவுசெய்தல் மற்றும் சீ.ஒ க்கான திருத்தங்களை வரைவுசெய்தல்) | 1ஆம் காலாண்டிலிருந்து 2ஆம் காலாண்டு இறுதி வரை | இடம்பெற்று வருகிறது |
| 2. உடல் ஸ்கேனிங் செயற்பாடுகளை தொடங்குதல் | 3ஆம் காலாண்டிலிருந்து ஆண்டின் இறுதி வரை | இடம்பெற்று வருகிறது |

| பிரதான செயற்பாடு 9 : போதைப்பொருளுக்கான மோப்ப நாய்ப் பிரிவினை அமுல்படுத்தல் | | |
|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | உரிய இலக்கு | நிறைவுத்தன்மை |
| 1. குறித்த அதிகாரசபையிடமிருந்து மோப்ப நாய்ப் பிரிவொன்றை நிறுவுவதற்கான அங்கீகாரத்தினை பெறல் | 1ஆம் காலாண்டு | நிறைவடைந்துள்ளது |
| 2.தேவையான உட்கட்டமைப்பினை பெறல் | 1ஆம் காலாண்டிலிருந்து 2ஆம் காலாண்டு இறுதி வரை | நிறைவடைந்துள்ளது |
| 3.தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தினை பெறல் | 1ஆம் காலாண்டிலிருந்து 3ஆம் காலாண்டு இறுதி வரை | நிறைவடைந்துள்ளது |
| 4. சட்ட பின்னணியை தயாரித்தல் (தேவையானவிடத்து திணைக்களக் கட்டளை) | 1ஆம் காலாண்டிலிருந்து 3ஆம் காலாண்டு இறுதி வரை | நிறைவடைந்துள்ளது |
| 5. மோப்ப நாய்ப் பிரிவினை அமுல்படுத்தல் | ஆண்டு முழுவதும் | நிறைவடைந்துள்ளது |

உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

உயிர்ப் பல்வகைமை குறித்தான பாதுகாப்பு பிரிவு

சமூகத்தையும் அதன் மரபுரிமைகளையும் பாதுகாத்துப் பேணுவதும் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் இலக்குகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இச்செயற்பாட்டின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பானது இன்றியமையாததொரு அம்சமாகும். இம் முயற்சியில் அனேக சர்வதேச மற்றும் உள்நாட்டு முகவரகங்கள் ஈடுபடுத்தப்படுவதோடு அவை இலங்கைச் சுங்கத்துடன் சிறந்த தொடர்பினையும் கொண்டுள்ளன. இலங்கைச் சுங்கமானது ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளில் பல்வகைமை தொடர்பிலான பல்வேறு சட்டங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு தீவாக விளங்குகின்ற இலங்கையானது தாவரம் மற்றும் விலங்கினப் பல்வகைமைகளைப் பெருமளவில் கொண்டும் திகழ்வதோடு,ீமிகச்சிறந்த பல்வகைமை நிலையம்ஃ எனும் அந்தஸ்த்தைப் பெற்ற எட்டு பிராந்தியங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. இதனால், தாவர மற்றும் விலங்கின வேட்டைக்காரா்களைக் கவரும் வகையில் எமது நாட்டின் தாவர மற்றும் விலங்குகளின் இனப்பரம்பல்களுக்கானதொரு மிகப்பெரிய கேள்வியினை சா்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்குரிய அத்தகைய இனங்கள் தொடா்பிலான தனிச்சிறப்பம்சங்கள், அரிதான இனங்கள், அலங்காரப் பெறுமானம், அமைப்பு மற்றும் தரப் பண்பு போன்றனவும் கூட இத்தகையதொரு பெருமைக்கு மெருகூட்டியுள்ளன. அதேவேளை, கடத்தல் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழில்நுட்பம்

மற்றும் அதிநவீன முறைகள் போன்றன, உயிர்ப் பல்வகைமை தொடர்பில் கண்காணிப்பதிலும் சட்டங்களைப் பிரயோகிப்பதிலும் இலங்கைச் சுங்கத்திற்கு பாரிய சவாலாக விளங்குகின்றன.

இத்தகைய இலக்கினை அடைவதற்கான தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டே ஒரு உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் பிரகாரம் இதுவே உலகின் முதலானஉயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவுஎன அறியப்படுகிறது.

கலாசார மற்றும் தேசிய மரபுரிமை குறித்தான பாதுகாப்பு பிரிவு

இலங்கை நாடானது, வரலாற்று ஏடுகளின் பிரகாரம் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பிருந்தே தனது கலாசார மற்றும் மரபுரிமை அம்சங்களை மரபு வழியில் கொண்டுவந்துள்ளது. இருப்பினும் கிடைக்கத்தகு சான்றுகளின் பிரகாரம்,இம்மரபுரிமை அம்சங்கள் வரலாற்றுக்கு முந்திய மற்றுமொரு இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக் முன்னராகவுள்ளன எனவும் மேலும் அது நூறு ஆயிரம் ஆண்டுகள் வரை தொடர்வதாகவும் அறியப்படுகின்றது.

நாட்டின் பெறுமதி மிக்க கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதும் அவற்றை சட்ட விரோதமாக கடத்திச் செல்வதைத் தடுப்பதும் சுங்கத் திணைக்களத்தின் இலக்குகளில் ஒன்றாக விளங்குகின்றது.

சுங்கத்தின் மறுசீரமைப்புச் செயற்பாட்டுக் காலப்பகுதியின் போது,உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்பு எனும் கிளையானது 2010 இல் உருவாக்கப்பட்டு அது சமூக பாதுகாப்புப் பணிப்பகத்தில் பேணப்பட்டது. இருப்பினும், கலாசார மற்றும் தேசிய மரபுரிமைச் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் நோக்கில் உயிர்ப் பல்வகைமைப் பிரிவின் நோக்கெல்லையானது மேம்படுத்தப்பட்டது.

## உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

தொலைநோக்கு

உயிர்ப் பல்வகைமை மற்றும் கலாசார மரபுரிமை சார்ந்த விடயங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் தொடர்பில் தென்னாசியப் பிராந்தியத்திலேயே மிகச்சிறந்ததொரு சுங்கத் திணைக்களமாக மிளிர்தல்.

பணி நோக்கு

உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான சம்பந்தப்பட்ட சட்டத்தை அமுல்படுத்துவதோடு, வர்த்தக இலவாக்கத்தை மேற்கொள்கின்ற அதேவேளை, அரசிறையினையும் உறுதிப்படுத்தல்.

பிரதான தொழிற்பாடுகள்

01. உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட தயாரிப்புகளை எடுத்துச்செல்லுவதுடன் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
02. சகல உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகளின் விபரம்,வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி மதிப்பிடல் தொடர்பில் பரிசோதித்தல்.
03. உயிர் பல்வகைமையுடன் தொடர்புபட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை, தாவர விலங்கின மற்றும் தொடர்புபட்ட தயாரிப்புகளது இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போதான தேவைப்பாட்டு அனுமதிப்பத்திரத்துடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்.
04. நாட்டினது உயிரியல் மரபுரிமைக்கு தீங்கு விளைவிக்காத விதத்திலான தாவர,விலங்கினக்கூறுகளின் சட்டரீதியான இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஊடாக நாட்டினதுஅபிவிருத்தித்திட்டங்களை ஊக்குவித்தல்.

குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள்

உயிருள்ள ஊர்வனவற்றினைக் கண்டறிதல்

2018 ஜூன் 14ஆந் திகதி 32 எண்ணிக்கைகளையுடைய பல்லியினங்களை அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு சிங்கப்பூர் ஊடாக கூரியர் பொதி மூலம் கடத்துவதற்கு முற்பட்டவேளை கண்டுபிடிக்கப்பட்டன. இக் கூரியர் பொதியானது பாவித்த கணினி என பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில், கட்டுநாயக விமானச் சரக்கு டீ.எச்.எல் பிரிவிலுள்ள சுங்க மதிப்பீட்டாளர்களினால் பரிசோதிக்கப்பட்டபோது இப்பொதியினுள் கணனியின் மத்திய செய்முறை அலகு ஒன்று (CPU) கண்டபிடிக்கப்பட்டுடன் அதனுள் முப்பத்திரெண்டு எண்ணிக்கைகளையுடைய பல்லி இனங்கள்,சுங்க அதிகாரிகளை ஏமாற்றும் வகையில், துணிகளால் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன. மூல நாட்டிலிருந்து மிருகங்களுக்கு தேவையான எந்தவொரு அனுமதிப்பத்திரம் மற்றும் சுகாதார சான்றிதழ்கள் எதுவும் இதற்காக இருக்கவில்லை. எனினும், இது தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தினை (அத்தியாயம்235) மீறும் ஒரு செயலாகும்.
விலங்கு பாதுகாப்பு மற்றும் சுகாதார திணைக்களத்தின் விலங்கு தொற்றுநோய் தடுப்பு சேவைகள், அவற்றின் சாத்திமான பரவுகை போன்ற தீங்கு விளைவிக்கத்தகு விடயங்களைக் கருத்திற்கொண்டு குறித்த 32 எண்ணிக்கைகளையுடைய பல்லிகளையும் திரும்பவும் அவுஸ்திரேலியாவிற்கு மீள்-ஏற்றுமதி செய்வதற்கு சிபாரிசு செய்தது. அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு,குறித்த 32 எண்ணிக்கைகளையுடைய பல்லிகளையும் திரும்பவும் அவுஸ்திரேலியாவிற்கு மீள்-ஏற்றுமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம்,ஆறு நாட்களின் பின்னர் குறித்த 32 எண்ணிக்கைகளையுடைய பல்லிகளும் இலங்கையிலிருந்து அவை வருவிக்கப்பட்ட நாட்டுக்குஇலங்கையிலிருந்து மீள் ஏற்றுமதி செய்யப்பட்டன.



பெறுமதிமிக்க உள்ளூர் மரம் - வள்ளப்பட்டை *(கிரினோப்ஸ் வல்ல)*கண்டுபிடிப்புகள்

2018 ஏப்ரல் 14 ஆந் திகதி இலங்கையைச் சேர்ந்த நான்கு நபர்கள்,119கி.கி நிறையுடைய வள்ளப்பட்டை சீவல்களை *(கிரினோப்ஸ் வல்ல)* துபாய்க்கு கடத்திச் செல்ல முற்பட்டவேளை பண்டாநாயக சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் புறப்படும் முனையத்தில் வைத்து அவை கண்டுபிடிக்கப்பட்டன. இவ் எண்ணிக்கை வரலாற்றிலே அதிகூடிய தொகைகளாகும். சுருக்கமாகக் கூறுவதாயின், 2018 ஆம் ஆணடில்,539.13 கி.கி வள்ளப்பட்டை சீவல்கள் மற்றும் இரு தடவை வள்ளப்பட்டை எண்ணெய்யினை ஏற்றுமதி செய்யமுற்பட்ட வேளை பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவை துபாய், இந்தியா மற்றும் பஹ்ரேய்ன் போன்ற நாடுகளுக்கு கடத்திச்செல்ல திட்டமிடப்பட்டவையாகும்.
வள்ளப்பட்டை சீவல்கள் மற்றும் அதிலிருந்து பெறப்பட்ட எண்ணெய் என்பன நறுமணம் மற்றும் ஊதுபத்தி தயாரிப்பத் தொழிலில் மூலப்பொருளாக சர்வதேச சந்தையில் பாவிக்கப்படகிறன. இத்தகைய தயாரிப்புகள் சர்வதேச சந்தையில் மிகவும் கூடதலான கிராக்கியாகவும் உள்ளன. ஆகவே, கடத்தல்காரர்கள் இலங்கையின் இயற்கைக் காட்டிலிருந்து சட்டவிரோதமாக அவற்றினை சேகரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து அதி கூடிய பணத்தினை சம்பாதிக்கின்றனர். இச் செயற்பாடானது இலங்கையின் இயற்கை காடுகளின் வளர்ச்சிக்கு மிகவும் கெடுதி விளைவிக்கக்கூயதாகும்.

வள்ளப்பட்டையானது ஒரு காட்டுத் தாவரமாகக் கருதப்படினும், அவற்றினை ஏற்றுமதி செய்தலானது தடைசெய்யப்பட்டுள்ளது. செல்லுபடியானதொரு வன அனுமதிப்பத்திரமின்றி அவற்றினை ஏற்றுமதி செய்தலானது வன பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தினை (அத்தியாயம்235) மீறும் ஒரு செயலாகும்.



பெங்காலின் வகை எறும்புண்ணியின் செதில்கள் கண்டுபிடிப்பு (***Manis crassicaudata***)

2018 ஜுலை 20ஆந் திகதி சீன நாட்டைச் சேர்ந்த நபரொருவர் 1.70கி.கி நிறையுடைய பெங்காலின் செதில்களை சீனாவுக்கு கடத்திச் செல்ல முற்பட்டவேளை பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் புறப்பாட்டு முனையத்தில் வைத்து அவை கண்டுபிடிக்கப்பட்டன.

உலகில் மிகவும் கடத்தப்படுகின்ற விலங்காக பெங்காலின்கள் அடையாளங் காணப்படுகின்றன;எனினும், சகல பெங்காலின் இனங்களினதும் சர்வதேச ரீதியான வர்த்தகமானது CITES பேரவையின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த விலங்குகள் பாரம்பரிய சீன மருத்துவத்திற்கும் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பதற்கும் வேட்டையாடப்படுகின்றன. பெங்கலின் செதில்கள் இலங்கையிலிருந்து, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக,பெங்காலின் (*Manis crassicaudata*) செதில்களை ஏற்றுமதி செய்வதானது,தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (235ஆம் அத்தியாயம்) கீழ் ஒரு மீறுகையாகும்.



உயிர்வாழ் மீன் இனங்களது கண்டுபிடிப்பு

2018 செப்டம்பர் 13ஆம் திகதி சிங்கப்பூரிலிந்து வந்திறங்கிய இலங்கையர் ஒருவர் 10 எரோவனா இன மீன்களையும் 14 கொயி கப் இன மீன்களையும் உரிய இறக்குமதி அனுமதிப்பத்திரம் மற்றும் சுகாதார சான்றிதழ்களின்றி நாட்டுக்குள் கடத்துவதற்கு முற்பட்டதற்காக கைது செய்யப்பட்டார். இவை ரூபா 320,000 பெறுமதிக்கவையாகும். இவை மூல நாட்டிற்கு திரும்பி மீள்-ஏற்றுமதி செய்யப்பட்டன.

2018 செப்டம்பர் 15ஆந் திகதி 4435 எண்ணிக்கைகளையுடைய பிரகடனப்படுத்தப்படாத உயிர் வாழ் மீன் இறக்குமதியானது கட்டுநாயக விமானச் சரக்கு இறக்குமதி முனையத்தில் வைத்துக் கண்டபிடிக்கப்பட்டன. இதன் பெறுமதி ரூபா. 155,000/- ஆகும். இறக்குமதியாளர் தொடர்பில் அபராதமொன்று விதிக்கப்பட்டதுடன் பொருள் விடுவிக்கப்பட்டது.



கொதல ஹிம்புட்டு *(சலாசியா றெரிகியுலாட்டா)* கண்டுபிடிப்பு

2018 ஆண்டில், சீன நாட்டவர் ஒருவரால் 99 எண்ணிக்கைகளையுடைய *Salacia reticulata* குவளைகளை சீனாவிற்கு கடத்த முற்பட்டவேளை பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் புறப்பாட்டு முனையத்தில் வைத்து அவை பறிமுதல் செய்யப்பட்டன.

சீன நாட்டவர்களால் 2018.06.16ஆந் திகதி 3.2கி.கி, 2018.07.02ஆந் திகதி 7.4கி.கி, 2018.08.15ஆந் திகதி 2கி.கி மற்றும் 2018.09.07ஆந் திகதி 5கி.கி நிறைகளையுடைய *Salacia reticulata* சீவல்களை சீனாவிற்கு கடத்த முற்பட்டவேளை பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் புறப்பாட்டு முனையத்தில் வைத்து அவை பறிமுதல் செய்யப்பட்டன.

*சலாசியா றெரிகியுலாட்டா* (கொதல ஹிம்புட்டு) ஆனது இலங்கையின் ஒரு சுதேச தாவரமாகுமென்பதோடு, நீரிழிவு நோய்,ஈரல் அழற்சி மற்றும் செரிமானம் போன்ற நோய்களைக் குணப்படுத்தக்கூடிய உயர் மருத்துவக் குணமுடைய தாவரமாகும். இந்தத் தாவரம் தொடர்பில் சுமார் 150 காப்புரிமை காணப்படுவதோடு, மேலும் காப்புரிமை விண்ணப்பங்களும் நிலுவையிலுள்ளன. இவற்றில் பெருமளவு ஜப்பானியரால் பெறப்படுகின்றன.ஜப்பான் இத்தாவரத்தினைப் பயன்படுத்தி மருந்துகள் தயாரிப்பதில் முன்னணி நாடாகவிளங்குகின்றது. சர்வதேச வியாபாரத்தில் இதற்கான கேள்வி அதிகரித்து வருவதன் காரணமாக, இதனை கடத்துவதற்கே பல்வேறு முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. *சலாசியா றெரிகியுலாட்டா* ஒரு வனவாழ் தாவரமாகக் கருதப்படுவதோடு, தாவர மற்றும் விலங்கின காப்புச் சட்டத்தின் கீழ் அவை பாதுகாக்கப்பட்டுள்ளன.

*சலாசியா றெரிகியுலாட்டா* இனத்தின் ஏந்தவவொரு தயாரிப்புகளையும் ஏற்றுமதி செய்தலானது தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் மற்றும் வன சீவராசிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றுடன் வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (235ஆம் அத்தியாயம்) கீழ் ஒரு மீறுகையாகும்.



உயிர்வாழ் பறவைகள் கண்டுபிடிப்பு

2018 நவம்பர் 17ஆந் திகதி, செல்லுபடியான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சுகாதார சான்றிதழ்கள் இன்றி, 28 உயிர் பறவைகளை சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்குள் கடத்திவர முற்பட்டவேளை பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளினால் அவை கண்டுபிடிக்கப்பட்டன. கடத்தல்காரருக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன் உயிருள்ள பறவைகள் சிங்கப்பூருக்கு மீள்-ஏற்றுமதி செய்யப்பட்டன.

இது தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தினை (235ஆம் அத்தியாயம்) மீறுகினறதொரு செயலாகும்.



இவ்வாண்டுக்காலப்பகுதியில் உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகள்

| # | திகதி | விபரம் | பெறுமதி (ருபா) | விடய இல | விடயத்தின் நிலைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2018-01-01 | வள்ளப்பட்டை சீவல்கள் - 24.7 கி.கி | 2,140,000.00 | ENSP/BPU/01/2018 (BIA/D/CASE/04/2018) | விசாரணைகளின் பின்னர் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ரூபா 100,000/- அபராதமாக விதிக்கப்பட்டதுடன் அது விற்கப்பட்டது. |
| 2 | 2018-01-02 | சந்தனக் கட்டைத் தூள் - 5 கி.கி | | ENSP/BPU/02/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் 2017.04.04. ஆந்திகதி ஆயுர்வேத திணைக்களத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. |
| 3 | 2018-01-02 | உலர்ந்த கடல் வெள்ளரி ï 1 கி.கி | 5,000.00 | ENSP/BPU/03/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 4 | 2018-01-06 | கிரனைட் தொகுதிகள் - 75 மெ.தொண் | 1,274,023.00 | ENSP/BPU/04/2018 | அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டதுடன் பொருட்கள் விடுவிக்கப்பட்டன. |
| 5 | 2018-01-30 | கொள்கலன் பரிசோதனை (எல்.சீ.எல்) | 6,975,102.04 | ENSP/BPU/05/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் பறிமுதல் தொகையாக ரூபா 5,000,000/- அறவிடப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டது. |
| 6 | 2018-02-03 | சிவப்பு உலர் மிளகாய் (கொள்கலன் பரிசோதனை) | 2,306,288.00 | ENSP/BPU/06/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 7 | 2018-01-11 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 02 எண்ணிக்கை | | ENSP/BPU/07/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 8 | 2018-01-18 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 06 எண்ணிக்கை, கொதல ஹிம்புட்டு சீசவல்கள் - 4.5 கி.கி | | ENSP/BPU/08/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 9 | 2018-02-02 | உலர்ந்த பழத்துண்டுகள் - 8.6 கி.கி | | ENSP/BPU/09/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 10 | 2018-02-05 | கொதல ஹிம்புட்டு | 30,000.00 | ENSP/BPU/10/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | குவளைகள் ï 03 எண்ணிக்கை | | | |
| 11 | 2018-02-07 | கொதல ஹிம்புட்டு குவளை ï 01 எண்ணிக்கை | | ENSP/BPU/11/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 12 | 2018-02-07 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 02 எண்ணிக்கை | | ENSP/BPU/12/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 13 | 2018-02-09 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 07 எண்ணிக்கை, மயில் இறகுகள் - 2 கட்டுகள், கழுகு இறகுகள் | | ENSP/BPU/13/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 14 | 2018-02-10 | உலர்ந்த கடல் வெள்ளரி ï 1.5 கி.கி | 15,000.00 | ENSP/BPU/14/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 15 | 2018-02-21 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 08 எண்ணிக்கை | | ENSP/BPU/15/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 16 | 2018-02-27 | மயில் இறகுகளின் தொகுப்பு | | ENSP/BPU/16/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 17 | 2018-03-04 | உறைந்த கடல் வெள்ளரி ï 4.6 கி.கி | | ENSP/BPU/17/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 18 | 2018-03-05 | வள்ளப்பட்டை சீவல்கள் - 116.3 கி.கி | 1,764,000.00 | ENSP/BPU/18/2018 | சந்தேக நபர்கள் அபராதத்தினை செலுத்துவதற்கு தவறியதுடன் அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். |
| 19 | 2018-03-09 | கொதல ஹிம்புட்டு குவளை ï 01 எண்ணிக்கை | | ENSP/BPU/19/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 20 | 2018-03-15 | கடல் சிப்பிகள் - 100 எண்ணிக்கை | | ENSP/BPU/20/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 21 | 2018-03-16 | வள்ளப்பட்டை சீவல்கள் - 24.5 கி.கி | 1,404,500.00 | ENSP/BPU/21/2018( BIA/D/CASE/31/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் விசாரணையின் பின்னர் சந்தேக நபர் மீது அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 22 | 2018-03-18 | கொதல ஹிம்புட்டு குவளை ï 01 எண்ணிக்கை, கொதல ஹிம்புட்டு சீசவல்கள் - 7.3 கி.கி | 40,000.00 | ENSP/BPU/22/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 23 | 2018-03-20 | வள்ளப்பட்டை சீவல்கள் - 7.4 கி.கி | 740,000.00 | ENSP/BPU/23/2018( BIA/D/CASE/33/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 24 | 2018-03-23 | சூரை மீன் இறக்குமதி | | ENSP/BPU/24/2018 | வழக்கு தொடர்கிறது |
| 25 | 2018-03-25 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 04 எண்ணிக்கை | | ENSP/BPU/25/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 26 | 2018-03-29 | சங்கு சிப்பி - 01 எண்ணிக்கை, தலைக்கவசக் கொம்பு ï 01 எண்ணிக்கை, சோழிகள் (சிப்பிகள்) ï 01 எண்ணிக்கை | | ENSP/BPU/26/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 27 | 2018-03-29 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 04 எண்ணிக்கை | | ENSP/BPU/27/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 28 | 2018-03-30 | கொதல ஹிம்புட்டு குவளை ï 01 எண்ணிக்கை | 15,000.00 | ENSP/BPU/28/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 29 | 2018-03-31 | கொதல ஹிம்புட்டு சீவல்கள் - 0.8 கி.கி | | ENSP/BPU/29/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 30 | 2018-04-14 | வள்ளப்பட்டை சீவல்கள் - 29 கி.கி | 2,910,000.00 | ENSP/BPU/30/2018( BIA/D/CASE/55/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 300,000/- விதிக்கப்பட்டது. |
| 31 | 2018-04-14 | வள்ளப்பட்டை சீவல்கள் - 25.5 கி.கி | 1,912,500.00 | ENSP/BPU/31/2018( BIA/D/CASE/56/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 32 | 2018-04-14 | வள்ளப்பட்டை சீவல்கள் - 39.5 கி.கி | 2,650,000.00 | ENSP/BPU/32/2018 (BIA/D/CASE/57/2018) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 33 | 2018-04-14 | வள்ளப்பட்டை சீவல்கள் - 25 கி.கி | 2,000,000.00 | ENSP/BPU/33/2018( BIA/D/CASE/58/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 200,000/- விதிக்கப்பட்டது. |
| 34 | 2018-04-14 | கொதல ஹிம்புட்டு குவளை ï 01 எண்ணிக்கை, உண்ணத்தகு பறவைகள் முட்டைகள் ï 350 கிராம் | | ENSP/BPU/34/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 35 | 2018-04-14 | உலர்ந்த கடற் குதிரை ï 100 கிராம், உலர்ந்த கடல் வெள்ளரி ï 1.9 கி.கி | | ENSP/BPU/35/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36 | 2018-06-16 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 03 எண்ணிக்கை, உலர்ந்த கடல் குதிரை ï 350 கிராம் | | ENSP/BPU/36/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 37 | 2018-06-14 | பிரகடனப்படுத்தப்படாத ஊர்வன ï 32 எண்ணிக்கை | | ENSP/BPU/37/2018 | உற்பத்தி செய்த நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது. |
| 38 | 2018-04-29 | உண்ணத்தகு பறவைகள் முட்டை ï 2.2 கி.கி | | ENSP/BPU/38/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 39 | 2018-04-30 | சிறிய சங்குா் 29 கி.கி, சிறிய சங்குா் 19 கி.கி | | ENSP/BPU/39/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 40 | 2018-05-10 | வள்ளப்பட்டை சீவல்கள் - 19.6 கி.கி | 149,500.00 | ENSP/BPU/40/2018( BIA/D/CASE/71/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதம் எதுவும் விதிக்கப்படவில்லை |
| 41 | 2018-05-16 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 07 எண்ணிக்கை | | ENSP/BPU/41/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 42 | 2018-05-17 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 06 எண்ணிக்கை | | ENSP/BPU/42/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 43 | 2018-05-19 | வள்ளப்பட்டை எண்ணெய் - 0.68 கி.கி | 1,164,000.00 | ENSP/BPU/43/2018( BIA/D/CASE/84/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. பொருட்கள் கேள்வு விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டன. |
| 44 | 2018-05-20 | வள்ளப்பட்டை சீவல்கள் - 15 கி.கி | 150,000.00 | ENSP/BPU/44/2018( BIA/D/CASE/86/2018 ) | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதம் எதுவும் விதிக்கப்படவில்லை |
| 45 | 2018-05-21 | வள்ளப்பட்டை எண்ணெய் | | ENSP/BPU/45/2018 | பொருட்கள் தடுத்து வைக்கப்பட்டன. |
| 46 | 2018-05-23 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 07 எண்ணிக்கை | | ENSP/BPU/46/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அபராதம் எதுவும் விதிக்கப்படவில்லை |
| 47 | 2018-05-24 | ஓகிட் தாவரங்கள் - 1185 எண்ணிக்கை | 4,320.00 | ENSP/BPU/47/2018 | தீர்வை அறவிடப்பட்டதுடன் பொருட்கள் விடுவிக்கப்பட்டன. |
| 48 | 2018-06-03 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 05 எண்ணிக்கை | | ENSP/BPU/48/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 49 | 2018-06-16 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 02 எண்ணிக்கை | | ENSP/BPU/49/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 50 | 2018-06-16 | கொதல ஹிம்புட்டு குவளைகள் ï 02 எண்ணிக்கை, கொதல ஹிம்புட்டு சீசவல்கள் - 100 கிராம் | | ENSP/BPU/50/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 51 | 2018-06-16 | கொதல ஹிம்புட்டு சீவல்கள் - 3.2 கி.கி , கொம்பு கவச சிப்பிகள் - 01 எண்ணிக்கை | | ENSP/BPU/51/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 52 | 2018-06-26 | வள்ளப்பட்டை சீவல்கள் - 18 கி.கி | 1,260,000.00 | ENSP/BPU/52/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 500,000/- விதிக்கப்பட்டது. |
| 53 | 2018-07-05 | வள்ளப்பட்டை சீவல்கள் - 61.8 கி.கி | 6858,000.00 | ENSP/BPU/53/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் விசாணையின் பின்னர் அபராதமாக ரூபா 400,000/- விதிக்கப்பட்டது. |
| 54 | 2018-07-05 | வள்ளப்பட்டை சீவல்கள் - 20.75 கி.கி, சந்தனக் கட்டை சீவல்கள் - 10 கிராம், சந்தன எண்ணெய் - 600 கிராம் | 2,075,000.00, 150.00 | ENSP/BPU/54/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையின் பின்னர் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 55 | 2018-07-07 | வள்ளப்பட்டை ï 2 கி.கி | 20,000.00 | ENSP/BPU/55/2018 | |
| 56 | 2018-07-20 | பாங்கோலின் செதில்கள் - 1.7 கி.கி, கருங்காலி மரம் - 3 கி.கி, சலாசியா ரெடிகுலாடா ï 7.4 கி.கி | | ENSPU/BPU/56/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதமாக ரூபா 50,000/- விதிக்கப்பட்டது. |
| 57 | 2018-08-08 | மான் கொம்புகளின் பாகங்கள் | | ENSPU/BPU/57/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 58 | 2018-08-07 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை | 15,000.00 | ENSPU/BPU/58/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 59 | 2018-08-08 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 01 எண்ணிக்கை | | ENSPU/BPU/59/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 60 | 2018-09-08 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 04 எண்ணிக்கை, உலர்ந்த கடல் குதிரை ï 200 கிராம், | | ENSP/BPU/60/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உலர்ந்த கடல் வெள்ளரி ï 0.6 கிராம் | | | |
| 61 | 2018-08-13 | வள்ளப்பட்டை சீவல்கள் - 7.40 கி.கி, கொகும் பொது ï 17.4 கி.கி | 500,000.00, 75,000.00 | ENSP/BPU/61/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதமாக ரூபா 100,000/- விதிக்கப்பட்டது. |
| 62 | 2018-08-15 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை, சலாசியா ரெட்டிகியுலாட்டா சீவல்கள் - 2 கி.கி | | ENSP/BPU/62/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 63 | 2018-08-19 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 04 எண்ணிக்கை, கடல் குதிரைகள் ï 0.5 கி.கி | | ENSP/BPU/63/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 64 | 2018-08-25 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை, சலாசியா சீவல் - 100 கிராம், உலர்ந்த கடல் வெள்ளரி -400 கிராம் | | ENSP/BPU/64/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 65 | 2018-09-02 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 04 எண்ணிக்கை | | ENSP/BPU/65/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 66 | 2018-09-07 | கடல் வெள்ளரி ï 01 கி.கி | | ENSP/BPU/66/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 67 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா சீவல்கள் - 20 பொதிகள் (ஒவ்வொன்றும் 100 கிராம்) | | ENSP/BPU/67/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 68 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 01 எண்ணிக்கை | | ENSP/BPU/68/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 69 | 2018-09-17 | கடல் வெள்ளரி ï 500 கிராம் | | ENSP/BPU/69/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 70 | 2018-09-17 | கடல் சிப்பிகள் - 01 எண்ணிக்கை | | ENSP/BPU/70/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 71 | 2018-09-17 | மயில் இறகுகள் - 02 எண்ணிக்கை | | ENSP/BPU/71/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 72 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா ï 50 பொதிகள் (ஒவ்வொன்றும் 100 கிராம்) | | ENSP/BPU/72/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 73 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை | | ENSP/BPU/73/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 74 | 2018-09-17 | கடல் சிப்பிகள் - 01 எண்ணிக்கை | | ENSP/BPU/74/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 75 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை | | ENSP/BPU/75/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 76 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா சீவல்கள் ï 4 பொதிகள், பொடி 01 பொதி மற்றும் குவளைகள் 05 எண்ணிக்கை | | ENSP/BPU/76/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 77 | 2018-09-17 | எருமை மாட்டுக் கொம்பு ï 01 எண்ணிக்கை மற்றும் கொம்புகள் - 02 எண்ணிக்கைகள் | | ENSP/BPU/77/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 78 | 2018-09-17 | கடல் வெள்ளரி ï 01 கி.கி | | ENSP/BPU/78/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 79 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 02 எண்ணிக்கை | | ENSP/BPU/79/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 80 | 2018-09-17 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 01 எண்ணிக்கை | | ENSP/BPU/80/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 81 | 2018-05-18 | சலாசியா ரெட்டிகியுலாட்டா குவளைகள் - 06 எண்ணிக்கை | | ENSP/BPU/81/2018 | பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. |
| 82 | 2018-09-13 | 24 எண்களையுடைய உயிர்வாழ் மீன். | | ENSP/BPU/82/2018 | பொருட்கள் மீள்-ஏற்றுமதி செய்யப்பட்டன. |
| 83 | 2018-09-15 | உயிர்வாழ் மீன் - 4435 எண்ணிக்கை | 200,000.00 | ENSP/BPU/83/2018 | அபராதமாக ரூபா 200,000/- விதிக்கப்பட்டதுடன் பொருட்கள் விடுவிக்கப்பட்டன. |

இவ்வாண்டுக் காலப்பகுதியிலான விடங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு




இப்பிரிவிலான விசாரணைகள் விவரம் (1992 – 2018)




பங்குபற்றிய கூட்டங்கள், முனைப்பான ஒத்துழைப்புகள், பயிற்சிகள், செயலமர்வுகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஜனவாரி மாதம்

- ✓ 16/01/2018
  மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயிரியல் பல்வகைமை மாநாட்டுக்கான ஆறாவது தேசிய அறிக்கை தயாரிப்பு தொடர்பிலான புகுமுக செயலமர்வு வோட்டர் எட்ஜின் நெலும் மண்டபத்தில் இடம்பெற்றது.
- ✓ 26/01/2018
  மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ரொட்டேடம் பேரவையினை அமுல்படுத்துவதற்காக இலங்கையில் கைத்தொழில் இரசாயனவியல் முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு கூட்டமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இடம்பெற்றது.
- ✓ 06/01/2018
  இலங்கையில் EUROPHYT மற்றும் RASFF அறிவித்தல் தொடர்பு வலைப்பின்னலை ஒழுங்கமைப்பதற்கான போட்டிமிகு அதிகாரசபைகளை இனங்காணல் பற்றிய ஒன்றுகூடலானது வாணிபத் திணைக்களத்தின் ஏற்பாட்டினால் திணைக்களத்தில்இடம்பெற்றது.

பெப்ரவரி மாதம்

- ✓ 19-20/02/2018
  மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயிரியல் பல்வகைமை பேரவைக்கான ஆறாவது தேசிய அறிக்கைக்கான குறிப்புரையினை தயாரிப்பதற்கான இரு நாள் வதிவிட செயலமாவானது நீர் கொழும்பிலுள்ள ஹொட்டேல் ஜெட் விங் புளு இல் இடம்பெற்றது.
- ✓ 08/02/2018
  Lacoste இனால் ஏற்பாடு செய்யப்பட்ட சுங்க வர்த்தகக் குறியீடு அடையாளங்காணல் பற்றிய செயலமர்வானது கொழும்பு ஹில்டனில் இடம்பெற்றது.
- ✓ 14/02/2018
  மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையில் BIOFIN திட்டம் பற்றிய செல்லுபடியாக்கல் நிகழ்ச்சித்திட்டமானது தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.
- ✓ 26/02/2018
  தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இயற்கை மைய நிலச்சரிவு இடர் முகாமைத்துவம் பற்றிய பங்கீடுபாட்டாளர் ஆலோசனைச் செயலமர்வானது வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் இடப்பெற்றன.

மார்ச் மாதம்

- ✓ 05-06/03/2018
  நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தெற்காசிய பிராந்திய CITES shark மற்றும் கதிரியக்க அமுல்படுத்தல் செயலமர்வு கொழும்பு மூவ் என் பிக் ஹோட்டலில் இடம்பெற்றன.
- ✓ 09/03/2018
  SNB REACT (சுதத் பெரேரா அசோசியேட்ஸ்) இனால் ஏற்பாடு செய்யப்பட்ட புலமைச் சொத்துரிமை மீறல்களுக்கு எதிரான தயாரிப்பு அடையாளங்காணல் திட்டம் கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றன.
- ✓ 13/03/2018
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஆக்கிரமிப்பு உயிரினங்கள் விசேட குழுக்கூட்டம் - 2018 ஆனது பத்தரமுல்லையிலுள்ள சோபதம் பியச இல் இடம்பெற்றன.
- ✓ 13/03/2018
  இலங்கைச் சுங்க மனித வளங்கள் அபிவிருத்தி பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுங்க அலுவலர்களுக்கான திறன் கட்டியெழுப்புகைச் செயலமர்வானது தேசிய ஓசோன் அலகினால் நடத்தப்பட்டதோடு, இது மனித வளங்கள் அபிவிருத்தி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
- ✓ 14/03/2018
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கற்கள் மற்றும் மணல் இறக்குமதி தொடர்பிலான செயலமர்வானது பத்தரமுல்லை சோபதம் பியஸவில் இடம்பெற்றன.
- ✓ 28/03/2018
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட, இலங்கையில் மரபனு ரீதியாக நவீனப்படுத்தப்பட்ட உயிரினங்களின் பாதுகாப்பான பயன்பாட்டு பற்றியதும் மற்றும் உயிர்ப் பல்வகைமை செய்திமடல் பிரசும் பற்றியதுமான ஊடகச் செயலமர்வானது பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்றது.

மே மாதம்

- ✓ 31/05/2018
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''ஆராய்ச்சி நோக்கங்களுக்காக தாவரம் மற்றும் விலங்கு மாதிரிகளை ஏற்றுமதி செய்வதனை ஒழுங்குறுத்துவதற்கானௗ உப குழுவின் கூட்டமானது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

ஜூன் மாதம்

- ✓ 22/06/2018
  ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திக் கூட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன
- ✓ 25/06/2018
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''உயிர் பாதுகாப்பு குறித்தான Cartagena நெறிமுறைக்கிணங்க தேசிய உயிர் பாதுகாப்பு சட்டகத்தினை அமுல்படுத்தல்ௗ கருத்திட்டத்தில் இணைந்த செயற்பாடுகளுக்கான (உயிரியல் பண்புக்கான கொள்கை, சாதனம் சார்ந்த

மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை வலுப்படுத்தல்) இரண்டாவது செயற்குழுக் கூட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன

ஆகஸ்ட் மாதம்

- ✓ 28/08/2018

விவசாயத் திணைக்களத்தின் விதை சான்றுபடுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட, விதை சான்றுபடுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்புத் துறை குறித்தான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினது எதிர்கால பணிப்புரைகள் மீதான பங்கீடுபாட்டாளர் ஆலோசனை செயலமர்வு கன்னொறுவ ISTI இல் இடம்பெற்றது.

செப்டம்பர் மாதம்

- ✓ 17-18/09/2018

இலங்கைச் சுங்க மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சட்டவிரோதமான வனவிலங்கு வியாபார பயிற்சி மாதிரி அபிவிருத்தி குறித்தான செயலமர்வு; INAMA திட்டப் பணி என்பன கொழும்பு, மூவ் என் பிக் ஹோட்டலில் இடம்பெற்றன.

ஒக்டோபர் மாதம்

- ✓ 11/10/2018

வரைவு : சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாலைவன மணல் மற்றும் குவாரி பாறைகளை இறக்குமதி செய்தல் தொடர்பிலான வழிகாட்டிகள் சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்றன.

- ✓ 19/10/2018

மீன் பிடி மற்றும் நீரியல் வளமூலங்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுறாக்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான தேசிய செயல்திட்டம் 201 ï 2022 மீன் பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இடம்பெற்றன.

- ✓ 23/10/2018

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட, UNDP கருத்திட்டமானது உயிர் பல்வகைமை நிதியிடல் முயற்சித் திட்டம் குறித்தான செல்லுபடியாக்கல் செயலமர்வானது தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றன.

## <u>விசேட செயற்பாடுகள்</u>

<u>இலங்கைச் சுங்கத்தின் உயிர்ப்பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா</u>

*“ஒரு நிலைபேறான பொருளாதாரத்திற்கான சிறப்பானதும் பாதுகாப்பு மிக்கதுமான உயிர்ப்பல்வகைமையின் 25 ஆண்டுகள்”*

இலங்கைச் சுங்கத்தின் மிகவும் கடுமையாக உழைக்கின்ற அதிகாரிகளினால், நாட்டின் உயிர்ப் பல்வகைமை மற்றும் ஏனைய வழங்களைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டதான முதன்முதலான சுங்க அலகினை ஆரம்பிக்க முடிந்தது. ‘உயிர்ப் பல்வகைமைச் செயலணி’ எனும் இந்த மகத்தான முதல் கட்ட நடவடிக்கையானது 1993 ஜூலை 17 ஆம் திகதி எடுக்கப்பட்டதாகும். இந்தச் செயலணியானது 1997ஆம் ஆண்டில் ‘உயிர்பல்வகைமை பாதுகாப்புச் செயலணி’ என மீள் பெயர் சூட்டப்பட்டதுடன் அதன் வெற்றிகரமானதும் மற்றும் தாக்கம் மிக்கதுமான கண்டுபிடிப்புகள் காரணமாக இது நாட்டில் பிரபல்யம் மிக்கதொரு செயலணியாக மாறியது.

2018 ஆம் ஆண்டானது, உலகின் முதலாவது சுங்க உயிர்பல்வகைமை கலத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூருகின்றது.

கடந்த 25 வருடங்களில், இலங்கைச் சுங்கத்தின் உயிர்ப்பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவானது, எமது உயிர்பல்வகைமை மற்றும் தேசிய மரபுரிமை என்பவற்றை பாதுகாப்பதில் அளவற்ற சேவையினை புரிந்துள்ளதுடன் தற்பொழுதும் நாட்டின் எல்லையில் தீவிர பாதுகாப்பினையும் மேற்கொண்டுள்ளது.

இலங்கைச் சுங்கத்தின் உயிர்ப்பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் 25 வது ஆண்டு நிறைவினை நினைவுகூர்வதில், விசேடமானதொரு நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டு 2018 ஜூலை 24ஆந் திகதி இலங்கைச் சுங்க தலைமையலுவலகத்தில் இடம்பெற்றதோடு, இதனை இலங்கைச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருமதி. பீ.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள்.

உயிர்ப்பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவுடன், அதன் ஆரம்பம் முதற்கொண்டு பின்னிப்பிணைந்து பணியாற்றிய முன்னாள் சுங்க அதிகாரிகள், இந்தப் பிரிவின் முன்னெடுப்புகளுக்காக தமது ஆதரவுகளை வழங்கிய ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின்

பிரதிநிதிகள், உயிர்ப்பல்வகைமை மற்றும் அது சார்ந்த துறைகளைச் சேர்ந்த தொழில்வாண்மையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊடகங்கள் ஆகியோரும் மேற்படி சிறப்புமிக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

பிரசித்தி பெற்ற சுற்றுச்சூழல் ஆய்வாளர் திரு. ஜகத் குணவர்தன (ஏஎஎல்) மற்றும் முன்னாள் சுங்க பிரதிப் பணிப்பாளரும் இப்பிரிவின் ஸ்தாபகருமான திரு. சமந்த குணசேகர ஆகியோரின் விசேட உரைகளும் இதன்போது நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வின் பொழுது, மாணவர்களின் விஞ்ஞானத் துறைசார்ந்த கற்கைகளுக்காக, றுஹுனு பல்கலைக்கழகம் மற்றும் ஓசியன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு பறிமுதல் செய்யப்பட்ட கடல் சிப்பிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேலும், அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள் ஊடாக நாட்டுக்குள் கொண்டுவரப்படக்கூடிய மற்றும் நாட்டைவிட்டும் வெளியே அனுப்பப்படக்கூடிய, தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட உயிர்ப்பல்வகைமை மற்றும் தேசிய மரபுரிமை சார்ந்த பொருட்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையிலான விழிப்புணர்வூட்டல்களை வழங்கும் விளம்பரங்கள் இலங்கைச் சுங்கத்தினால் பிரசுரம் செய்யப்பட்டு அவற்றை அஞ்சல் திணைக்களத்திற்கு வினியோகிக்கப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவை தவிர, இப் பிரிவின் வெள்ளி விழாவினைக் கொண்டாடும் வகையில், பல்வேறு வகையான துறைகளையும் சார்ந்த தொழில்வாண்மையாளர்கள், முன்னாள் மற்றும் தற்போது சேவையிலுள்ள சுங்க அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ‘பசுமைச் மதில்’ எனும் விழிப்புணர்வூட்டல் மற்றும் அறிவூட்டல் வெளியீடும் மேற்படி நிகழ்வின் பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்டது.









## பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுடனான இணக்கப்பாட்டிற்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான பிரச்சினைகள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகளை அமுல்படுத்துவதற்கான இலங்கைச் சுங்கத்தின் மைய அவதானத்தையுடையது. மேலும் இது ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடனான ஒருங்கிணைந்த செயற்பாட்டினூடாக சர்வதேச மாநாடுகளிலிருந்து எழக்கூடிய அமுலாக்கத்துடன் கூடிய கடப்பாடுகள் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பினை வழங்குகிறது.

### பிரதான தொழிற்பாடுகள்

1. புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை தரநியமங்கள் நிறுவகச் சட்டம், தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகைச் சட்டம், தானியக்க சக்தி அதிகாரசபைச் சட்டம், நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், சுற்றாடல் அமைச்சு, சுகாதாரத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் சுங்கத்துடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் போன்ற தேவைப்பாட்டுக் கட்டுப்பாடுகளை,மீறல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிராக அமுல்படுத்தல்.மேற்படி அதிகாரசபைகளுக்குரிய அனைத்து இறக்குமதிப் பொருட்களும், அவை சுங்கத்திலிருந்து வெளியாக்கப்படும் முன்னர் CPU இற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
2. மேற்படி நோக்கத்திற்காக சரக்கினைப் பெறுபவரால் மேற்படி அதிகாரங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற உத்தரவாதப் பதிவினை பேணுதல்.
3. சம்பந்தப்பட்ட அதிகாரங்களின் ஒழுங்குவிதிகளைப் பேணும் வகையில் வாடிக்கையாளர் நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
4. அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
5. இதுவரை அடையாளங்காணப்பட்டுள்ள சுங்கச் சட்டங்களோடு தொடர்புடைய கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வுசெய்தல்.
6. மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | உண்மை | இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம் |
|---|---|---|---|
| 01 : மொன்ரரோல் புறடகோலினால் ஆதரவளிக்கப்பட்ட ஓசோன் படையின் ஆற்றலை குறைக்கின்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க தன்மையினை அதிகரித்தல | | | |
| 1. சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவில் பதிவு செய்வதற்கு முன்பதாக தேவையான அலுவலக பொருட்களது பட்டியலொன்றினை பெறல் மற்றும் இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை பெறல் அத்தோடு,சகல சுங்கப்பிரகடனச் செயலாக்க அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு குறித்த அத்தரவுகளை விநியோகித்தல். | 100% | 100% | |
| 2. சிறந்த இணக்கப்பாடு/அமுல்படுத்துகைக்காக ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் தொடர்பிலும்மற்றும் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைப்பாடுகள் தொடர்பிலும் சுங்கப்பிரகடண செயலாக்க மற்றும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டல் திட்டங்களை ஆரம்பித்தல். | 100% | 100% | |
| 3. சிறந்த தன்னார்வ இணக்கப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளையும் உள்ளீடு செய்து,சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல். | 100% | 100% | |
| 4. மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக, ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் பற்றி பெறப்படுகின்ற தரவுகளை தேசிய ஓசோன் பிரிவுக்கு வழங்குதல். | 100% | 100% | |
| 02 : பாசல் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தினை விளைவிக்கத்தக்க கழிவுகள், எல்லைக்கு அப்பால் இடம்பெறும் அசைவுகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல்மிக்க தன்மையினை அதிகரித்தல் | | | |
| 1. பொருட்கள் தொடர்பிலான அலுவலக பட்டியல்களை பெறல்<br>• பாசல் பேரவையிலான இணைப்பு I மற்றும் IIIஇல் உள்ளடக்கப்பட்டுள்ளவை;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br>• இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தனை வேண்டுதல் மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செயலாக்க அலுவலர்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கும் பெறுகின்ற தரவுகளை விநியோகம் செய்தல். | 100% | 100% | இறக்குமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளன |
| **2.** சிறந்த இணக்கப்பாடு / அமுல்படுத்தல் என்பவற்றிற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பல் சுங்கப்பிரகடனச் செயலாக்கம் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களுக்கு அறிவூட்டும் வகையில் விழிப்புணர்வூட்டல் திட்டங்களை முன்னெடுத்தல்,<br>• பாசல் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தினை விளைவிக்கத்தக்க கழிவுகள்;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்யத்தடைசெய்யப்பட்ட ஆபத்தினை விளைவிக்கத்தக்க ஏனைய பொருட்கள்; | 100% | 100% | |

| | | | |
|---|---|---|---|
| • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்கமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுகின்ற,சுற்றாடல் கூருணர்வுமிக்க ஏனைய பொருள்கள் ;<br>• ஆபத்தினை விளைவிக்கத்தக்க அனுப்புபொருட்களை கண்டுபிடிக்கின்றசந்தர்ப்பத்தில், எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் | | | |
| 3. சிறந்த இணக்கப்பாட்டு கட்டுப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சித் திட்டத்தினை விருத்தி செய்தல். | 100% | 100% | |
| 03 : ஸ்ரொக்ஹோம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள மோசமான முறையில் உடல் அங்கங்களை அசுத்தமடையச் செய்கின்றவற்றின் இறக்குமதி தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | | |
| 1. தொடர் சோதன மாசுறுகை பற்றிய உத்தியோகபூர்வப் பட்டியலினை பெறல் -<br>• ஸ்ரொக்ஹோம் பேரவையிலான அ,ஆ மற்றும் இ ஆகிய இணைப்புகளில் பட்டியல்படுத்தப்பட்டவை;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br>• இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு ஆனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை (இணைப்பு ஆ: மட்டுப்படுத்தப்பட்ட பாவனை) ;<br>அத்துடன் சகல சுங்கப்பிரகடணம் செயலாக்க மற்றும் அமுல்படுத்தல் அலுவலா்களுக்கு உரிய தரவுகளைப் பரப்புதல் ; | 100% | 100% | |
| **2.** சிறந்த இணக்கப்பாடு / அமுல்படுத்தல் என்பவற்றிற்காக<br>• ஸ்ரொக்ஹோம் பேரவையிலான அ,ஆ மற்றும் இ ஆகிய இணைப்புகளில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளவை;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br>• இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுகின்றவை (இணைப்பு ஆ: மட்டுப்படுத்தப்பட்ட பாவனை) ;<br>போன்ற தொடர் சேதன மாசுறுகை பற்றி அறிவூட்டும் நோக்கில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல்மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல் - | 100% | 100% | |
| 3. சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல். | 100% | 100% | |
| 04 : றொட்டேடம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னதாக அறிவிக்கப்பட்ட இணக்கப்பாட்டு நடைமுறையினை அமுல்படுத்துவதிலான ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | | |
| 1. ஆபத்தினை விளைவிக்கத்தக்க இரசாயனங்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் தொடர்பில் அலுவலக பட்டியல்களை பெறல் -<br>• றொட்டேடம் சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவை<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br>• பூச்சிகொலிகள் பற்றிய பதிவாளரின் முன்கூட்டிய பதிவுகள் அவசியமானவைகள்; | 100% | 100% | இறக்குமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளன |

| | | | |
|---|---|---|---|
| • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக பூச்சிகொல்லிகள் பற்றிய பதிவாளரின் சிபாரிசின் பேரில் வினியோகிக்கப்பட்டஇறக்குமதிக் கட்டப்பாட்டு ஆனுமதிப்பத்திரம் அவசியமானவைகள்;<br><br>அத்துடன் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ; | | | |
| 05 : இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின்கீழ் வருகின்ற பொருட்களுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளின் அமுல்படுத்துகையில் பயனுறுதித்தன்மையினை அதிகரித்தல் (இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், தயாரித்தல், கிடங்கில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றை உபயோகித்தல் என்பவற்றினை தடைசெய்தல் மற்றும் அவற்றினை அழித்தல் தொடர்பிலான சமவாயம்) | | | |
| 1. இரசாயனங்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியல்களை பெறல் -<br>• இரசாயன ஆயுதங்கள் சமவாயம்;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br>• இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை;<br><br>அத்துடன் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ; | 100% | 100% | இறக்குமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளன |
| 1. அபாயகரம் மிக்க இரசாயனங்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 100% | 100% | இறக்குமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளன |
| **2.** சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உள்ளடக்கி சரக்கு வெளியாக்கல் முகவர்கள் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல். | 100% | 100% | இறக்குமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளன |
| 06 : புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்கவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | | |
| 1. உரிமையாளர்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் -<br>• பதிவு செய்யப்பட்ட வியாபாரக் குறியீடுகளை பெறல் ;<br>• இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;<br><br>அத்துடன் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ; | 100% | 100% | |
| **2.** புலமைச் சொத்துரிமையுடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல் | 100% | 100% | |
| **3.** சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் | 100% | 100% | |

| | | | |
|---|---|---|---|
| பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல். | | | |
| 4. உலக சுங்க அமைப்பு IPM கருவிக்கான அணுகலை வழங்குவதன் மூலம் சுங்க அலுவலர்களின் சரியான உரிமையாளர் பற்றிய அறிவினை விருத்தி செய்தல் | 100% | 100% | |
| 07 : இலங்கை தரநிர்ணயங்களின் கீழான பொருட்களுடன் தொடர்பான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல் | | | |
| 1. பொருட்களது உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் - <br>• இலங்கை தரநிர்ணய நிறுவகம் <br>• இறக்குமதிக்காக இலங்கைத் தரநிர்ணய சான்றிதழ் அவசியப்படுபவை; <br>• இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுகின்றவை; <br><br>அத்துடன் சகல சுங்கப்பிரகடண செய்முறைப்படுத்தல் அலுவலகங்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலகங்களுக்கும் உரிய தரவினை பரப்புதல் ; | 100% | 100% | |
| 2. புலமைச் சொத்துரிமையுடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல் | 100% | 100% | |
| 3. சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டு கட்டுப்பாட்டிற்காக மேலே(2)இல் தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல். | 100% | 100% | |
| 08: கள்ளக்கடத்தல் மற்றும் கடற்கொள்ளைகளுக்கு எதிரான கூட்டான நடவடிக்கை "புலமைச் சொத்துரிமை செயற்பாடு ஏ/பீ – 2" | | | |
| 1. புலமைச் சொத்துரிமை சட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பில் சுங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம் | 100% | 100% | |
| 2. புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட சந்தேகத்திற்கிடமான பொருட்களை இடைமறித்தல் | 100% | 100% | |
| 3. புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட பொருட்களின் பறிமுதல் தொடர்பில் அறிக்கைசெய்தல் | 100% | 100% | |
| 4. உலக சுங்க அமைப்பு மற்றும் றிலோ அலுவலகம் என்பவற்றிற்கு பெறுபேறுகளின் ாலத்தை அறிக்கை செய்தல் | 100% | 100% | |
| 5. ரிபுலமைச் சொத்துரிமை செயற்பாடு0 களது பெறுபேறு மீதான பின்தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளல் | 100% | 100% | |
| 09 : திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனையஈடுபாட்டாளர்கள் மற்றும் அரச முகவர்களுடனான கூட்டிணைப்பினை அதிகரித்தல் | | | |
| 1. இலங்கை தர நிர்ணயம், NIPO, சுகாதார அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் என்பவற்றுடனான சந்திப்புக்களை ஏற்பாடுசெய்தல் | 100% | 100% | |
| 2. சம்பந்தப்பட்ட ஈடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கு செய்தல் | 100% | 100% | |
| 3. நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய நடவடிக்கைகளின் போது ஏனைய முகவர்களுடனான கூட்டான செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல் | 100% | - | ஒத்துழைப்பு வழங்க முடியாதிருந்தது |
| 4. வெகுசன ஊடகம் மூலம் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு திட்டங்கள் | 100% | 100% | |

சாராம்சம்

இவ்வாண்டுக்காலப்பகுதியில் இலங்கை கட்டளைகள் நிறுவனம் தொடர்பிலான விடயங்கள்

| | |
|---|---|
| இலங்கை கட்டளைகள் நிறுவன விடயங்களின் மொத்த எண்ணிக்கை | 159 |
| இலங்கை கட்டளைகள் நிறுவன விடயங்களுக்கு விதிக்கப்பட்ட மொத்த அபராதம் (ரூபா) | 167,387,186.00 |

இவ்வாண்டுக்காலப்பகுதியில் புலமைச் சொத்துரிமை குறித்தான விடயங்கள்

| | |
|---|---|
| புலமைச் சொத்துரிமை விடயங்களது மொத்த எண்ணிக்கை | 21 |
| பறிமுதல் செய்யப்பட்ட அளவுகளது பற்றுச்சீட்டுப் பெறுமதி (ரூபா) | 13,732,923.80 |

## துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு

### அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவானது, எல்லை தாண்டிய குற்றச்செயல்களைக் கண்காணிக்கும் நோக்கில், உலக சுங்க அமைப்பகம் / போதைப்பொருட்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினது கொள்கலன் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். தற்போது இப்பிரிவானது மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தின் நோக்கெல்லையின் கீழ் காணப்படுகிறது. மேலும், இப்பிரிவானது கப்பல் இயக்குநர்கள்/ சரக்கு அறிக்கையாளர்களிடமிருந்து முன்கூட்டியே சரக்குகள் பற்றிய தகவல்களைப் பெறுவதோடு, விமான இயக்குநர்களிடமிருந்தான பயணிகள் தகவல்களையும் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, மேற்கொள்ளப்படுகின்ற இடர் பகுப்பாய்வின் அடிப்படையில் புலன்விசாரணைகளை மேற்கொண்டு அதற்பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு வழியமைத்தல். மேலும், இப்பிரிவானது விமானச் சரக்கு உரிமையாளர்களது வானூர்தி செயற்படுத்துனர்களிடமிருந்து முன்கூட்டிய தகவலினை பெறுதல் குறித்தான முன்னெடுப்பினை மேற்கொண்டு வருகிறது.

பிரதான தொழிற்பாடுகள்

1. விமானம் மற்றும் கப்பல் மூலமாக வரக்கூடிய சரக்கு விபரங்களை இலத்திரனியல் முறை மூலம் முன்கூட்டியே பெற்று அவற்றை ஒழுங்குபடுத்துவதோடு, துறைமுகம் சார்ந்த செயற்பாடுகளை கண்காணித்து கட்டுப்படுத்தல்.
2. சம்பந்தப்பட்ட விமான இயக்குநர்களிடமிருந்து பயணிகளின் தகவல்களை முன்கூட்டிப் பெறுதல்.
3. இலத்திரனியல் முறை மூலமான பொருட்பட்டியலைப் பயன்படுத்தி கொள்கலன்களையும் ஏனைய அனுப்பு பொருட்களையும் இனங்கண்டு அவற்றை பகுப்பாய்வு செய்வதோடு, இவற்றில் உயர் இடர் கொண்டவை என ஊகிக்கப்படக் கூடிய பொருட்களை அவை குறித்தான மேலதிக விசாரணைகளையும் சோதனைகளையும் துறைமுக கட்டுபாட்டுப் பிரிவில் கிடைக்கத்தகு கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளல்.
4. API தரவுகளைப் பயன்படுத்திய சுங்க இடரைக் கொண்டு பயணிகளை இனங்காணுதல், அத்தகைய பயணிகளையும் அவர்களது பொதிகளையும் சோதனை செய்தல், மற்றும் அவசியமானவிடத்து மேலதிக புலன்விசாரணைகளுக்கு வழியமைத்தல்.
5. உலக சுங்க அமைப்பகத்தினால் வழங்கப்பட்ட ரீசரக்கு இலக்குப்படுத்திய முறைமை0 யினை கண்காணித்து பேணிவரல்.
6. ஏனைய முகவரகங்களுடனான கூட்டுறவினைக் கட்டியெழுப்புதல்.

முன்னேற்ற அறிக்கை

1. இலத்திரனியல் பொருட்பட்டியலை முன்கூட்டியே கண்காணித்தல்

   முன்கூட்டிய இலத்திரனியல் பொருட்பட்டியல் தொடர்பில் கப்பல் முகவர்கள் / கப்பல் இயக்குகையற்ற பொதுவான பொருள் ஏற்றுகை இயக்குனர்கள் / பொருள் அனுப்புபவர்கள் போன்றவர்களை கண்காணித்தல்.

2. கடல் மார்க்க சரக்கு தொடர்பிலான அறிக்கையிடலுடன் சம்பந்தப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தல்

   மின்னியல் மூலமான கப்பல் சரக்குப் பட்டியலினை அசிகுடா முறைமைக்குச் சமர்ப்பித்தலினை ஒழுங்குபடுத்தும் வகையில் 2014.10.31ஆந் திகதியிடப்பட்ட 1886/55ஆம் இலக்க வர்த்தமன (அதிவிசேட) அறிவித்தல் வெளியிடப்பட்டது. மேற்படி வர்த்தமான பத்திரிகைக்கு இணங்க கடல் மார்க்க சரக்கு அறிக்கையிடுபவர்கள் இலங்கைச் சுங்கத்திற்கு இலத்திரனியல் மூலமான சரக்குப்பட்டியலினை சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டனர். 2016.10.27ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், மின்னியல் சரக்குப் பட்டியல் திருத்தமானது ftbo கிளைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

3. விமான சரக்கு தொடர்பிலான இலத்திரனியல் மூலமான சரக்குப்பட்டியலினை முன்கூட்டியதாக கண்காணிப்புச் செய்தல்

   முன்கூட்டிய விமான சரக்கு தொடர்பிலான இலத்திரனியல் மூலமான சரக்குப்பட்டியல் குறித்து விமானங்கள் / விமானத்தில் பொருள் அனுப்புபவர்கள் தொடர்பில் கண்காணித்தல்.

4. சந்தேகத்திற்கிடமான சரக்குகள் குறித்தான விசாரணைகள் தொடர்பிலான விபரங்கள் வருமாறு.

   - பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை - 59
   - நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை - 35
   - பூர்த்தியடையாத வழக்குகளின் எண்ணிக்கை - 24
   - விதிக்கப்பட்ட அபராதம்/பறிமுதல்களின் மொத்தத் தொகை (ரூபா) - 65,631,990.00

5. விழிப்பூணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

   1. சீ.சீ.பீ உயர் பயிற்சி (மருந்துகள் மற்றும் முன்னோடிகள் கண்டுபிடிப்பு) 2018 ஆகஸ்ட் 06 ï 10ஆந் திகதி வரை, கொழும்பில் இடம்பெற்றது.

   2. விமானச் சரக்கு குறித்து விசேட கவனத்துடனான UNODC ï உலக சுங்க அமைப்பக கொள்கலன் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2018 செப்டம்பர் 4 ï 6ஆந் திகதி வரை பங்களாதேஷ், டாக்காவில் இடம்பெற்றது.

# மத்திய விசாரணைகள் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய விசாரணைகள் பணிப்பகமானது, சுங்கத் திணைக்களத்தின் குறிக்கோள்களுடன் தொடா்பினையுடைய ஏனைய இயக்கம் சாா்ந்த பணிப்பகங்களினால் கண்டறியப்படுகின்ற சுங்கச் சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களின் மீறுகைகள் தொடா்பில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. மேலும் இது மத்திய வழக்குப் பதிவினைப் (CCR) பேணுவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

எனவே, இப் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக :

1) சகல சுங்க விசாரணைகளையும் ஒருமைப்படுத்தி அவற்றை தொழில்வாண்மைத்துவத் தன்மையில் முன்னெடுத்தல்.
2) மத்திய வழக்குப் பதிவினை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பேணுதல்.
3) வெகுமதி பகிர்ந்தளிப்பினை ஒருமைப்படுத்துவதுடன் அவற்றை வெளிப்படையான முறையில் மேற்கொள்ளல்

பிரதான தொழிற்பாடுகள்

1) சுங்க மீறுகைகளைக் கண்டறிந்து அவற்றினை விசாரணை செய்தல்.
2) பிற பணிப்பகங்களினால் (விசேட செயலணி, மற்றும் கண்காணிப்ப மற்றும் தடுப்புப் பணிப்பகம் நீங்கலாக) கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை விசாரணை செய்தல்.
3) மத்திய வழக்குப் பதிவினைப் (CCR) பேணுதல்.
4) விசேட செயலணி மற்றும் கண்காணிப்பு மற்றும் தடுப்புப் பணிப்பகம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை முன்னேற்றங்களை கண்காணித்தல்.
5) மத்திய வழக்கு பதிவில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களை இற்றைப்படுத்தல்.
6) திணைக்களத்தில் முடிவுறுத்தப்பட்ட சகல விடயங்கள் தொடர்பில் வெகுமதிகளை பகிர்ந்தளித்தல்.

செயலாற்றுகை –2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை

| | | | |
|---|---|---|---|
| அ) | 2018.01.01 இருந்து 2018.12.31 வரையான இப் பிரிவுகளில் இருந்தான விசாரணைகள் | | |
| | 1) பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 291 |
| | 2) பூரணப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 105 |
| | அ) அபராதம்/குறைக்கப்பட்ட பறிமுதல்கள்/மேலதிக பறிமுதல்கள் (ரூபா) | - | . 216,174,246.00 |
| | ஆ) அறவிடப்பட்ட மேலதிக பதிவு (ரூபா) | - | 9,348,615.00 |
| | இ) விற்பனை வரும்படிகள் (ரூபா) | - | 10,425,597.00 |
| | 3) மத்திய விடயப் பதிவு தொர்பிலான செயலாற்றுகை | | |
| | அ) மத்திய விடயப் பதிவில் பதிவு செய்யப்பட்ட விடயங்கள் | - | 3,755 |
| | ஆ) மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | | 1,077 |
| ஆ) | பிற பிரிவுகளில் இருந்தான விசாரணைகள் | | |
| | 1. விசாரணை தொடர்பில் பிற பிரிவுகளில் இருந்து இப்பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 00 |
| | 2. விசாரணை தொடர்பில் இப்பணிப்பகத்திலிருந்து பிற பிரிவுகளுக்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 00 |
| இ) | மத்திய விடயப் பதிவு தொடர்பிலான பேணுகை | | |
| | 1. மத்திய விடயப் பதிவில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 3,755 |
| | 2. மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 1,077 |
| | 3. சிபாரிசு செய்யப்பட்ட வெகுமதிப் பட்டியல்களது எண்ணிக்கை | - | 225 |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | 2017.01.01 இருந்து 2017.12.31 வரையான இப் பிரிவுகளில் இருந்தான விசாரணைகள் | | |
| 1) | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 420 |
| 2) | பூரணப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - | 213 |
| | அ) அபராதம்/குறைக்கப்பட்ட பறிமுதல்கள்/மேலதிக பறிமுதல்கள் (ரூபா) | - | 371,629,914.0 0 |
| | ஆ) அறவிடப்பட்ட மேலதிக பதிவு (ரூபா) | - | 11,606,265.00 |
| | இ) விற்பனை வரும்படிகள் (ரூபா) | - | 12,029,531.00 |
| 3) | மத்திய விடயப் பதிவு தொர்பிலான செயலாற்றுகை | | |
| | அ) மத்திய விடயப் பதிவில் பதிவு செய்யப்பட்ட விடயங்கள் | - | 5,464 |
| | ஆ) மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | | 3,055 |
| உ) | பிற பிரிவுகளில் இருந்தான விசாரணைகள் | | |
| | 1. விசாரணை தொடர்பில் பிற பிரிவுகளில் இருந்து இப்பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 01 |
| | 2. விசாரணை தொடர்பில் இப்பணிப்பகத்திலிருந்து பிற பிரிவுகளுக்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 00 |
| ஊ) | மத்திய விடயப் பதிவு தொடர்பிலான பேணுகை | | |
| | 1. மத்திய விடயப் பதிவில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 5,464 |
| | 2. மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - | 3,055 |
| | 3. சிபாரிசு செய்யப்பட்ட வெகுமதிப் பட்டியல்களது எண்ணிக்கை | - | 296 |



குறிப்பிடத்தக்க விடயங்கள்

CIB/INV/198/2018 – இவ்விடயமானது, மத்திய விசாரணைகள் பணிப்பகத்தினால் பெறப்பட்ட தகவலுக்கிணங்க முன்னெடுக்கப்பட்டது. தணிக்கப்பட்ட பறிமுதல்களாக ரூபா 73,000,000.00 தொகை அறவிடப்பட்டது.

CIB/INV/125/2018 – பெறப்பட்ட தகவலுக்கிணங்க, அனுப்புச் சரக்குகளில் பிரகடனப்படுத்தப்படாத பொருட்கள் மற்றும் அதிகப்படியான பொருட்கள் இருப்பது கண்டறியப்படன. தணிக்கப்பட்ட பறிமுதல்களாக ரூபா 11,000,000.00 உம் மற்றும் அபராதத் தொகையாக ரூபா. 1000,000 உம் அறவிடப்பட்டன.

CIB/INV/124/2018 – அரசுக்குரிய வரிகள் மற்றும் அறவீடுகளைச் செலுத்தாது தவிர்க்கும் நோக்குடன், கலப்பு உலோகச் சுருள்களாக கண்டறியப்பட்ட, கலப்பற்ற உலோகச் சுருளுக்கானதொரு அனுப்பு சரக்கு ஒன்றை மத்திய விசாரணைகள் பணிப்பக அலுவலர்கள் கண்டுபித்தனர். தணிக்கப்பட்ட பறிமுதலாக ரூபா 9,300,000.00 ஆன தொகை அறவிடப்பட்டதோடு, அபராதமாக ரூபா 200,000.00 ஆன தொகை அறவிடப்பட்டது.

CIB/INV/212/2017 - உரிய அரச வரிகள் மற்றும் தீர்வைகளை அரசுக்கு செலுத்தாது தப்பித்துக்கொள்ளும் வகையில் உலோக சுருள்கள் என பிரகடணப்படுத்தப்பட்ட கலப்பற்ற-உலோக சுருள்களைக்கொண்ட பொருட்களானது இப்பணிப்பக அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பில் குறைக்கப்பட்ட பறிமுதல் தொகையாக 300,000.00 ரூபாயும் அபராதத்தொகையாக ரூபா. 200,000 வும் அறவிடப்பட்டன.






2017 ஆம் ஆண்டுடன் 2018 இன் ஒப்பீட்டாய்வு

மனித வள அபிவிருத்தி

பயிற்சியும் செயலமர்வுகளும்

அ. வெளிநாடு

| துறை | இடம் | நாட்களது எண்ணிக்கை | அலுவலர்களது எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. இணக்கப்பாடு மற்றும் அமுல்படுத்தல் தொகுப்பு குறித்தான உலக சுங்க அமைப்பக ஆசிய/பசுபிக் பிராந்திய செயலமர்வு | ஜப்பான் | 5 நாட்கள் | 1 |
| 2. இயக்கம் சார்ந்த பென்கியா ï ஆசிய பசுபிக் பிராந்திய எஸ்.பீ.ஓ.சீ கலந்துரையாடல் | சிங்கப்பூர் | 3 நாட்கள் | 1 |
| 3. இலங்கை அலுவலர்களுக்கான சுங்க புள்ளிவிபரவியல்கள் மற்றும் அரசிறை முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு | சீனா | 11 நாட்கள் | 1 |
| 4. உலகளாவிய பாதுகாப்பு மாநாடு | பெல்ஜியம் | 3 நாட்கள் | 1 |

ஆ. உள்நாடு

| துறை | இடம் | நாட்களது எண்ணிக்கை | அலுவலர் களது எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. லகோஸ்ரி எஸ்.ஏ இனால் சுங்க அலுவலர்களுக்கான தயாரிப்பு பயிற்சித் திட்டம் | ஹில்டன் கொழும்பு | 1 நாள் | 6 |
| 2. சுங்க அலுவலர்களுக்கான திறன் கட்டியெழுப்புகை பற்றிய செயலமர்வு | ம.வ.அ கேட்போர்கூடம் | 1 நாள் | 6 |
| 3. சுங்க அலுவலர்களுக்கான தயாரிப்பு அடையாளங்காணல் பயிற்சி | கோல் பேஸ் ஹோட்டல், கொழும்பு | 1 நாள் | 4 |
| 4. nCEN இனை அமுல்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் | த.தொ.தொ பணிப்பகம் | 1 நாள் | 2 |
| 5. புலமைச் சொத்துரிமை எல்லை அமுல்படுத்தல் பற்றிய செயலமர்வு | லோட்டர்ஸ் பொன்ட் கேட்போர்கூடம், தாஜ் சமுத்திரா | 2 நாட்கள் | 7 |
| 6. சுங்க அலுவலர்களுக்கான இடர் முகாமைத்துவ செயலமர்வு | பிரதான கேட்போர்கூடம் | 3 நாட்கள் | 8 |
| 7. வழக்குத் தொடரல் மற்றும் விசாரணை செய்தல் பற்றிய தேசிய செயலமர்வு | சினமென் லேக்சைட் ஹோட்டல் | 2 நாட்கள் | 11 |
| 8. பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்தான தேசிய செயலமர்வு | மூவ் என் பிக் ஹோட்டல் | 5 நாட்கள் | 2 |

# சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது நீதிமன்றில் தொடுக்கப்படுகின்ற வழக்ககளை பேணுதல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாகவுள்ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பினை பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளன. இப்பணிப்பகமானது ஒரு பிரதிப் பணிப்பாளர், ஒரு அத்தியட்சகர், இரண்டு பிரதி அத்தியட்சகர்கள் மற்றும் இரண்டு உதவி அத்தியட்சகர்கள் ஆகியோரின் உதவியுடன் பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் இயங்குகின்றது.

பிரதான தொழிற்பாடுள்

1. ஏனைய பிரிவுகளுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்.
2. திணைக்களத்தின் சகல சட்டம் தொடர்பிலான விடயங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் சமுகமளித்லை உறுதிப்படுத்தல்.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள் 2018

| | |
|---|---|
| இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 48 |
| உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள் | 22 |
| மேல் முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள் | 21 |
| உயர் நீதிமன்ற விண்ணப்பங்கள் | 5 |

| | |
|---|---|
| 2017ஆம் ஆண்டிலிருந்து தொடர்கின்ற வழக்குகள் | **125** |

| | |
|---|---|
| 2018ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட விண்ணப்பங்கள் | **46** |
| உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள் | 8 |
| மேல் முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள் | 38 |

ஏனைய சட்ட விடயங்கள்

| | |
|---|---|
| வழங்கப்பட்ட உள்ளக சட்ட அபிப்பபிராயங்களின் எண்ணிக்கை | **35** |
| உதவியளிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 1 |
| உதவியளிக்கப்பட்ட உள்நாட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 37 |
| சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட சட்ட அபிப்பபிராயங்களின் எண்ணிக்கை | 5 |
| உதவியளிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் / மாவட்ட நீதிமன்றம் /நீதவான் நீதிமன்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 47 |
| சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பங்கேற்ற கலந்துரையாடல்களது எண்ணிக்கை | 59 |

# மத்திய புலனாய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய புலனாய்வுப் பணிப்பகமானது, அரசிறை இழப்புக்களைத் தவிர்த்தும் ்சமூக ரீதியான பாதுகாப்புடு தொடர்பான கடப்பாடுகளைப் பேணி, நேர்மையான வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் தொடர்பிலான திணைக்களத்தின் இலக்கினை அடையும் நோக்கில், சம்பந்தப்பட்ட புலனாய்வுகளை வினைத்திறன்மிக்கதாகவும் உரிய நேரத்திலும் மற்றும் துல்லியமாகவும் தொழிற்பாட்டு பிரிவிற்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இப்பணிப்பகத்தின் பொதுவான இலக்குகள் பின்வருமாறு :

- அத்தியவசிய புலனாய்வுகளை சமர்ப்பிப்பதன் மூலம் உயர் தரத்திலான தீர்மானம் மேற்கொள்கைக்கு உதவுதல்.
- சரக்கு மற்றும் பயணிகள் வெளியாக்கத்திலுள்ள புலனாய்வு மூலமான கட்டுப்பாட்டு முறைமையின் தொழிற்பாட்டை வலியுறுத்தல்.
- எல்லைக் குறுக்காக இடம்பெறுகின்ற சரக்கு போக்குவரத்துகள் தொடர்பான தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- புலனாய்வுத் தகவல்களை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் பகிர்ந்துகொள்வதற்கான தேசிய தொடர்புகொள்கை மையமாகவும் மற்றும் மத்திய நிலையமாகவும் செயற்பட்டு, அமுலாக்கல் தொடர்பிலான உதவிகளை வழங்கல்.

பிரதான தொழிற்பாடுகள்

1. தகவல்களை சேகரித்தல்
2. 24மணி நேர பொது மக்கள் தகவல் பெறல் கருமபீடத்தினை பேணலும் முகாமை செய்தலும்.
3. தகவலினை பகுப்பாய்வு செய்தலும் மற்றும் விருத்திசெய்தலும்
4. தகவலினைப் பரப்புதல் : உள்நாட்டில் பணிப்பகங்கள் ஊடாகவும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடாகவும்.
5. சர்வதேச சுங்க தகவல் முறைமையுடனான கூட்டிணைப்பு.
6. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய ஒற்றர் இணைப்பு அலுவலகத்தற்கான தேசிய தொடர்பு நிலையமாகவும் மற்றும் சர்வதேச அமுல்படுத்தல் ஒருங்கிணைப்புக்கான குவியல் நிலையமாகவும் செயற்படல்.
7. கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு பூர்வாங்க கருத்திட்டத்தை செயற்படுத்தல்.
8. திணைக்கள இடர் முகாமைத்துவக் குழுவின் ஒரு அங்கத்தவராக பங்கேற்றல்.
9. சரக்குப் பட்டியல் மீளாய்வு செய்தல், தகவல் மற்றும் புலனாய்வு அடிப்படையில் உயர் இடர் சரக்குகளை இடை நிறுத்தல்.
10. சுங்க விசாரணைகளை மேற்கொள்ளுதலும் மற்றும் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலினை தொடுத்தலும்.
11. முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல்களைப் பேணல்
12. சென் தரவு நிரல்களைப் பேணல்

2018ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

அட்டவணை 1 - பெறப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்

| வருடம் | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|
| பொது தகவல் பெறப்படும் கருமபீடம் ஊடாக பெறப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 32 | 42 | 55 |
| பிற மூலகங்களில் இருந்து (பெக்ஸ், கடிதங்கள், செய்திகள்) | 03 | 02 | 13 |
| மொத்தம் | **35** | **44** | **67** |
| | | | |
| நடவக்கை எடுப்பதற்காக பிற கிளைகளுக்கு பங்கிடப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 28 | 43 | 50 |

அட்டவணை 2 - பகிர்ந்தளிக்கப்பட்ட தகவல் எச்சரிக்கைகளது எண்ணிக்கை

| வருடம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| செயற்பாட்டு புலனாய்வுகளது எச்சரிக்கைகள் | | 06 | 07 |
| புலனாய்வு அறிக்கைகள் | | 05 | |
| உலக சுங்க அலுவலகம், சென் எச்சரிக்கைகள் | 16 | 14 | 05 |

அட்டவணை 3 –முன்னர் குற்றமிழைத்தவர்களது விபரங்கள் தொடர்பாக பல்வேறு கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவைகளது எண்ணிக்கை

| வருடம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல் அறிக்கைகளது எண்ணிக்கை | 62 | 124 | 114 |

அட்டவணை 4 - சுங்க இல்ல முகவர் மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை

| வருடம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| சுங்க இல்ல முகவர்கள் உரிமம் புதுப்பித்தல்கள் | 5825 | 6611 | 6885 |
| இலங்கை துறைமுக அதிகார சபை சரக்கு மேடை உதவியாளர் உரிமங்கள் (ஏ அங்கீகாரம்) | 1942 | 1424 | 1431 |
| இறக்குமதியாளர்களின் பெறுமதி சேர் வரி பதிவு பற்றிய ஆவணங்களின் சோதனை | இருக்கவில்லை | 1777 | 1963 |

அட்டவணை 5 – கொள்கலன் பாதுகாப்பு தொடர்பிலான பூர்வாங்க வேலைத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்ட (ஸ்கேன்) கொள்கலன்களின் எண்ணிக்கை

| வருடம் | 2017 | 2018 |
|---|---|---|
| மாற்றி ஏற்றப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை | 455 | 469 |
| உள்நாட்டு ஏற்றுமதி கொள்கலன்களது எண்ணிக்கை | 07 | 26 |
| கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை | 462 | 435 |

அட்டவணை 6 - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசாரணை மற்றும் புலனாய்வு முகவர்களுடனான தொடர்பு

| முகவர் | வேண்டுகோள்களது எண்ணிக்கை | | | பெறப்பட்ட பதில்களது எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2016 | 2017 | 2018 |
| டி.ஆர்.ஐ. - இந்தியா | 09 | 13 | 16 | 04 | 12 | 16 |
| ஜப்பானிலுள்ள இலங்கை தூதராலயம் | 15 | 03 | 17 | 11 | 4 | 15 |
| ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை தூதராலயம் | | | 01 | | | |
| எச்.எம். சுங்கம்-ஐக்கிய இராச்சியம் | | | | | | |
| சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதராலயம் | | | | | | |
| துபாய் தூதராலயம் | 01 | | | | | |
| ஐக்கிய இராஜ்ய தூதராலயம் | 01 | | | 01 | | |
| தாய்லாந்து சுங்கம் | | | | | | |
| மலேசியா சுங்கம் | 01 | | 02 | 01 | | 01 |
| வியட்நாம் சுங்கம் | | | | | | |
| தாய்லாந்து தூதராலயம் | | | | | | |
| றிலோ கொரியா | 05 | 02 | | 01 | | |

அட்டவணை 7 – சட்ட அமுல்படுத்தலிலான செயலாற்றுகை

| வருடம் | 2018 |
|---|---|
| இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடங்கிவைக்கப்பட்ட / கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 46 |
| இவ்வாண்டுக் காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 17 |
| விசாரணை மட்டத்திலான விடயங்களது எண்ணிக்கை | 59 |
| விற்பனை வரும்படிகளை சேகரிக்கவேண்டிய விடயங்களது எண்ணிக்கை | 41 |
| விசாரணை மட்டம் முடீவுறுத்தப்படாத நிலையிலுள்ள விடயங்களது எண்ணிக்கை | 207 |
| அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.) | 49,324,643 |

# அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

# பிரகடனங்கள் பணிப்பகம்

அறிமுகம்

சகல கடல் மார்க்கம் தொடர்பிலுமான இறக்குமதியாளர்களின் பிரதிநிதிகள் (பிரகடனதாரர்) தமது சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கும் இடமாக பிரகடனப்படுத்தல் பணிப்பகம் விளங்குகின்றது. மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான சுங்கப்பிரகடனங்களானது இப்பணிப்பகத்தின் கீழ்வருகின்ற மோட்டார் வாகனப் பிரிவுகளுக்கு தற்போது முழுமையாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இப் பிரகடனப்படுத்தல் பணிப்பகமானது பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது.

- 'டீ' கிளை
- நீள அறை
- மோட்டார் வாகனப் பிரிவு
- கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் தொடர்பான ஆவண செய்முறைப்படுத்தல் பிரிவு
- ஆவணம் கையாளும் நிலையம்

புதிய மீள் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசிறை மற்றும் சேவைகள் (கொழும்பு) கொத்தணியின் கீழ்மேற்படி சகல பிரிவுகளும் தொழிற்படுகின்றன. இப்பணிப்பகத்தின் படிநிலை பற்றிய சுருக்கமானது அதன் நிறுவனக்கட்டமைப்பில் இணைப்பு (அ) இல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்கள்

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோளானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் மற்றும் பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

i. நேரடி வர்த்தக உள்ளீடு ஊடாக சுங்கப் பிரகடனங்களைப் பெறுதல்.
ii. இற்றைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனம் தொடர்பிலான பொருட்பட்டியல் மற்றும் தீர்வைகள் செலுத்துகை மற்றும் ஏனைய அறவீடுகளை உறுதிப்படுத்தல்.
iii. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு விரைவான போக்கு வசதிகளை வழங்குதல்
iv. சுங்க அத்தியட்சகர் பெறுமதி மதிப்பீட்டாளர்கள் ஆகியோரினால் சுங்கப் பிரகடனத்தினைச் செய்முறைப்படுத்தல்.
v. கொள்கலன் சாலையிலுள்ள முழுக் கொள்கலன் பொருட்களையும் மற்றும் குத இல்லங்களிலுள்ள சில்லறைப் பொருட்களைக் கொண்ட கொள்கலன்களை வெளியாக்கல்.
vi. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு விரைவாக வெளியாகக்கூடிய வசதிகளை வழங்குதல்.
vii. தன்னியக்கச் செயலாக்கமானது, தாமதமின்றி சுங்கப்பிரகடனங்களை செயலாக்கம் செய்யும் வகையில் இறக்குமதியாளர்களுக்கு வசதியளிக்கும் நோக்கில் "அஸிகுடா வேல்ட்" ஊடாக தற்போது முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுங்கப் பிரகடனம் தொடர்பான அனைத்து விபரங்களும் தற்போது "அஸிகுடா"முறைமை மூலம் நீள அறையில் (2ஆம் மாடி) பெறப்படுகின்றன. இது நேரடி வர்த்த இடைப்பரிமாற்ற வசதிகளைப் பயன்படுத்தி தமது சுங்கப்பிரகடனத்தை தமது அலுவல்களிலிருந்து நேரடியாக இடுவதற்கு உதவுகிறது.
viii. பொருள் வகைப்படுத்தல் விடயங்கள் மாத்திரம் சுங்க அத்தியட்சகர்/ பெறுமதி மதிப்பீட்டாளர்களைக் கொண்ட சிறந்த பணியாட்தொகுதியினர் மூலம் கைமுறையினால் மேற்கொள்கொள்ளப்படுகின்றன.

இப்பணிப்பகத்தின் ஏனைய குறிக்கோள்கள்

i. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
ii. பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்களுக்கு வசதியளித்தல்.
iii. பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
iv. சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை 'டீ' கிளையூடாக மேற்கொள்ளல்.
v. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அரசுக்குரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.
vi. நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கிணங்க, தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.
vii. சலுகை அங்கீகாரமுடையோர்/ சட்ட ரீதியான இறக்குமதியாளர்களது பொருள்/ வாகனங்களை விரைவாக வெளியாக்குவதற்கு வசதியளித்தல்.

viii. தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல். அரச கொள்கைக்கிணங்க தீர்வை மற்றும் வரி தொடர்பான விலக்களிப்பு மற்றும் நிறுத்தி வைத்தல்/ தீர்வை தள்ளுபடி ஆகியன வழங்கப்படுகின்றன.
ix. மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவை தொடர்பிலான செயலாக்கத்தில் தாக்கம் செலுத்துதல்.

இப்பணிப்பகத்தின் அலுவலர்களது பொறுப்புகள்

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இவ் அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், உணவு மற்றும் ஔடதங்கள் அதிகாரசபை, சீனி ஆராய்ச்சி நிறுவனம், அழகு சாதனங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இலங்கை தர நிர்ணயம், அணுசக்தி அதிகாரசபை, தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்று அவதானிப்பு அறிக்கை போன்ற உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரம் தேவையான பொருட்கள் தொடர்பில் கண்காணிப்பாகவும் உள்ள அதேவேளை, இறக்குமதியாளர்களால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வருகின்ற விடயங்கள் தொடர்பில் விசேட கவனமும் செலுத்துகின்றனர்,

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம்
- முறைமையில் பாவிக்கப்பட்ட சரியான குறியீட்டு இலக்கங்களைப்ப பயன்படுத்தி அனுப்பு பொருட்கள் பற்றிய முழு விபரம்
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல்
- அனுப்பு பொருட்களின் உண்மையான பரிமாற்றுப் பெறுமதியை பிரகடனப்படுத்தல்.
- விதிக்கத்தகு நாணய வகையினை (நாணய மாற்று விகிதம்) பயன்படுத்தி பெறுமதிகளை பிரகடனப்படுத்தல்.
- அனுப்பு பொருட்களுக்கான பெறுமதியை (வெளிநாட்டு நாணயமாற்று) ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல்.
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதப்பத்திரங்கள், மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினது இணைத்தல்

மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் ஒழுங்குமுறையில் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பொருள் வெளியாக்கலுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தக்கூடும்.

மேற்கூறப்பட்டவாறாக இப்பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளுக்கிணங்க 05 பிரதான பிரிவுகளை கொண்டுள்ளன.

"டீ" கிளை

டீ - கிளையானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ மற்றும் இன்னும் அறியப்பட்ட நான்கு விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது முன்னர் நிருவாகக் கிளையெனப்பட்ட தற்போதைய மனித வள முகாமைத்துவப் பணிப்பகமாக விருத்தியடைந்துள்ளது. விடயம் சீ இலிகிதர்கள் துறைமுக அறவீடுகளைக் கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. தற்போது இது தனியொரு அமைப்பாகத் திகழ்கிறது. பழைய டீ கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

'டீ' கிளையானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன.

- டி ஆர் எ பிரிவு
- வங்கி உத்தரவாதக் பிரிவு
- தீர்வை விலக்களிப்புக் பிரிவு
- தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு

- காணே பிரிவு
- கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
- விசாரணைக் பிரிவு
- மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு/சுங்க பிரதிப் பணிப்பாளரின்(டீ) தலைமையில்

டீ கிளையினால் கையாளப்படுகின்ற ஒருசில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்

1. நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
2. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
3. வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
4. பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
5. நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.
6. பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
7. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் எற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
8. கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
9. தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
10. கண்காணிப்பு நோக்கங்களுக்காக சி.பி.டி கானே அல்லது எ.ரி.எ கானே திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
11. குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.
12. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
13. இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் /சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பிலான மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் எதனோல் மற்றும் மோட்டார் வாகனத்தினது வெட்டப்பட்ட பாகங்களது கண்டுபிடிப்பு போன்றவற்றிற்கு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் எற்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.
14. அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற முகவர்களுடன் கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்.

நீள அறை

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வை போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த பிற சகல கப்பல் சரக்குகள் தொடர்பிலான இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனங்கள் (கஸ்டெக் எனவழைக்கப்படுகிறது) சமர்ப்பிக்கப்படும் இடம் சுங்க நீள அறையாகும். மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது முழுமையாக மோட்டார் வாகனத்தினப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது இதர பல்வேறு வரிகளையும் சேகரிக்கின்றன. அதாவது ;

- பெறுமதி சேர் வரி
- துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
- தேசக் கட்டுமான வரி
- விசேட பண்ட அறவீடு
- உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி
- பிற அரச நிறுவனங்கள் சார்பிலலன செஸ் வரி

சுங்கப் பிரகடன செய்முறை அலுவலர்கள் இயைபுமுறைக்குறியீடு தொடர்பில் இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை தொர்பில் சுங்கப் பிரகடன செய்முறைக்காக 05பிரிவுகளாக வகுத்துள்ளனர். அவை,

- ஏ பிரிவு - 01 ï 44 ஆம் இயைபுமுறை குறியீடு
- பீ பிரிவு - 45 ï 73 ஆம் இயைபுமுறை குறியீடு
- சீ பிரிவு - 74 ï 84 ஆம் இயைபுமுறை குறியீடு
- டீ பிரிவு - 85 ï 97 ஆம் இயைபுமுறை குறியீடு (மோட்டார் வாகனங்களுக்கானவை தவிர)
- ஈபிரிவு - மிக விரைவில் பழுதடையக்கூடிய பொருட்கள்,உணவுப் பொருட்கள், மருந்து, குவியலிலான பொருட்கள் போன்றவை.

சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 47 இன் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக சுங்கப்பிரகடனங்களது 5 பிரதிகளை (உத்தரவாதப் பிரதி, விநியோகப் பிரதி, புள்ளிவிபரவியல் பிரதி, நணயமாற்றுப் பிரதி, குழுக்கள் பிரதி) இறக்குமதியாளர்கள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சுங்கப் பிரகடனம் பின்வரும் துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- ✓ ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு
- ✓ விநியோகக் கட்டளை
- ✓ பொருள் விலைப்பட்டியல் (என்.எப்.ஈ. அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)
- ✓ பொதியிடப்பட்ட பட்டியல்
- ✓ இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்
- ✓ பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்
- ✓ மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், அது தொடர்பில் தேவையான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை தர நிர்ணயச் சான்றிதழ் மற்றும் அழகு சாதனப் பொருட்கள், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை போன்ற அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.
- ✓ இரண்டு பிரதிகளில் பூரணமாக நிரப்பப்பட்ட பெறுமதிப் பிரகடனம்
- ✓ வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபனம்
- ✓ பொதிகள் பற்றிய பட்டியல்
- ✓ ஏதேனும் விசேட சான்றிதல் (வெளிநாட்டு ராஜதந்திரிகள்,தீர்வைத் தள்ளுபடி, சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றம் துறைமுக கப்பலேற்ற அவதானிப்பு அறிக்கை, சீனி ஆராய்ச்சி நிறுவனம்)

தனியானதொரு சுங்கப்பிரகடனம் மூலம் அதிகமான பொருட்கள் பதியப்பட்டு போதும் மற்றும் பல்வேறு இயைபு முறைக் குறியீடுகள் மூலம் வகைப்படுத்தப்பட்டுகின்ற சந்தர்ப்பத்திலும், சம்பந்தப்பட்ட பிரிவானது பொருள்களினடிப்படையில் அல்லது விதிக்கத்தகு அதிகூடிய தீர்வை மற்றும் பிற அறவீடுகள் குறித்து தீர்மானித்தல் வேண்டும்.
சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழான பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை ï ஆ ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள 33 இற்கும் மேலான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில்,

முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

மோட்டார் வாகனப் பிரிவு

அசிக்குடா எனும் மென்பொருளானது தற்போது எக்சஸ் வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்வதற்கான வசதியினை வழங்கும் வகையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் சுங்கத்துடன் தொடர்பற்ற முறையிலான மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்வதைத் தடுப்பதற்கு ஏதுவாகவிருக்கும்.சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது இப்பிரிவானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தும்:

- ✓ அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
- ✓ அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
- ✓ டீ.பீ.எல். மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
- ✓ கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

வாகனங்களுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தும் போது இப்பிரிவிலுள்ள அலுவலர்கள் பின்வரும் பின்வரும் விடயங்கள் சரியாக இருப்பதை உறுதிப்படுத்தல்,

-
  - பதிவுச் சான்றிதழ்
  - பரிசோதனைச் சான்றிதழ்
  - விலைப்பட்டியல்
  - வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை

  என்பவற்றுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளமை

- வாகனங்களின் காலம் சரியாக மதிப்பிடப்பட்டுள்ளமை
- குறித்த வாகனம் தொடர்பில் முகவர்களது பெறுமதி சரியாக கொடுக்கப்பட்டுள்ளது.
- விலைப்பட்டியலுக்கு இணங்க நாணயங்கள் சரியாகப் பதிப்பட்டுள்ளமை.
- பிரகடனப்படுத்தப்பட்ட வாகனம் சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
- கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,
- பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
- சலுகை தொடர்பிலான இறக்குமதிகளுக்கு உரிய உத்தரவாதப் பத்திரம் வழங்கப்படுதல், இதன் போது, வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சுங்கப்பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் ஆவணம் செய்முறைப்படுத்தல் கூறு

திணைக்களத்தின் மறுசீர் திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒரு பகுதியாகவிருந்த பிணைகள் பிரிவானது, பிணைப்படுத்தல் மற்றும் பிணையிலிருந்து எடுத்தல் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலானது இப்பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். எனினும், இங்கே கைத்தொழில் மற்றும் சேவைகளுக்கான வேறானதொரு பணிப்பகம் உள்ளன. தொடர்புபட்ட சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது பிரகடனப்படுத்தல் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆவணப்படுத்தல் நிலையம்

இந்நிலையமானது தற்போது சாமஸ் குயேவில் அமையப்பெற்றுள்ளதுடன், எதிர்காலத்தில் இதனைப் புதிய தலைமை அலுவலகக் கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் அமையப்பெற்றுள்ள நீள அறையுடன் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு,

- ✓ சகல முழுக் கொள்கலன் பொருட்களுக்குமான சுங்க வாயில் அனுமதிப்பத்திரம் (உள்ளக) வழங்குதல். (இறக்குமதியாளர்கள், முதலீட்டுச் சபை, இன்பெக், பிணைகள், பயணிகள் உடன் வராத பொதிகள், அரசிறைச் சேகரிப்புச் செயலணி அடங்கலான பல்வேறு விசாரணைப் பிரிவுகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலன்கள்)

- ✓ அவர்களது இடத்திலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. வாயில் அனுமதிப் பத்திரத்தினை விநியோகிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- ✓ ஆவணப்படுத்தல் நிலையத்திற்கு பெறப்படுகின்ற ஆவணங்கள்

  - ○ நீள அறை மற்றும் பிணைப் பிரிவிலுள்ள நுணுக்கமாக ஆய்வுசெய்யும் பிரிவுகளில் இருந்தான சுங்கப் பிரகடனங்கள் நுட்பமாக ஆராயப்படுவதுடன், சுங்க உள்ளக வாயில் அனுமதிப்பத்திர விநியோகத்திற்கான அதிகாரத்தைப் பெறும் வகையில் ஆவணப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்படல்.

  - ○ குறித்த கொள்கலன் சாலையிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. இன் அதிகாரத்தினை பெறுவதற்காக பட்டியல் மற்றும் கப்பலேற்றுச் சான்றிதழ் போன்றவற்றின் பிரதியுடன் விநியோகக் கட்டளையின் இளஞ்சிவப்புப் பிரதியுடன் ஆவணப்படுத்தல் நிலையத்திலுள்ள சுங்க அத்தியட்சகர்களுக்குச் சமர்ப்பிக்கப்படல். மேற்குறிப்பிட்ட விநியோகப் பிரதியின் இளஞ்சிவப்புப் பிரதியானது ஆவணப்படுத்தல் நிலையத்தில் முதல் தடவைக்காக சுங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் (பிரகடப் பணிப்பகத்தில், நீள அறையில் செய்முறைப்படுத்தப்படும் அதே ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இணங்கப்படவில்லை என்பதுடன் சுங்கத்தினால் ஏதேனும் குறிப்புகள் உள்ளடக்கப்படவில்லை).

- ✓ ஆவணப்படுத்தல் நிலையத்தில் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள்

  - ○ இந்நிலையத்தில் நுட்பமாக ஆராயப்படும் சுங்கப் பிரகடனத்தின் விநியோகப் பிரதி மற்றும் விநியோகக் கட்டளையின் இளஞ்சிவப்புப் பிரதி என்பன ஆவணப்படுத்தல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் (சுங்கப் பரிசோதகர் தரம் 1 இனால் கொண்டுவரப்படல்).

  - ○ சுங்க அத்தியட்சகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல்.

  - ○ சுங்க அத்தியட்சகரால் (ஆவணப்படுத்தல் நிலையம்) ஆவணங்கள் ஊர்ஜிதம் செய்து ஒப்பமிடப்படுதல்.

    - ○ முறைமைக்குள் பதிவுசெய்யும் வகையிலும் மற்றும் கொள்கலன் சாலையிலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்காகவும் விநியோகப் பிரதியின் இளஞ்சிவப்புப் பிரதி இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. என்பவற்றுக்கு சமர்ப்பிக்கப்படல்.

    - ○ முறைமைக்கு மற்றும் சுங்க உள்ளக வாயிலில் நுழைவதற்கான இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. வாயில் அனுமதிப் பத்திரத்துடன் சுங்கப் பிரகடனத்தின் விநியோகப் பிரதியினை சுங்க உதவி அத்தியட்சகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவர்களுக்கு அனுப்பப்படல்.

  - ○ சுங்க வாயில் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட பின்னர், சுங்க உள்ளக வாயில் அனுமதிப் பத்திரத்தின் பச்சை நிறப் பிரதியுடன் தொடர்புடைய சுங்கப் பிரகடன விநியோகப் பிரதியின் போட்டோப் பிரதிகள் மற்றும் சரக்கு மேடை உதவியாளரின் சுங்க இல்ல முகவர் அனுமதிப்பத்திரம் என்பன பிரதம சுங்கப் பரிசோதகர் (ஆவணப்படுத்தல் நிலையம்) அவரால் பதிவுசெய்யப்பட்டு கோவை இடப்படுகின்றன.

  - ○ இவ்விரு வாயில் அனுமதிப் பத்திரங்கள் (இலங்கைத் துறைமுக அதிகாரசபை/ எஸ்.ஏ.ஜி.ரீ./ சீ.ஐ.சீ.ரீ. மற்றும் சுங்க உள்ளக வாயில் அனுமதி) பெறப்பட்ட பின்னர், கொள்லன்கள் கொள்கலன் சாலையிலிருந்து அகற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் சுங்க வெளிச்செல்லல் அனுமதி விநியோகிக்கப்பட்டதும், புதிய கொள்கலன் வாயிலுக்கு அகற்றப்பட்டு துறைமுகப் பிரதேசங்களிலிருந்து கொள்கலன்களை அகற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

  - ○ புதிய கொள்கலன் வாயிலில் கொள்கலனில் சுங்க கொள்கலன் அச்சு பொறிக்கப்பட்டுள்ளதுடன், சுங்க வாயில் அனுமதிப்பத்திரத்தில் பொறிக்கப்பட்ட அச்சின் இலக்கம் குறிக்கப்பட்டுள்ளன.

கானே (**Canet)**

1. ஏ.ரீ.ஏ. மற்றும் சீ.பீ.டீ. என இருவகைக் கானே திட்டங்கள் காணப்படுகின்றன.

2. ஏ.ரீ.ஏ. கானே ï ஏ.ரீ.ஏ. ஆனது பிரென்ச் மொழி எழுத்தின் முதலெழுத்தாகவுள்ளதுடன் ஆங்கிலத்தில் இது தற்காலிக அனுமதி என்ற கருத்தினை வழங்குகின்றது.

3. ஏ.ரீ.ஏ. கானே ஆனது நாட்டிற்குள் கொண்டுவரப்படும் வியாபார மாதிரிகள், கண்காட்சிப் பொருட்கள் மற்றும் தொழில்வாண்மை உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் தற்காலிக இறக்குமதிகள் இதில் அடங்கும்.

4. சீ.பீ.டீ. கானே - இது மோட்டார் வாகனங்கள் மற்றும் பாரிய வாகனங்களுக்கானவை ñCarnet De Passages En Douane"

5. Triptique - மோட்டார் சைக்கிள்களுக்கானவை

6. 1992 இல் திருத்தப்பட்டவாறான தனியார் வீதி வாகனங்கள் (1954) மற்றும் வியாபார வீதி வாகனங்கள் (1956) ஆகிய இரண்டினதும் தற்காலிக இறக்குமதி தொடர்பில் சுங்க பேரவைகளது ஏற்பாடுகளுக்கிணங்க வரையப்பட்ட இந்த கானே ஆனது பட்டியற்படுத்தப்பட்ட நாடுகளில்/ சுங்க இராச்சியங்களில் உபயோகிக்கப்படலாம்.

7. எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ அதே நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களை உள்ளடக்கிய ஏதேனும் தற்காலிக செயற்பாட்டிற்கு இந்த ஏ.ரீ.ஏ. நடைமுறையினை பிரயோகிக்க முடியும்.

8. குறிப்பிட்ட காலப்பகுதிக்கிடையில் வாகனத்தினை மீள ஏற்றுமதி செய்தல் மற்றும் மோட்டார் வாகனங்களது தற்காலிக நிர்வாகத்துடன் தொடர்புபட்ட சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் போன்ற நிபந்தனைகளின் பேரில் இது விநியோகிக்கப்படுகின்றன.

9. ஏ.ரீ.ஏ. கானே ஏற்றுக்கொள்ளப்பட்டதும் தேவைப்படவிருக்கும் பிற ஏற்றுமதி ஆவணங்கள் (நாணயக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் அல்லது ஏற்றுமதி அனுமதிப் பத்திரம்) ஏதேனும் பதிலீடு செய்யலாகாது. அத்தகைய தேவைப்பாடுகள் தனித்தனியாக அதனுடன் இருத்தல் கட்டாயமானதாகும்.

10. கானேயானது உரிய முறையில் விடுவிக்கப்படல் வேண்டுமென்பதுடன், வாகனம் நாட்டை விட்டுப் போகும் போது சுங்கத்தினால் முத்திரையிடப்பட்ட ஏற்றுமதிப் பத்திரத்திற்கு ஒத்த இறக்குமதிப் பத்திரத்தில், சுங்கத்தினால் முத்திரையிடப்படல் கட்டாயமானதாகும்.

11. கானே தொடர்பில் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் போது, கானே உரிமையாளர் ஒரு பிரகடனத்தில் ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் கானேயினைப் பாவிப்பதற்காக வழங்கப்படும் வழிகாட்டிகளுக்கு இணங்க உரிய விநியோகிப்பு அதிகாரியுடன் ஒப்பந்தமொன்றினையும் செய்ய வேண்டும்.

12. பேரவையின் ஏற்பாடுகளில் ஏதேனும் மீறுகை, மாற்றீடுகள், பிழையான பிரகடனம் அல்லது நடித்தல் என்பன குற்றமாகக் கருதப்பட்டு குறித்த நாட்டினது சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறான அபராதத்திற்குள்ளாக வேண்டியேற்படும்.

13. ஏ.ரீ.ஏ. ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக இந்த ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்ட குழுக்களாகவிருக்கின்ற சுங்க அதிகாரங்களால் வழங்கப்பட்ட பின்வரும் கையாளுகைகளுக்காக ஏ.ரீ.ஏ. கானேயினைப் பாவிக்க முடியும்.
    - 13.1 தொழில்வாண்மை உதிரிப்பாகங்கள் பேரவை
    - 13.2 கண்காட்சிகள் மற்றும் சந்தைகள் பேரவை
    - 13.3 வியாபார மாதிரிகள் பேரவை
    - 13.4 பொதியிடல் பேரவை
    - 13.5 கடல்சார் கட்டணங்கள் பேரவை
    - 13.6 விஞ்ஞான உதிரிப்பாகங்கள் பேரவை
    - 13.7 Pedagogic உபகரண பேரவை
    - 13.8 தனியார் வீதி மற்றும் வியாபார வீதி வாகனங்கள் பேரவை
    - 13.9 வானூர்தி மற்றும் இன்பகரப் படகு பேரவை

சீ.டி,பீ. நடைமுறை **(Caenet De Passage)**

1. கானேயினால் உள்ளாக்கப்பட்ட பொருட்களது ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு உள்ளடக்கம் மற்றும் பிரிவுகள் என்பவற்றைக் கொண்டுள்ளன. உள்ளடக்கமானது பின்வரும் விடயங்கைள் கொண்டுள்ளது:
    - 1.1 விநியோக அமைப்பு
    - 1.2 உள்ளகப் பிணைப்புச் சங்கிலி

1.3 வைத்திருப்பவரின் பெயர்

1.4 அனுமதிக்கும் காலம்

1.5 அந்த நாடுகளில் செல்லுபடியாகவிருத்தல் மற்றும் ஒத்துள்ள உத்தரவாதமளிப்பு அமைப்புகள் இருத்தல்

1.6 பொருள் வைத்திருப்பவரது பிரதிநிதி ஒருவரால் கானே பயன்படுத்தப்படின், பிரதிநிதியன் பெயர்

2. முன் பக்கத்தில் பொருள் எவ்வகை விடயங்களில் பாவிக்கப்படும் என்பதைக் குறிப்பிடுதல் (உதாரணமாக, கண்காட்சிகளுக்கான மாதிரிகள் போன்றன). கானேயினால் உள்ளாக்கப்படவிருக்கும் சகல பொருட்களது முழு விபரங்களும் அட்டையின் பிற்பக்கத்திலான பொதுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொடர் கடதாசிகள் அட்டையில் இடம் ஏதேனும் இருப்பின் சேர்க்க முடியும் என்பதுடன், கானேயினால் உள்ளாக்கப்பட்டுள்ள சகல பொருட்களது விபரங்களுக்கும் தாள்கள் போதுமானதாகவிராது. இங்கு தேவைப்படும் விபரங்களாக ï பொருளின் விபரம், குறியீடுகள் மற்றும் இலக்கங்கள் (ஏதேனுமிருப்பின்), அளவு, கானே பாவிக்கப்படும் நாட்டின் குறித்த பொருளின் பெறுமதி மற்றும் உற்பத்தி செய்த நாடு என்பனவாகும். குறித்த பொருள் ஏதேனும் குறியீட்டு இலக்கத்தினைக் கொண்டிராத வேளை, சுங்கமானது அடையாளப்படுத்தல் குறியீடுகளை பிரதிசெய்யும்.

3. சுங்கப் பணிப்பாளர் கானே செயன்முறையினை அங்கீகரித்தல் மற்றும் பாவனைக் காலத்தினைத் தீர்மானித்தல்

4. கானேயினைப் பதிவுசெய்யுமாறு சுங்க அத்தியட்சகர் (டீ கிளை) அவர்களுக்கு சுங்கப் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

5. கானேயினைப் பதிவுசெய்யுமாறும் மற்றும் பிரதி ஆவணங்களைப் பத்திரப்படுத்துமாறும் சுங்க உதவி அத்தியட்சகருக்கு சுங்க அத்தியட்சகர் அறிவுறுத்தல்.

6. சுங்க உதவி அத்தியட்சகர் கானேவினைப் பதிவுசெய்வதுடன், மோட்டார் வாகனப் பிரிவில் சுங்கப் பிரகடனத்தினைச் செய்முறைப்படுத்துவதற்கு உரிமையாளரை அனுமதித்தல்.

7. சுங்க அத்தியட்சகருக்கு முன்னால் இறக்குமதிச் சீட்டு நிரப்பப்பட்டு அதன் மீது ஒப்பமும் முத்திரையும் இடப்பட்டு, இந்த வாகனமானது கானே திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அதனை 3 மாதங்களுக்குள் மீள ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும் என்ற நிபந்தனையில் இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு சுங்கப் பணிப்பாளர் (பிரகடனம்) அவர்களின் முன்னிலையில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்.

8. பிரதான பதிவினைப் பேணுதலும் செல்லுபடித் திகதி தொடர்பில் ஒரு பட்டியினை இடல்.

9. குறித்த வாகன விநியோக அனுமதியினை வழங்கும் வகையிலான பிரதிச் சுங்கப் பணிப்பாளரின் அதிகாரத்திற்காக சுங்கப் பிரகடனத்துடன் மோட்டார் வாகனப் பிரிவுக்கு அப்பொழுதே அனுப்பப்படல்.

10. வெளிநாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் நோக்கத்துடன் கடைகளில் அல்லது வியாபார வாசஸ்தலங்களில் தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிகள் இந்த கானே திட்டத்தில் உள்ளடங்காது.

10.1 தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்கிடையில் இல்லாவிடின் செல்லுபடியாகும் காலத்திற்குக் குறைந்த காலத்திற்குள் மீள ஏற்றுமதி செய்யப்படல்.

10.2 பதிவுசெய்யப்படும் நிலையத்தில் சுங்கத்திற்கு கானே சமர்ப்பிக்கப்படும் போது சுங்க அலுவலர் கானேயில் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான பொருள் பட்டியலில் குறித்த பொருளைச் சோதனை செய்தல் வேண்டும்., பொருளின் மீது ஏதேனும் அடையாளக் குறிகள் இருப்பின் கானேயின் பற்றுச்சீட்டின் மீது அடையாளக் குறியீட்டினைக் குறித்து இறக்குமதி வவுச்சர் பாகத்தினைச் சுங்கத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் மீது தேவையான விடயங்களை சுங்கம் குறிப்பினையிடும். இறக்குமதி செய்யப்பட்ட குறித்த பொருள் மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றதா என்பதை மீளப் பரிசோதிக்கும் வகையில் வவுச்சரானது டீ கிளைக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், அவை கோவையிலிட்டு பாதுகாப்பாகப் பேணப்படல் வேண்டும்.

11. கானே தொடர்பில் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது அவை மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றன, சுங்கமானது பொருட்களை இறக்குமதி செய்த விபரங்களுடனும் மற்றும் மீள ஏற்றுமதியினது சுங்க பாகப் பிரிப்பினையும் பரிசோதனை செய்யப்படும் என்பதுடன், பற்றுச்சீட்டின் மேல் தேவையான குறிப்புக்களை இடுதல். மீள ஏற்றுமதி வவுச்சரில் பிரிக்கப்பட்ட பகுதி டீ கிளைக்கு அனுப்பப்படுதல்.

13. பொருட்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடர்பிலான கானேயின் பாவனையானது நாட்டின் தேசிய சட்டத்திற்கேற்ப இருத்தல்.

14. கானே தொடர்பில் ஏதேனும் மோசடி, மீறுகைகள் அல்லது கானேயின் ஏற்பாடுகளை அல்லது நாட்டின் தேசிய சட்டங்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்றவற்றுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை சுங்கம் மேற்கொள்ளும் என்பதுடன், அத்தகைய மீறுகை தொடர்பில் அபராதங்கள் விதிப்பதற்கும் சுங்கத்திற்கு உரிமையுள்ளது.

செயலாற்றுகை

1) ரி்அஸிகுடா வேல்ட்ò எனப்படுகின்ற தன்னியக்க முறைமையூடாக வர்த்தகத்திற்கான வசதியளிப்பானது, விசேடமாக அவர்களது சரக்குகளை விரைவாக வெளியாக்கும் வகையில் இதுவரை இறக்குமதியால் வெற்றிகரமாகப் பெறப்பட்டுள்ளது.

2) நேரடி வர்த்தக உள்ளீடு (டீ.ரீ.ஐ) முறையானது தற்போது அலுவலகத்தின் வேலைப்பளுவைக் குறைத்துள்ள அதேவேளை, அதிகாரிகளது வினைத்திறன் மற்றும் பயனுறுதிமிக்க செயற்பாடுகளை விருத்திசெய்துள்ளது.

3) இப்பணிப்பகத்தின் கைமுறைப் பதிவேட்டுப் பேணுகைத் தொழிற்பாடானது புதிய ஏற்பாடுகளினால் நீக்கப்பட்டுள்ள அதேவேளை, தகவல்களை ஒன்றுசேர்த்தல் தொடர்பான நேரவரை மற்றும் அதன் தரம் ஆகியன தற்போது அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இலகுவாக்கப்பட்டுள்ளன.

4) 2018 இல் இப் பணிப்பகத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா. 605,,318,350,758 ஆகவுள்ள அதேவேளை, அரசின் மொத்த சுங்கத் தீர்வையாக ரூபா. 605,252,979,902 சேகரிக்கப்பட்டுள்ளது. இவ் அறவீடுகள் தவிர்ந்த ரூபா. 55,370,856 இனை அபராதம்/ பறிமுதல்/ மற்றும் மேலதிக அறவீடுகளாக 2018 இல் ரி்டீò கிளையினால் சேகரிக்கப்பட்டுள்ளன.

5) தெரிவுசெய்யப்பட்ட தங்க அட்டை உரிமையாளர்களுக்கான வியாபாரத்திற்கான பச்சை வாயில் வசதியானது கடந்த வருடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. 2014ஆம் ஆண்டில் தங்க அட்டை வைத்திருப்பவர்கள் மற்றும் ஒரு சில மேலதிக வியாபாரிகளுக்கும் "விரைவான போக்கு வெளியாக்கல் முறை" அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த வகையில் தற்போது இம்முறையில் உள்ளவர்களது எண்ணிக்கை 218ஆகும். இந்த விசேட வியாபாரிகளை கையாளும் வகையில் விசேடமாக சுங்க பிரதிப் பணிப்பாளர் இருவர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

6) "இலத்திரனியல் பொருட்பட்டியல்" முறைமையானது தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கப்பல் முகவர்கள் தமது பொருட்பட்டியலை, கப்பல் வாரியாக பத்திரங்களாகச் சமர்ப்பிக்காது, இணையம் ஊடாக சுங்கத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். இம்முறைமையானது தற்போது திணைக்களப் பயனாளர்களுக்கு வெற்றிகரமாக உதவி வருகிறது.

7) வாகன அனுமதிப் பத்திரங்கள் ரி்டிò கிளையின் பிரதி சுங்கப் பணிப்பாளரினால் இலத்திரனியல் முறை மூலம் நீக்கப்பட்டுவருகின்றன.

8) DTI முறைமையின் அறிமுகம் மற்றும் ஈ-பொருட்பட்டியல் பற்றிய அறிமுகம் ஆகியன நீள அறை குறித்தான வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையினையும் வெற்றிகரமான முறையில் மேம்படுத்தியுள்ளது.

2018 ஆம் காலப்பகுதியிலான செயலாற்றுகை தொடர்பில் பின்வரும் விடயங்களது சாராம்சம் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| i. | அமைப்பக கட்டமைப்பு - பிரகடனப் பணிப்பகம் | இணைப்பு - அ |
| ii. | மாதாந்த செயலாற்றுகை அறிக்கை 2018 - மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - ஆ |
| iii. | மொத்த அரசிறை 2018 - நீள் அறை மற்றும் மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - இ |
| iv. | அரசிறை பகுப்பாய்வு - நீள் அறை மற்றும் மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - ஈ |
| v. | வருவாய் வகைப்படுத்தல் - நீள் அறை மற்றும் மோட்டார் வாகனப் பிரிவு | இணைப்பு - உ |
| vi | செயலாற்றுகை அறிக்கை 2018 ï டீ பிரிவு | இணைப்பு - ஊ |
| vii. | டீ பிரிவின் இதர செயற்பாடுகள் | இணைப்பு - எ |
| viii | 2018ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை | இணைப்பு - ஏ |

# கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது, குறிப்பிட்ட நடைமுறைகளின் கீழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளின் தேவைப்பாடுகளுக்கான வெளியாக்கத்தினை இலகுபடுத்தும் நோக்கில் பாதுகாப்பு/ பிணையிடலின் பேரில் தற்காலிகக் களஞ்சியப்படுத்தலுக்கான பொருள் இறக்குமதி தொடர்புடைய சுங்க தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. மேலும் விசேடமாக, இலங்கை முதலீட்டுச் சபை போன்ற தொடர்புபட்ட வரிசை அதிகாரங்களுக்கிடையில் பொருத்தமான ஒருங்கிணைப்போடு இலங்கையில் இறக்குமதி தொடர்பான சம்பிரதாயப் போக்கின் வகைப்படுத்தலுக்கான பாதையினைக் கண்டுகொள்ளும் நோக்கில் உற்பத்தி செய்கை/ ஏற்றுமதிக் கைத்தொழில் துறையினை ஊக்குவிக்கிறது.

பிரதான பிரிவுகளும் மற்றும் அவற்றினது கூறுகளும்

நிருவாகம் மற்றும் வங்கி உத்தரவாதப் பிரிவு
- வங்கி உத்தரவாதக் கூறு

ஏற்றுமதி வசதியளித்தல் மற்றும் கருத்திட்டப் பிரிவு
- ஏற்றுமதி வசதியளித்தல் கூறு
- கருத்திட்டக் கூறு
- களஞ்சியசாலை பாதுகாப்புக் கூறு
- தீர்வையற்ற கடைக்கான பொருள் வினியோக பிணைக் கூறு

புலனாய்வு மற்றும் ஒப்பாய்வுப் பிரிவு
- பிணையிடல் புலனாய்வுக் கூறு
- சுங்கம், முதலீட்டுச் சபை கூட்டிணைப்புக் கூறு
- முதலீட்டாளர் வசதியளித்தல் நிலையம்

கண்காணப்பு மற்றும் முறைமை கணக்காய்வுப் பிரிவு
- கண்காணிப்பு மற்றும் மீளளிப்புக் கூறு

அஞ்சல் மதிப்பிடல் பிரிவு

பிரதான தொழிற்பாடுகள்

இப்பணிப்பகமானது அரசாங்கத்தின் வியாபார இலகுபடுத்தல் கொள்கைகளது அமுல்படுத்தல்/நிருவாகித்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாயுள்ளன. இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு :

1. சுங்கப் பிணைப்படுத்தப்பட்ட குத இல்லங்களை முகாமை செய்தல்.
2. ஏற்றுமதிச் செய்முறைக்கான தற்காலிக இறக்குமதி மற்றும் தீர்வைத் தள்ளுபடித் திட்டம் போன்ற ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களை முகாமை செய்தல்.
3. தீர்வையற்ற கடைகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை முகாமைசெய்தல்.
4. முதலீட்டுச் சபை வியாபார நிறுவனங்களால் இறக்குமதி/ ஏற்றுமுதி செய்யப்படும் பொருட்களை வெளியாக்குவதில் முதலீட்டுச் சபையுடன் கூட்டிணைப்பினை பேணுதல்.
5. குத இல்லங்கள், களஞ்சியக் கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு மற்றும் முதலீட்டுச் சபையின் இறக்குமதிகள்/ ஏற்றுமதிகள் ஆகியவற்றுக்கான தகவல் தொழில்நுட்ப முறைகளைப் பேணுவதில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பப் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.
6. ரீதீர்மானமற்ற பரிபாலனம்ô தொடர்பிலான சுங்கப் பிரகடனச் செய்முறையில் பிரகடனங்கள் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.

பிணை புலனாய்வுப் பிரிவு

| | |
|---|---|
| 2017ஆம் ஆண்டிலிருந்தான வழக்குகள் | 33 |
| 2018ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகள் | 22 |
| முன்னைய ஆண்டு உள்ளடங்கலாக முடிவுறுத்தப்பட்டவைகளது எண்ணிக்கை | 14 |
| 2018ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாத வழக்குகள் | 12 |
| 2017ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாத வழக்குகள் | 29 |
| மொத்த பறிமுதல்கள் (ரூபா) | **72,205,561.00** |

திட்டமிடல் பிரிவு

பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை தொழிற்பாடு

| | |
|---|---|
| பிணை புதுப்பித்தல்கள் | 107 |
| சிபாரிசு செய்யப்பட்ட புதிய பிணைகள் | 10 |
| பிணை களஞ்சிய செயற்பாடுகளிலிருந்து அகற்றியவை | 01 |
| பிணை களஞ்சியசாலைகளை மேற்கொண்டு நடாத்துபவர்கள் | 14 |

கூட்டுறவு / தனிப்பட்ட வங்கி உத்தரவாங்கள்

| | |
|---|---|
| உத்தரவாத புதுப்பித்தல்கள் | 131 |
| புதிய உத்தரவாதங்கள் | 13 |

வங்கி உத்தரவாதங்கள்

| | |
|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதங்கள் | 1147 |
| கோரிக்கைவிடுக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள் | 2321 |
| விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள் | 2900 |

புலனாய்வுகள்

| | |
|---|---|
| 2017ஆம் ஆண்டிலிருந்து தொடுக்கப்பட்ட வழக்குகள் | 25 |
| ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் | 10 |
இப் பணிப்பகத்தின் தொலைநோக்கின் பிரகாரம், வெளியாக்கத்திற்குப் பின்னரான மற்றும் கணக்காய்வுக் கிளையானது, உலக வியாபார அமைப்பக பெறுமதி உடன்படிக்கையினை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு வசதியளிக்கும் நோக்கில் பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டில் முதன்முதலாக நிறுவப்பட்டது. இந்தக் கிளையானது கணக்காய்வுக்குப் பின்னரான மற்றும் பொருட்பட்டியல் பிரிவினையும் கணக்காய்வு மற்றும் சோதனைக் கிளையினையும் உள்ளீர்த்ததன் மூலம் தாபிக்கப்பட்டது.

2010 இன் இறுதியில் இடம்பெற்ற சுங்க மறுசீராக்கல்கள் மற்றும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான புதிய நிறுவனக் கட்டமைப்பின் அமுலாக்கத்தோடு, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்ட வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு பிரிவானது அமுலாக்கல் கொத்தணியினுள் சுங்கப் பணிப்பாளர் ஒருவரின் கீழ் ஒரு பணிப்பகமாக தரமுயர்த்தப்பட்டதோடு, அது வெளியாக்கலுக்கு பின்னதான கணக்காய்வுப் பணியகம் (PCA) எனவழைக்கப்பட்டது. இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் மற்றும் சுங்கத்தின் வெளியாக்கல் செயன்முறையில் ஏற்படக்கூடிய மோசடி மற்றும் தவறுதல்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொள்கையில், சுங்கத்தில் இடர் முகாமைத்துவப் பிரிவொன்றைத் தாபிப்பதன் மூலம் தற்போதுள்ள முறைமைகளை மேம்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளையும் இணக்கப்பாட்டு நடவடிக்கைகளையும் அமுல்படுத்தல் மற்றும் சுங்க வெளியாக்கல் செயன்முறையின் வசதியளித்தல் திட்டங்களுக்கான நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் போன்றன வர்த்தக சமூகத்திற்கிடையிலான இணக்கப்பாட்டு மட்டத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இன்றியமையாத காரணிகளாகத் திகழ்கின்றன. வெளியாக்கலுக்கு முன்னரான கணக்காய்வுப் பிரிவு மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் தொழிற்பாடுகளை கூட்டுறவுக் கொத்தணியினுள் ஒரு பணிப்பகத்தின் கீழ் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வுப் பிரிவும் இடர் முகாமைத்துவப் பிரிவும் இப் பணிப்பகத்தின் கீழான இரண்டு கிளைகளாக, 883ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பிரகாரம் 2013 செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ʺஇணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்ʺ எனும் பெயரின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன. மீளளிப்புக் கிளையின் உட்படுத்தலுடன், மீளளிப்புக் கிளை உள்ளடங்கலாக, தற்போது இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகமானது வெளியாக்கலின் பின்னராக கணக்காய்வு, இடர் முகாமைத்துவம் மற்றும் மீளளிப்பு ஆகிய மூன்று பிரிவுகளையும் கொண்டுள்ளன.



இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம் மற்றும் கணக்காய்வுகளது இணக்கப்பாட்டு நிலை



வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு

வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு அல்லது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பது மீளாய்வு செய்யப்பட்ட கியோடோ சமவாயத்தினால் குறித்த நடவடிக்கைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் சுங்கமானது குறித்த நபரின் பிரகடனங்களின் உண்மைத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மைகளை அந்நபரின் தொடர்புபட்ட புத்தகங்கள், பதிவேடுகள், வர்த்தக முறைமைகள் மற்றும் வணிகத் தரவுகள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதன் ஊடாக உறுதி செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படக்கூடியனவாகும். வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வானது சுங்கத்திற்கும் ஏனைய எல்லைப்புற அதிகார அமைப்புகளுக்கும் கடினமானதொரு கட்டுப்பாட்டு முறையியலாகும். ஏனெனில், இது கண்டிப்பான பரிமாற்ற மைய கட்டுப்பாட்டுச் சூழலிலிருந்து ஒரு வலிமையான கணக்காய்வு மைய நிருவாகத்திற்கு மாறுவதன் ஊடாக அவர்கள் பல்-அடுக்கு இடர் மைய கட்டுப்பாட்டு அணுகல் முறையினை பிரயோகிப்பதற்கு வழியமைப்பதாகவுள்ளது.பரிமாற்ற மையக் கட்டுப்பாடுகள் என்பது பொருட்களின் பௌதீகப் பரிசோதனை, பெறுமதி சரிபார்ப்பு, அவற்றின் உற்பத்தியிடம் மற்றும் வகைப்பாடு, மாதிரிப்பொருள், சான்றிதழ், உரிமம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பு போன்ற செயற்பாடுகளின் போதான ஒவ்வொரு பிரத்தியேக கப்பலேற்றுகைக்கும் பிரயோகிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.

(மூலம்: உலக சுங்க அமைப்பகம்).

வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவு செய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

இப்பணிப்பகத்தின் முதன்மைக் குறிக்கோள்கள் வருமாறு :

(அ) சுங்கப் பிரகடனங்களின் துல்லியம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை சரிபார்த்தல்.
(ஆ) தவறான பிரகடனங்கள் தொடர்பிலான திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வுக்குட்படுவோருக்கு பரிந்துரைத்தல்.
(இ) சுங்கத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுமாறு கணக்காய்வுக்குட்படுவோரை ஊக்குவித்தல்.
(ஈ) இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கான உள்ளீட்டினை வழங்கல்.

வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வில் ஒப்பீட்டாய்வு செய்யப்படுகின்ற பொருட்கள்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறக்குமதி வெளிப்படுத்தல் ஒன்றுக்குத் தேவையான ஒவ்வொரு ஆவணமும் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வின் போது ஒப்பீட்டாய்வு செய்யப்பட முடியும் :

| தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை | தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள் | தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள் | ஏனையவை |
|---|---|---|---|
| • பெறுமதி<br>• அளவு<br>• நாணயமாற்றுவிகிதம் | • வகைப்படுத்தல்<br>• பொது விகிதங்களது விண்ணப்பங்கள்<br>• முன்னுரிமை விகிதங்கள் | • விலக்களிப்புகள்<br>• நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை<br>• சரியான தீர்வைக் கணிப்பீடு | • மட்டுப்படுத்தப்பட்டவைகள்<br>• தடைசெய்யப்பட்டவை<br>• இறக்குமதி அனுமதிப்பத்திரம்<br>• புலமைச் சொத்துரிமை<br>• சீ.ஐ.ரீ.ஈ.எஸ்<br>• றோயல்ரி<br>• நாணயமாற்றுக் கட்டுப்பாடு |

மேற்படி பொருட்கள் சுங்க வெளியாக்கலில் மற்றும்/ அல்லது பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுக்கு முன்னரான வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு செய்யும் கட்டத்தில் பரிசோதிக்கப்பட முடியுமென்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அநாவசிய இரட்டிப்பினை தவிர்ப்பதற்கும், சிறப்புத்தன்மையை அதிகரிப்பதற்கும் மற்றும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்தான அபகீர்த்தியை குறைப்பதற்கும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விற்கான அணுகலானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகவிருத்தல் வேண்டும். பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு அதிகாரிகள் சுங்கப் பிரகடனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமன்றி, கணக்குப் புத்தகங்கள் போன்ற கணக்காய்வுக்குட்படுபவர் தமது வளாகத்தினுள்

கடந்த காலங்களில் பேணி வந்த சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேறுகளையும் பரிசோதிக்கின்றனர் என்பதை ஒரு சிறப்புத் தன்மையாக இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவு

2018 ஆம் ஆண்டுக்காலத்தின் போதான செயலாற்றுகை

| | **2018** |
|---|---|
| இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | 160 |
| இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வின் பின்னரான விடயங்களது எண்ணிக்கை | 102 |
| முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்கப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | 61 |
| கணக்காய்வின் பின்னர் நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்களதும் எண்ணிக்கை | 61 |
| அறவிடப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 604,850,139 |
| சேகரிக்கப்பட்ட விற்பனை வரும்படிகளது மொத்தத் தொகை(ரூபா) | - |
| மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) | 56,653,753 |
| அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) | 661,503,892 |

2016, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுக்காலப்பகுயிலான செயலாற்றுகை

| | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|
| இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை | 103 | 112 | 102 |
| முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | 77 | 54 | 61 |
| கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை | 69 | 48 | 61 |
| அறவிடப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 938,538,574 | 1,120,608,249 | 604,850,139 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூபா) | இருக்கவில்லை | இருக்கவில்லை | இருக்கவில்லை |
| மேலதிக வருவாயாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தெகை(ரூபா) | 61,512,281 | 894,548 | 56,653,753 |
| அறவிடப்பட்ட மொத்தம் | 1,000,050,855 | 1,121,502,797 | 661,503,892 |

1) கணக்காய்வுகளது செயலாற்றுகை

| வருடம் | முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகளது எண்ணிக்கை |
|---|---|
| **2016** | 182 |
| **2017** | 175 |
| **2018** | 160 |




2) இவ்வாண்டுக் காலப்பகுதியின் பொழுது பின்னாட்களில் இடம்பெற்ற விடயங்களது செயலாற்றுகை




3) கணக்காய்வுகள் மற்றும் விடயங்கள் ஆகியவற்றுக்கிடையிலான ஒப்பீட்டாய்வு

| வருடம் | முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகளது எண்ணிக்கை | விடயங்களது எண்ணிக்கை | % |
|---|---|---|---|
| **2016** | 182 | 103 | 57% |
| **2017** | 175 | 112 | 64% |
| **2018** | 160 | 102 | 64% |




4) செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு

| வருடம் | இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை |
|---|---|---|---|
| **2016** | 103 | 77 | 69 |
| **2017** | 112 | 54 | 48 |
| **2018** | 102 | 61 | 61 |



5) இலக்கு மற்றும் உண்மை வருவாய் சேகரிப்பு

| வருடம் | சேகரிக்கப்பட்ட வருமானம் (ரூபா) |
|---|---|
| **2016** | 1,000,050,855 |
| **2017** | 1,121,502,797 |
| **2018** | 661,503,892 |




**1)** 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை

| வருடம் | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை (முன்பு பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக) | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை |
|---|---|---|
| **2016** | 103 | 77 |
| **2017** | 112 | 54 |
| **2018** | 102 | 61 |



மீளளிப்புக் கிளை

1) மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை - 2018

| | எண்ணிக்கை |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 219 |
| நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் | 36 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 03 |

2) மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை – கடந்த காலங்கள் (2015 தொடக்கம் 2018 வரை)

| ஆண்டு | **2015** | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 80 | 219 | 163 | 219 |
| நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் | 06 | 39 | 49 | 36 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 01 | 04 | 11 | 03 |




3) பதவியணியினர்களது எண்ணிக்கை

| வருடம் | அலுவலர்களது எண்ணிக்கை (சுங்க அத்தியட்சகர்கள், சுங்க பிரதி அத்தியட்சகர்கள், சுங்க உதவி அத்தியட்சகர்கள் ) |
|---|---|
| 2016 | 38 (சராசரி) |
| 2017 | 50 ( சராசரி ) |
| 2018 | 39 (31.12.2018 இல் இருந்தவாறாக) |




இடர் முகாமைத்துவப் பிரிவு

உலக சுங்க அமைப்பானது, விநியோகச் சங்கிலிப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு சிறந்த வசதியாக்கத்தினை வழங்குவதற்குமான நியமதரங்கள் குறித்தான SAFE வேலைச்சட்டகத்தினை 2015 இல் பொருந்திக் கொண்ட வேளையில், உலகெங்குமுள்ள ஏனைய பல சுங்க நிர்வாகத்தினரைப் போலவே இலங்கைச் சுங்கமும் நுழைவாயில் காவலாளிக்குரிய வகிபாகத்திலிருந்து வசதியளிப்பாளருக்கான வகிபாகத்திற்கு மாறுகின்ற இத்தகைய முன்னுதாரணத்திற்கு இணங்கியொழுகுவதற்கு சிரமப்பட்டது. சம்பிரதாய ரீதியான நுழைவாயில் காவலாளிக்கான அணுகுமுறையுடன் சர்வதேச வர்த்தகம் பற்றிய நவீன காலத்து விடயங்களை இலகுவாக சமாளித்து வெற்றி முடியாத தொழில்நுட்ப நிபுணத்துவத்தில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்களையும் புரிந்துணர்வில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு, இலங்கைச் சுங்கமானது 2013 ஆம் ஆண்டில் இணக்கப்பாடு மற்றும் வசதியாக்கப் பணிப்பகத்தின் கீழ் ஒரு தானியான இடர் முகாமைத்துவ அலகினைத் தாபிப்பதற்குரிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. இருப்பினும், குறித்த காலத்தில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு இன்மை போன்ற விடயங்கள் குறித்த அலகின் குறிக்கோள்களையும் அதன் உண்மையான உள்ளாற்றலினையும் அடைவதை விட்டும் தடுத்துள்ளன. தற்போதுள்ள பணிப்பாளர் நாயகமான திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ், இலங்கைச் சுங்கத்திற்கான தலைமைத்துவப் பதவியைப் பொறுப்பேற்ற பொழுது, இவர் அமுலாக்கம் மற்றும் வசதியாக்கம் போன்ற செயற்பாடுகளிலுள்ள வெளிப்படையாக இணக்கமுறாத எண்ணக்கருக்களை பயனுறுதி மிக்க வகையில் சமநிலைப்படுத்துவதிலுள்ள கடினத்தினை உணர்ந்து, வசதியாக்கம் மற்றும் கட்டுப்பாடு போன்ற விடயங்களில் ஒரு சமநிலையினைக் கொண்டுவரும் நோக்கில் சுங்கத்தின் ஒரு நவீன கருவியாக இடர் முகாமைத்துவத்தினை உபயோகிப்பதிலுள்ள எதிர்கால அனுகூலங்களை உணர்ந்தார். இத்தகைய மகத்தான குறிக்கோளினை மனதிற்கொண்டு, இடர் முகாமைத்துவ அலகின் நடவடிக்கைகளை ஒரு பணிப்பகத்தின் அந்தஸ்த்திற்கு விரிவாக்கம் செய்வதற்கான முன்னெடுப்பினை இவர் எடுத்துள்ளதோடு, ஒரு சிறந்த இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்துவதற்கான மையக் குறிக்கோள்களை வழங்கும் திறமையும் நவீன காலத்து சுங்க நடைமுறைகளை இலங்கைச் சுங்கத்தின் பிரதான செயற்பாடுகளில் கூட்டிணைப்புச் செய்யக்கூடிய திறமையும் கொண்டவர்களென தான் நம்பக்கூடிய குழுவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.
குறித்த அலகினை மீள்கட்டமைத்து அதனை விரிவாக்கம் செய்தமையினையடுத்து, இலங்கைச் சுங்கத்தின் நிர்வாகத்தினுள்இடர் முகாமைத்துவ அலகினால் தீர்வுகள் எட்டப்பட வேண்டிய பாரிய செயற்பாட்டுப் பிரதேசங்கள் மூன்று மடங்கு காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது.

(i) ஒவ்வொரு பிரதான செயன்முறையிலும் காணப்படுகின்ற இயல்பான இடர்களை இனங்காணும் நோக்கில் பிரதான சுங்கச் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் விரிவான இடர் முகாமைத்துவத்தினை முன்னெடுத்த பின்னர், அதற்கான விதப்புரைகளை மேற்கொண்டு, அவசியமானவிடத்து குறித்த செயன்முறைகளை மீள-வடிவமைத்தல்.

(ii) உயர்வான மற்றும் குறைந்தளவான இடருடைய சரக்குகள், பயணிகள் மற்றும் இயக்குனர்கள் (இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், சுங்கத் தரகர்கள், முன்னகர்த்தும் முகவர்கள் மற்றும் ஏனைய பொருள் இயக்குனர்கள்) போன்றோரை இனங்காண்பதில் இணக்கப்பாட்டு-மைய இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளை பிரயோகித்து, அவர்களது இணக்கப்பாடு மற்றும்/ அல்லது இடர் மட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அத்தகைய சரக்குகள் மற்றும் இயக்குனர்களைக் கையாளுதல்.

(iii) சுங்கத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளிலுள்ள சட்டவிரோதமான போக்குகளை இனங்கண்டு, அத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதோடு, அது போன்ற நிலைமைகளின் பொழுது எழக்கூடிய இடர்களையும் தணித்தல்.

இடர் முகாமைத்துவம் குறித்தான மேற்படி மூன்று மடங்குடைய பணிக் கூற்றுக்களின் அடிப்படையில், குறித்த இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் ஒரு முன்னுரிமை அளிக்கப்பட்ட மையச் செயன்முறை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன.

சுங்கத்தின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட விரிவான இடர் மதிப்பீடுகள்
**LCL** சரக்கு வெளியாக்கல் குறித்தான இடர் மதிப்பீடு

LCL சரக்கு வெளியாக்கல் செயன்முறையும் ஒரு செயற்பாட்டுப் பிரதேசமாக விளங்குகின்ற அதேவேளை, இதன் கீழ காணப்படுகின்ற சரக்கின் அளவு மற்றும் இதன் மூலமான வருமானம் போன்றன ஏனைய செயற்பாட்டுப் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்படுகின்றமையினால், இதற்கு இலங்கைச் சுங்கத்தினால் அதியுா் முன்னுரிமையொன்று வழங்கப்படுவதில்லை. இருப்பினும், இடர் முகாமைத்துவக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான இடர் மதிப்பீடொன்றின் பொழுது, தற்போதுள்ள LCL வெளியாக்கல் செயன்முறையில் இயல்பாகவே சில பாரிய நடைமுறைக் குறைபாடுகள் இனங்காணப்பட்டதோடு, இத்தகைய நடைமுறைக் குறைபாடுகள் கணிசமானளவு வருமான இழப்பிற்கு வழியமைக்கின்ற அதேவேளை, தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்பாடுடைய பொருட்களை கடத்திச் செல்வதற்கும் வழியமைக்கின்றது. விதப்புரைகளுடன் கூடிய இது பற்றிய விரிவானதொரு அறிக்கை தயாரிக்கப்பட்டு சுங்கப் பணிப்பாளா் நாயகத்திடம் சமா்ப்பிக்கப்பட்டதோடு, இந்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் செயலாக்கம் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

பிணைக்கப்பட்ட மதுபானச் செயற்பாடுகள் குறித்தான இடர் மதிப்பாய்வு

தற்பொழுது, கொழும்புத் துறைமுகத்திற்குள்ளும் அதற்கு அண்மித்தும் மூன்று வகையான பிணைக்கப்பட்ட மதுபானச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அவையாவன, 1. கப்பல் பணியாளா்கள் மற்றும் கப்பல் பயணிகளுக்கு பிணைக்கப்பட்ட மதுபானம் விற்பனை செய்கின்ற கொழும்பு துறைமுகத்திற்குள் காணப்படுகின்ற தீா்வை இலவச விற்பனை நிலையங்கள்; 2. இராஜதந்திர பணிகளிலுள்ள தூதுக்குழுவினா் மற்றும் அவா்களது பணியாளா்களுக்கு பிணைக்கப்பட்ட மதுபானத்தினை விற்பனை செய்கின்ற கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியில் இயங்கி வருகின்ற எஸ்.ரீ.சீ. தீா்வை இலவச விற்பனை நிலையங்கள்; 3. கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்குகின்ற கப்பல்களுக்கு பிணைக்கப்பட்ட மதுபானத்தினை விற்பனை செய்கின்ற கப்பலிலுள்ள விற்பனை நிலையங்கள் போன்றனவாகும். மேற்கூறப்பட்ட மூன்று பிரதேசங்களிலும் இடர் முகாமைத்துவ அலகினால் இடர் மதிப்பாய்வானது முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, குறித்த ஆய்வுக் காலத்தின் பொழுது, மேற்படி செயற்பாடுகளில் ஏராளமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக இனங்காணப்பட்டதோடு, அத்தகைய முறைகேடுகள் காரணமாக ரூபா 2.5 பில்லியனுக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்ட வருடாந்த வருமான இழப்பு ஒன்றும் காணப்படுகிறது. குறித்த மதிப்பாய்வின் பொழுது, மேற்படி பிரதேசங்களில் செயற்பாடு சாா்ந்த வேலைச்சட்டகம் தொடா்பில் பல்வேறு முறைகேடுகள் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. எனவே, இடர் முகாமைத்துவ அலகானது மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தொடா்பில் ஒரு விாவான இடர் மதிப்பாய்வினை ஆவணப்படுத்தியுள்ளதோடு, அத்தகைய செயற்பாடுகளை நிா்வகிக்கும் வகையில் கண்டிப்பான திணைக்களக் கட்டளைகளும் வரைவுசெய்யப்பட்டு வருகின்றன. மேலும் இடர் முகாமைத்துவக் குழுவானது புதிதாக வரைவுசெய்யப்படுகின்ற ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தும் வரை மேற்படி முறைகேடுகள் தொடா்ந்தும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான தற்காலிக நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

விமானச் சரக்கு வெளியாக்கற் செயன்முறை பற்றியதொரு விரிவான இடர் மதிப்பாய்வு

தற்பொழுது, விமானச் சரக்கு இறக்குமதிச் செயற்பாடுகளுடன் தொடா்புடைய செயன்முறைகளைத் திட்டமிடுவதற்கும் மற்றும் தற்போதுள்ள செயன்முறையுடன் தொடா்புடைய பாரிய இடா்களை இனங்காண்பதற்குமான ஒரு விரிவான இடர் மதிப்பாய்வு முன்னெடுக்கப்படுகறிது.
மேற்படி கருத்திட்டங்கள் தவிர, பின்வரும் கருத்திட்டங்களுக்கான ஆரம்பகட்டத் திட்டமிடுகை மற்றும் ஆவணப்படுத்தல் கட்டங்களும் பூரணப்படுத்தப்படுவதோடு, இந்தக் கருத்திட்டங்கள் 2019 இன் முதல் அரையாண்டுக் காலத்தில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றன.

வா்த்தகா்கள் மற்றும் வெளியாக்கல் முகவா்களை மீள்-பதிவுசெய்தல் மற்றும் வா்த்தகா்களைப் பதிவுசெய்யும் செயலாக்கத்தினை மீள்-முறைமையாக்கம் செய்தல்

புதிய வா்த்தகா்கள் மற்றும் வெளியாக்கல் முகவா்களைப் பதிவுசெய்யும் செயன்முறையில் நடைமுறை சாா்ந்த அனேக குறைபாடுகள் காணப்படுவதாக நீண்டகாலமாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இத்தகைய குறைபாடுகள் தொடா்ந்தும் காணப்படுவதன் விளைவாக, வா்த்தகா்கள் மற்றும் சுங்க தரகா்கள் தொடா்பில் சுங்கத்தினால் பேணப்படுகின்ற பதிவுகள், அவற்றை விபரமாக்கும் நோக்கத்திற்குப் போதாததாகவும் காணப்படுகின்றன. எனவே, இவா்களது இடர் மட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் ஒன்றுசோ்த்து குறித்த விபரங்களைத் தயாரிக்கும் நோக்கில், அனைத்து வா்த்தகா்கள் மற்றும் சுங்கத் தரகா்களை மீள்-பதிவுசெய்வதானது 2019 இன் முதல் அரையாண்டுக் காலத்தில் இடம்பெறவுள்ளது.

அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் **(AEO)** நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்

இடர் முகாமைத்துவப் பிரிவானது, 2019 இன் முதல் அரையாண்டுக் காலத்தினுள் விரிவானதொரு அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகத்துடன், தற்போதைய இணக்கப்பாடு மிக்க வர்த்தக நிகழ்ச்சித்திட்டமானது (துரித பாதை மற்றும் பசுமைநிற வழிமுறை போன்றவை) நிறுத்தப்படவுள்ளதோடு, மேற்படி வசதிகளை அனுபவிக்கின்ற அத்தகைய வர்த்தகர்களுக்கு, அவர்களது விருப்பம் மற்றும் நுழைவுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டிற்கு உட்படுதல் ஆகியவற்றினைப் பொறுத்து, புதிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் வரைவுசெய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், சுங்கத் தரகர்கள், பிணைமுறியைக் கொண்டவர் மற்றும் ஏனைய வகையான இயக்குனர்கள் போன்றோர் பிரேரிக்கப்பட்ட AEO நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பினைக் கொண்டிருப்பர். புதிய AEO நிகழ்ச்சித்திட்டத்தினை நிர்வகிக்கக் கூடிய ஒழுங்குமுறையான வேலைச்சட்டகமானது வரைவுசெய்யப்பட்டு வருவதோடு, இதற்கான அங்கீகாரத்தினை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்டதன் பேரில், குறித்த விண்ணப்பங்கள் எதிர்காலத்தில் மிகவும் விரைவாக கோரப்படவும் உள்ளன.

தற்போதைய தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் சரக்கு பரிசோதனை செயன்முறையினை மீள்-கட்டமைப்புச் செய்தல்

இலங்கையில் பௌதீக ரீதியில் பரிசோதனைக்கு உட்படுகின்ற சரக்குகளின் தற்போதைய சதவீதமானது, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமதரங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அதிகமாகக் காணப்படுவதனால், தற்போதைய தேர்ந்தெடுப்புப் பிரமாணம் மற்றும் அவற்றின் பயனுறதித் தன்மை போன்றன தற்பொழுது பகுப்பாய்வு செய்யப்பட்டு வருவதோடு, முன்னேற்றகரமான ஊடுருவல் அற்ற பரிசோதனை முறைகளுடன் கூடிய மிகவும் பயனுறுதிமிக்க தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை உபயோகிப்பதன் மூலம், பௌதீக ரீதியில் பரிசோதனை செய்யப்படுவதற்குரிய சரக்குகளின் சதவீதத்தினைக் குறைப்பதற்கான சாத்தியப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டும் வருகிறது.

இடர் முகாமைத்துவப் பிரிவின் 2018 இற்கான செயற்திட்டம்

| பிரதான செயற்பாடு : இடர் முகாமைத்துவம் | | | | |
|---|---|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு |
| புதிதான உயர் இடர் மிக்க சந்தர்ப்பங்களை இனங்காணல் மற்றும் தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை அமுல்படுத்தல். | X | X | X | X |
| HRC பட்டியலை கண்காணிப்புச் செய்து அவற்றை மதிப்பாய்வு செய்தலா | X | X | X | X |
| HRC பட்டியலை அவ்வப்பொழுது இற்றைப்படுத்தல் | X | X | X | X |
| துரித Ï பாதைக்குரிய சரக்குப் பெறுனரை, அவர்களது இணக்கப்பாட்டு மட்டத்தினைச் சோதிக்கும் வகையில் ஆய்வுசெய்தல் | X | X | X | X |
| பச்சை Ï பாதைக்குரிய சரக்குப் பெறுனரை, அவர்களது இணக்கப்பாட்டு மட்டத்தினைச் சோதிக்கும் வகையில் ஆய்வுசெய்தல் | X | X | X | X |
| புதிதாக பதிவுசெய்துள்ள சரக்குப் பெறுனரை, அவர்களது இணக்கப்பாட்டு மட்டத்தினைச் சோதிக்கும் வகையில் எழுமாறாக பின் ஆய்வு செய்தல். | X | X | X | X |

| பிரதான செயற்பாடு : வர்த்தக வசதியாக்கம் | | | | |
|---|---|---|---|---|
| பிரதான நடவடிக்கைகள் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு |
| துரித Ï பாதை குறித்தான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அத்தகைய கோரிக்கைகளை மதிப்பீடு செய்தல் | X | X | X | X |
| துரித-பாதை பற்றிய சரக்குச் பெறுனரை கண்காணித்து மதிப்பீடு செய்தல் | X | X | X | X |

| | | | | |
|---|---|---|---|---|
| சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 115 இன் பிரகாரம், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்வதற்கான அவர்களது விண்ணப்பங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கூறாய்வு செய்து, அவற்றை TIN/VAT பதிவுசெய்கை அலகிற்குச் சமர்ப்பித்தல் | X | X | X | X |
| சர்வதேச முன்மாதிரிகளிலிருந்து சரக்குத் தேர்ந்தெடுப்புக்கான எண்ணக்கருவினைப் பொருந்திக்கொள்ளல். | X | X | X | X |
| தானியக்க தேர்ந்தெடுப்பு முறைக்கான தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை இனங்காணல் | X | X | X | X |
| தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை அஸிகுடா வேல்ட்டில் அமுல்படுத்தி அவற்றை சோதித்தல். | X | X | X | X |
| தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தின் அபிவிருத்திக்காக பரிசோதனை நிலையங்களிலிருந்து பின்னூட்டல் பொறிமுறையினை ஆய்வுசெய்து அவற்றை அமுல்படுத்தல். | X | X | X | X |
| தேர்ந்தெடுப்புப் பிரமாணத்தினை மதிப்பீடு செய்து அவற்றை இற்றைப்படுத்தல் | X | X | X | X |

இடர் முகாமைத்துவ அலகின் 2018 இற்கான திட்டத்தின் முன்னேற்றம்

| தொழிற்பாடு | செயற்பாடு | விளைவுகள் |
|---|---|---|
| துரித ï பாதை நிகழ்ச்சித்திட்டத்தினை முகாமைத்துவம் செய்தல் | இணக்கப்பாட்டிற்குட்படும் வர்த்தகர்களை இனங்காணல் | தற்பொழுது 206 நிறுவனங்கள் துரித பாதை நிகழ்ச்சித்திட்டத்தில் இயக்கநிலையிலுள்ளன. 18 நிறுவனங்களின் துரித பாதை பற்றிய வசதியானது, சுங்க கட்டளைச்சட்டத்துடன் இணங்காமையின் காரணமாக முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| | உத்தியோகபூர்வ விஜயங்கள் | |
| | துரித பாதை பற்றிய பட்டியலில் நிறுவனங்களை சேர்த்தல் மற்றும் நீக்குதல் | |
| உயர் இடைரைக் கொண்ட சரக்கு பற்றிய தேர்ந்தெடுப்பு | உயர் இடரைக் கொண்ட சரக்குகளை இனங்காணல் | குறித்த பட்டியலுக்கான மேலதிக சேர்க்கைகள் தரவுப் பகுப்பாய்வு/ ம.பு.பணிப்பக அறிக்கைகள் மற்றும் புதிதாக பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து கிரம அடிப்படையில் இடம்பெற்றுள்ளது. |
| | சிவப்பு வகைக்கான பிரமாணத்தினை இனங்காணல் | |
| | உயர் இடருடைய சரக்கு மற்றும் சிவப்பு வகைக்கான பிரமாணம் ஆகியவற்றை இற்றைப்படுத்தல். | |
| தானியக்க தேர்ந்தெடுப்பு நிகழ்ச்சித்திட்டம் | சாத்தியவள ஆய்வுகளை முன்னெடுத்தல் | அசாதாரண இறக்குமதியாளர்கள், இறக்குமதி நாடுகள் என்ற வகையிலான இடர் காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டதோடு, அவை வெற்றியளித்தவிடத்து, தானியக்க தேர்ந்தெடுப்புப் பிரமாணமானது தயாரிக்கப்பட்ட விபரங்களுக்காக அமுல்படுத்தப்பட்டது. |
| | இடர் காரணிகளைக் கண்டறிதல் | |
| | இடர் மட்டங்களை தாபித்தல் | |
| | பொருத்தமான சோதனைத் தரவுகளை சேகரித்தல் | |
| | சோதனை ஓட்டங்களை மேற்கொள்ளல் | |
| பச்சைப் பாதை நிகழ்ச்சித்திட்டத்தினை முகாமைத்துவம் செய்தல் | பிரமாணத்தினை அபிவிருத்தி செய்தல் | பச்சை பாதை நிகழ்ச்சித்திட்டத்தில் 38 நிறுவனங்கள் நடைமுறையிலுள்ளன.<br><br>ஒரு நிறுவனத்திற்கான பச்சை பாதை வசதியானது, சுங்கக் கட்டளைச் சட்டத்துடன் இணங்காமை காரணமாக முடிவுறுத்தப்பட்டது.<br><br>பச்சை பாதைக்குரிய நிறுவனங்களை, அவர்களது இறக்குமதி முறை மற்றும் குற்றச்செயல்கள் பற்றி தொடர்ச்சியாக கண்காணித்தல். |
| | நிறுவனங்களை இனங்காணல் | |
| | நிறுவனங்களை பகுப்பாய்வு செய்தல் (பச்சைப் பாதை பற்றிய கேள்விகள்) | |
| | அலுவலகத்திற்கு விஜயம் செய்தல்/ சாத்தியவள ஆய்வுகள் | |
| | நிறுவன இடர் விபரங்களை இற்றைப்படுத்தல் | |

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகத்தின் குறிக்கோள் யாதெனில், தொழில்நுட்பம் மற்றும் சேவைகளை வழங்கல் மேலும் சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தை ஆணையிடுதலுடன் தொடர்பிலான வசதிகளை திணைக்களத்திற்கு வழங்குதல் மற்றும் இடையுறா இணையச் சேவையினை தொடர்ந்தும் வழங்கல் போன்றனவாகும். சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தின் தானியக்கமானது வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்க சுங்க நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான விரைவான, தரமிக்க மற்றும் நம்பகமான தகவல் முறைமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பணிப்பகமானது அனைத்து சுங்கப் பிரகடனங்களையும் துணை ஆவணங்களையும் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதனைப் பேணும் வகையிலான மேலும் புதிய வினைத்திறன்மிக்க அம்சங்களையும் கணினி அடிப்படையிலான பழுது காப்பு முறைமைகளையும் நிறுவிவருகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

1. தன்னியக்க முறையினை பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைதல்.
2. அசிகுடா அடங்கலாக சகல மென்பாக முறைமைகளது சீரான தொழில்பாட்டினை உறுதி செய்வதற்காக முறைமை வலைப்பின்னல், கணனிப் பாகங்கள் மற்றும் தரவு நிரல்களைத் திறம்படப் பராமரித்தல்.
3. சுங்க முகாமைத்துவம், பிற அரச முகவரகங்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் ஆகியவர்களுக்கும் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பிரிவுகள், பல்வேறு பிரிவுகளுக்கும் சரியான தகவல்களை உரிய வேளையில் வழங்குவதோடு அறிக்கைகளையும் சமர்ப்பித்தல்.
4. பூகோள முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லுவதற்கு ஏற்றவாறு அசிகுடா++, சரக்குக் கட்டுப்பாட்டு முறைமை, தினீத் என்பன அடங்கலான தற்போதைய முறைமைகளை விரிவாக்குவதற்காக மதிப்பீடுகள் மற்றும் பயனளிக்கும் தரமுயர்த்தல்களை மேற்கொள்ளல்.
5. விரும்பிய செயற்பாட்டு இலக்குகளை எய்துவதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்களினது கணனித் திறமைகளையும் தொழில்சார் தரத்தையும் விரிவாக்கல்.
6. சுங்கத் திணைக்களத்தினது பல்வேறு பிரிவுகள் மற்றும் அலகுகளிலுள்ள அலுவலர்களுக்கு அடிப்படை தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பயிற்சியினை விஸ்தரித்தல்.

| பிரதான நடவடிக்கை : | தொழில்நுட்பப் பிரிவு |
|---|---|
| பிரதான படிமுறைகள் | 31/12/2018 ஆம் திகதி அடையப்பட்டது % |
| 1. CBHQ1 அலுவலகத்தில் கடல் மார்க்க இறக்குமதி பொருள் பட்டியலை தள்ளபடி செய்வதை தானியக்க முறைப்படுத்தல். | 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| 2. பொருள் விலைப்பட்டியலினை ஸ்கேன் படங்களாக அசிகுடா முறைமைக்கு சேமித்தல் | 100% முறைமை ஆயதத்தமான நிலையில் உள்ளது. சட்டபூர்வமான ஒப்புதலுக்காக காத்திருத்தல். |
| 3. KTIM1 அலுவலகத்தினது தன்னியக்க முறைமையினை நிறைவுசெய்தல் | தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பப்பிரிவின் செயற்பாடு 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| 4. பயணிகள் உடன் வராத பொதிகள் தொடர்பில் வீட்டுக்கு வீடு வினியோகிப்பதனை வசதியளிக்கும் வகையில் சுங்கத் திணைக்களத்துடன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினை இணைத்தல் | கேள்வு வழங்கப்பட்டுள்ளது. மேம்பாடுகள் குறித்து ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது. |
| 5. தற்போதுள்ள THINETH முறைமையினை அசிகுடா வேல்ட் முறைமைக்குள் நகர்துதல் | கம்பனிகளின் இடம்பெயர்வு 5% இடம்பெற்றுள்ளது. (முன்னோடித் திட்டம்) |
| 6. டிஜிரல் கையொப்பத்துடன் கூடிய கடதாசியற்ற ஏற்றுமதிகள் வியாபாரத்தினை நடைமுறைப்படுத்தல் | முறைமையானது 100% ஆயத்தமான நிலையில் உள்ளது. சட்டமா அதிபரின் (சட்டம்) ஒப்புதலுக்காக காத்திருக்கின்றது. |
| 7. கடதாசியற்ற இறக்குமதிகள் வியாபாரத்தினை செயல்படுத்தல் | முறைமையானது 10% ஆயத்தமான நிலையில் உள்ளது. சட்டமா அதிபரின் (சட்டம்) ஒப்புதலுக்காக காத்திருக்கின்றது. |
| 8. இற்றைப்படுத்தப்பட்டதொரு ஏற்றுமதிகள் இறுப்பு வழிகாட்டியினை வெளியிடுதல் | 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 9. பரிசோதனைக்காக ஏற்றுமதிகள் சரக்குத் தெரிவினை தன்னியக்க முறைப்படுத்தல் | ஏற்றுமதிகள் பிரிவிலிருந்தான தெரிமுறை அளவுகோலுக்காக காத்திருக்கிறது. |
| 10. ஏற்றுமதி பொருள் பட்டியலினை முறைமைக்குள் சேமித்தல் | அசிகுடா முறைமை 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. CASA உடன் கலந்துரையாடும் வகையில் திட்டங்கள் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு (கூட்டுறவு) வழங்கப்பட்டுள்ளன. |
| 11. பீ.ஜ.வீ இலத்திரனியல் கொடுப்பனவு முறையினை அமுல்படுத்தல் | 5% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. கொழும்பு அஞ்ஞல் பொதி அலுவலகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன (முன்னோடித் திட்டம்). |
| 12. முறைமைக்கு தரவினை வழங்குதல் | தகவல் தொடர்பால் மற்றும் தொழில் நுட்பப் பணிப்பகத்தின் விடயம் 100% பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் பிற பிரிவின் விடயம் நிறைவடையும் வரை காத்திருக்கிறது. |

| பிரதான செயற்பாடு : | தகவல் மற்றும் தொடர்பால் தொழில் நுட்பப் பணிப்பக உதவிக் கரும பீடம் |
|---|---|
| பிரதான படிமுறைகள் | 31/12/2018 ஆந் திகதி அடையப்பட்டது % |
| 1. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கான ஆலணங்களை ஆராய்தல் | 100% |
| 2. பங்கீடுபாட்டாளர்ககள் அனைவருக்கும் அசிகுடா வேல்ட் முறைமைக்கு புகுபதிகையினை வழங்குதல் | 100% |
| 3. அசிகுடா வேல்ட் முறைமை பிரச்சினைகளை தீர்த்துவைத்தல் (தளத்தில் மற்றும் தொலைதூரத்தில்) | 100% |
| 4. தீனித் (THINETH) முறைமையிலான சிக்கல்களை சரிசெய்தல் | 100% |
| 5. அசிகுடா வேல்ட் முறைமையுடன் தொடர்புபட்ட நிறுவுதல் உதவி (தளத்தில் மற்றும் தொலைதூரத்தில்) | 100% |
| 6. உள்ளக மற்றும் வெளியக பங்கீடுபாட்டாளர்களிடமிருந்தான பொதவான விசாரனைகளுக்கு பதிலளித்தல் | 100% |
| 7. உள்ளக மற்றும் வெளியக பங்கீடுபாட்டாளர்களுக்கான அறிக்கைகளை தயாரித்தல் | 100% |
| 8. வாகன சலுகை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு சுங்கப் பிரகடன பிரதிகளை வழங்குதல் | 100% |
| 9. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகத் திணைக்களம் ஆகியவற்றுடனான தரவு இணைப்புடன் தொடர்புடைய சிக்கல்களை சரிசெய்தல் | 100% |
| 10. வங்கி மூலமான பணம் அனுப்புகை தொடர்பான சிக்கல்களை சரிசெய்தல் | 100% |
| 11. கொழும்புத் துறைமுக சாலை தரவு இணைப்புடன் தொடர்புபட்ட சிக்கல்களை சரிசெய்தல் | 100% |
| 12. வங்கியின் பிரதான சேவையகங்களுடன் தொடர்புபட்ட சிக்கல்களை சரிசெய்தல் | 100% |
| 13. சேவையகத்தினை இற்றைப்படுத்தல், தற்போதைய முறைமைச் சோதனை போன்ற தொழில்நுட்ப விடயங்களில் த.தொ.பணிப்பக தொழில் நுட்பக் குழு உதவி செய்தல் | 100% |
| 14. பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் இருந்து பயிற்சி பெறல் | 2018 இல் 2 பட்டதாரிகள் பயிற்சி பெற்றனர் |
| 15. பங்கீடுபாட்டாளர்களுக்கு அசிகுடா பாவனை தொடர்பான பயிற்சியளித்தல் | 100% |
| 16. அசிகுடா வேல்ட் பயனர் தரவுத்தளத்தினைப் பேணுதல் (வெளியாக்கல் மற்றும் அனுப்பு முகவர், கப்பலில் பொருள் அனுப்புபவர்கள், கப்பலில் பொருட்களை ஏற்றபவர்கள்) | 100% |
| 17. பங்கீடுபாட்டாளர்களுக்கு வீ.பீ.என் கணக்குகளை வழங்குதலும் மற்றும் புதும்பித்தலும் | 100% |

| பிரதான தொழிற்பாடு : | | | கணக்காய்வு கூறு |
|---|---|---|---|
| தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகத்தின் கணக்காய்வு பிரிவானது, சுங்க அதிகாரிகளுக்கும், அசிகுடா முறைமையுடன் இணைப்பினைக் கொண்ட பிற அரச நிறுவனங்கள் என்பவற்றிற்கு பயனர் சுயவிபரங்கள் மற்றும் கடவுச்சொற்கள் என்பவற்றினை வழங்குவதற்கு பொறுப்பாயுள்ளது.<br><br>மேலும், இது வாக்கு கணக்குகளை கையாளுதல் மற்றும் பொடிங் வசதிகளை (boding facilities) புதுப்பித்தல், முறைமை கணக்காய்வு மற்றும் சட்ட சிக்கல்களை கையாளுதல் என்பவற்றிற்கு சிபாரிசுகளை வழங்குவதற்கும் பொறுப்பாயள்ளது. | | | |
| சுங்க விசாரணைகள் | | | |
| ஆரம்பிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்டவைகளது எண்ணிக்கை | விதிக்கப்பட்ட மொத்த அபராதம் (ரூபா) | நடைமுறையிலுள்ள மொத்த விற்பனைகள் (ரூபா) |
| 51 | 10 | 945,100 | **63,921,624.50** |

| பிரதான தொழிற்பாடு : | புள்ளிவிபரவியல் பிரிவு |
|---|---|
| தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகத்தின் புள்ளிவிபரவியல்கள் பிரிவானது நிலையான புள்ளிவிபரவியல் அறிக்கைகளை வழங்குதல்; தேசிய வருமான கணக்கீட்டிற்கு ஆதரவளித்தல் உள்ளடங்கலாக புள்ளிவிவர தரநிலையினை விரிவுபடுத்திப் பராமரித்தல்; கைத்தொழில் துறைகள் சார்ந்த ஆய்வினை முன்னெடுத்தலும் விசாரணைகள் மற்றும் வழக்குத்தாக்கலுக்கான தகவலினை வழங்குதலும்; புள்ளிவிபரவியல் தகவலினை பரப்புதல், வியாபாரம், சக்தி, நிர்மாணம் மற்றம் சுற்றாடல் சார்ந்த புள்ளிவிபரங்கள் தொடர்பில் பணியாற்றுதல் போன்றவற்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. | |
| இலங்கைச் சுங்கத்தின் புள்ளிவிபரவியல் பிரிவானது பின்வரும் திணைக்களங்கள் / நிறுவனங்களுக்கு அறிக்கைகளை வழங்குகிறது. | |
| இலங்கை கணக்காய்வுத் தலைமை அதிபதி | 120 |
| உள்ளக கணக்காய்வு | 12 |
| வெளியக அமுல்படுத்தல்கள் முகவர்கள் (பொலீஸ், எஸ்.ஐ.எஸ். குற்ற புலனாய்வு திணைக்களம் போன்றவை) | 150 |
| உள்ளக விசாரணைகள் | 600 |
| உள்ளக பிற (கொள்கைத் திட்டமிடல் மற்றும் இடர் முகாமைத்துவ வசதியளித்தல்) | 265 |
| நிதி அமைச்சில் தீர்மான ஆதரவுச் செயலாக்க அறிக்கை | 650 |
| பிற அரசாங்க நிறுவனங்கள் (ஏ.அ.சபை, விவசாயத் திணைக்களம், CAA ,தேயிலைச் சபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மோட்டார் வாகனத் திணைக்களம், தெங்கு அபிவிருத்தி திணைக்களம்) | 150 |
| தனியார் கம்பனிகள் | 4800 |
| கல்வி சார் நோக்கங்களுக்காக (பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்) | 60 |

# மத்திய பெறுமதியிடல் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய பெறுமதியிடல் பணிப்பகமானது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் அட்டவணை- உ வின் பிரகாரம், இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதிகளை சரிபார்த்தல் மற்றும் தீர்மானித்தல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றிவருகிறது.

பெறுமதியிடல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட ஒட்டுமொத்த தீர்மானங்களும் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களை அடைவதற்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 51 மற்றும் 52 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிக்கோள்கள்

- பெறுமதியிடல் கருவிகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பங்கள் ஊடாக குறித்த செயற்பாட்டின் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்தல், திறன் கட்டியெழுப்புதலுக்கான முறைசார் அம்சங்களை மேம்படுத்தல், அதன் மூலம் திணைக்களத்தின் இலக்கினை எட்டுவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- சட்ட ரீதியான வர்த்தகத்திற்கான பொருத்தமான வசதியாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- உலக சுங்க அமைப்ப, உலக வர்த்தக அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள் மற்றும் கருவிகளுக்கேற்ப சிறந்த நடைமுறை சார் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் இணக்கப்பாட்டின் அளவினை மேம்படுத்தல்

பிரதான தொழிற்பாடுகள்

- உலக வர்த்தக அமைப்பு GATT 1994 இன் உறுப்புரை VII இன் ஏற்பாடுகளின் சரியான பிரயோகம் தொடர்பில் உறுதிப்படுத்தல்.
- பெறுமதியிடல் கருவிகளை விருத்தி செய்தல் (அதாவது, பெறுமதியிடல் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல், அவ்வப்போதைய எச்சரிக்கைகளை விடுத்தல்) பெறுமதியிடல் சட்டத்தின் ஒரே சீரான பிரயோகம் மற்றும் வினைத்திறன் மிக்க நடவடிக்கைக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை விருத்தி செய்தல்.
- அட்டவணை-உ உறுப்புரைக்கு ஏற்ப இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிகளைச் சரிபார்த்தல் மற்றும் அவற்றுக்கான சுங்கத்தின் பெறுமதியைத் தீர்மானித்தல்.
- சுங்கப் பெறுமதியிடலைக் கருத்திற்கொண்டு கொள்கை விடயத்தில் பெறுமதியிடல் குழுவிற்கு உதவுதல்.
- பெறுமதியிடலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரச-தனியார் பங்காண்மையை வளர்த்துக்கொள்ளல் மற்றும் பெறுமதியைத் தேடிப் பெறுவதில் பொதுமக்களின் பங்களிப்பினையும் வரவேற்றல்.
- அடிக்கடி விலை மாறும் பொருட்களின் பெறுமதியிடல் போக்கினைக் கண்காணித்தல்,பெறுமதியிடல் தொடர்பில் மேற்பார்வையினை மேற்கொள்ளல்,வருமான அறவீட்டினைக் கருத்திற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் ஆய்வு மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்ளல்.
- சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு) மற்றும் சுங்கப் பணிப்பாளர்(சுங்க சர்வதேச விவகாரம்) ஆகியோர் ஊடாக சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகள்/ மூலங்கள் ஆகியவற்றுடன் சுங்கப் பெறுமதியிடல் விடயங்கள் தொடர்பில் ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.

மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் மாதாந்த புள்ளிவிபரவில் - 2018

| மாதம் | பெறப்பட்ட பதிவுகளது எண்ணிக்கை | மீளமைக்கப்பட்ட பெறுமதி தொடர்பிலான பதிவுகளது எண்ணிக்கை | சரிசெய்யப்பட்டவைகளது சதவீதம் | அறவிடப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| ஜனவாரி | 2,689 | 1,137 | 42.28% | 162,436,213.20 |
| பெப்ரவி | 2,750 | 1,356 | 49.31% | 197,606,167.74 |
| மார்ச் | 2,111 | 951 | 45.05% | 139,270,365.00 |
| ஏப்ரல் | 2,343 | 936 | 39.95% | 172,654,159.00 |
| மே | 2,432 | 1,037 | 42.64% | 145,106,782.00 |
| ஜுன் | 2,117 | 1,133 | 53.52% | 174,176,732.00 |
| ஜுலை | 2,013 | 885 | 43.96% | 118,414,464.37 |
| ஓகஸ்ட் | 2,470 | 1,133 | 45.87% | 156,252,561.00 |
| செப்டம்பர் | 2,523 | 1,032 | 40.90% | 138,100,571.00 |
| ஓக்டோபர் | 4,799 | 1,309 | 27.28% | 176,677,684.00 |
| நொவம்பர் | 3,612 | 1,136 | 31.45% | 146,612,176.04 |
| டிசம்பர் | 3,571 | 1,090 | 30.52% | 155,126,605.00 |
| மொத்தம் | **33430** | **13135** | **39.29%** | **1,882,434,480.35** |

பெறப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை : 33430
பெறுமதி சரிசெய்யப்பட்ட சுங்கப்பிரகடனங்களது எண்ணிக்கை : 13135
சரிசெய்தலின் சதவீதம் : 39%

2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு தொடர்பிலான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு

| மாதம் | மேலதிக பதிவு ஊடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா) | | | |
|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** | **2018** |
| ஜனவாரி | 54,449,710.00 | 84,498,414.00 | 96,976,771.01 | 162,436,213.20 |
| பெப்ரவி | 91,402,400.00 | 103,263,972.00 | 92,588,732.00 | 197,606,167.74 |
| மார்ச் | 63,774,886.00 | 90,903,711.00 | 124,223,659.00 | 139,270,365.00 |
| ஏப்ரல் | 51,392,966.00 | 85,868,619.00 | 115,021,167.83 | 172,654,159.00 |
| மே | 64,329,233.00 | 99,738,181.00 | 133,249,396.00 | 145,106,782.00 |
| ஜுன் | 87,569,600.55 | 132,070,090.00 | 137,691,728.00 | 174,176,732.00 |
| ஜுலை | 78,257,088.00 | 84,129,484.00 | 124,688,097.00 | 118,414,464.37 |
| ஓகஸ்ட் | 65,483,265.00 | 123,306,222.00 | 156,586,925.58 | 156,252,561.00 |
| செப்டம்பர் | 84,140,105.00 | 82,950,641.00 | 144,727,507.37 | 138,100,571.00 |
| ஓக்டோபர் | 79,746,391.00 | 127,316,886.00 | 156,768,427.00 | 176,677,684.00 |
| நொவம்பர் | 106,194,920.00 | 138,543,377.00 | 169,522,592.00 | 146,612,176.04 |
| டிசம்பர் | 93,567,883.00 | 166,120,790.85 | 181,737,644.26 | 155,126,605.00 |
| | **920,308,447.55** | **1,318,710,387.85** | **1,633,782,647.05** | **1,882,434,480.35** |

சரிசெய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| ஜனவாரி | 556 | 673 | 1137 |
| பெப்ரவி | 616 | 646 | 1356 |
| மார்ச் | 506 | 992 | 951 |
| ஏப்ரல் | 527 | 936 | 936 |
| மே | 565 | 1047 | 1037 |
| ஜூன் | 725 | 1047 | 1133 |
| ஜூலை | 497 | 959 | 885 |
| ஓகஸ்ட் | 726 | 1220 | 1133 |
| செப்டம்பர் | 628 | 1091 | 1032 |
| ஓக்டோபர் | 889 | 1176 | 1309 |
| நொவம்பர் | 915 | 1303 | 1136 |
| டிசம்பர் | 977 | 1416 | 1090 |
| மொத்தம் | **8127** | **12506** | **13135** |




| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| மேலதிக பதிவுகள் ஊடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா) | 1,318,710,387.85 | 1,633,782,647.05 | 1,883,000,787.35 |
| அறவிடப்பட்ட அபராதம் (ரூபா) | 287,108,805.00 | 211,954,782.00 | 203,456,000.00 |
| மொத்தம் (ரூபா) | **1,605,819,192.85** | **1,845,737,429.05** | **2,086,456,787.35** |




| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| மேலதிக பதிவுகள் ஊடாக அறவிடப்பட்ட தொகை | 1,318,710,387.85 | 1,633,782,647.05 | 1,883,000,787.35 |
| அறவிடப்பட்ட அபராதம் | 287,108,805.00 | 211,954,782.00 | 203,456,000.00 |
| மொத்தம் | 1,605,819,192.85 | 1,845,737,429.05 | 2,086,456,787.35 |

பெறுமதி மதிப்பிடல் ஆராய்ச்சி மற்றும் விசாரணை பிரிவின் செயலாற்றுகை

| | | |
|---|---|---|
| 1 | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 222 |
| 2 | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 211 |
| 3 | குற்றங்களென நிருபிக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பறிமுதல்கள் /அபராதங்கள் தொடர்பிலான விடயங்களின் எண்ணிக்கை | 69 |
| 4 | சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 203,456,000.00 |
| 5 | முடிவுறுத்தப்பட்டாத விடயக் கோவைகளது மொத்த எண்ணிக்கை | 11 |

பெறுமதி மதிப்பிடல் ஆராய்ச்சி மற்றும் விசாரணை பிரிவின் செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு
2016, 2017 மற்றும் 2018

| | | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|---|
| 1 | பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 217 | 134 | 222 |
| 2 | முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 228 | 126 | 211 |
| 3 | குற்றங்களென நிருபிக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பறிமுதல்கள் /அபராதங்கள் தொடர்பிலான விடயங்களின் எண்ணிக்கை | 82 | 62 | 69 |
| 4 | சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா) | 287,108,805.00 | 211,954,782.00 | 203,456,000.00 |
| 5 | முடிவுறுத்தப்பட்டாத விடயக் கோவைகளது மொத்த எண்ணிக்கை | 3 | 8 | 11 |

# விசேட சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோளானது திணைக்களம் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புடையவர்கள் ஆகியோருக்கான சேவைகளை வழங்குதலாகும். இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் உரிய இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மானித்தல், இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் இரசாயணப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்தல், இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கான இரத்தினக் கல், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை மதிப்பிடல், சுங்க இல்ல முகவர்களைப் பதிவுசெய்தல், மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி சுங்கப் பிரகடனங்களை இலகுபடுத்தல் வசதிகளை செயன்முறைப்படுத்தும் வகையில் அஸிக்குடா முறைமைகளில் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவுசெய்தல் போன்ற சேவைகள் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள் :

1. பண்டங்கள் / பொருள் வகைப்படுத்துகை
2. இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தலும் வகைப்படுத்தலும்.
3. இரத்தினக்கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் விலை மதிப்பிடல்.
4. சுங்க இல்ல முகவர்களுக்கான உரிமங்களை வழங்கல், மற்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல்.

கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இப்பணிப்பகமானது நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பொருள் வகைப்படுத்தல் பிரிவு

செயலாற்றுகை - 2018

இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சரியான இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மாணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. சுங்கப் பிரகடனம் செயன்முறைப்படுத்துகின்ற பிரிவு அல்லது சரக்குப் பரிசோதனைப் பிரிவுகள் ஆகியவற்றிலான பொருட்களது இயைபுமுறைக் குறியிடு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அவர்கள் அதனை இப்பிரிவுக்கு அனுப்புவார்கள். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இப்பரிவானது MSDS மற்றும் ஏனைய வழிமுறையூடாகச் செல்லுகின்ற சர்ச்சைக்குரிய பொருள் தொடர்பில் மிகவும் பொருத்தமான இயைபுமுறைக் குறியீட்டினை பிரேரிப்பதன் மூலம் உள்ளக ஆலோசனையொன்றை வழங்குகிறது.

வியாபார இலகுபடுத்தலில் ஒரு அளவீடாக, இப்பிரிவான இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான முன்கூட்டிய இறுப்பு வகைப்படுத்தல் வசதியினை விநியோகிக்கின்றது. இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் குறித்த விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தி அதனை இப்பிரிவுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் இவ்விதிமுறைகளைப் பெறமுடியும். விண்ணப்பமானது சுங்கத் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவ் விதிமுறை ஒரு முறை விநியோகிக்கப்பட்டதும், அதே தயாரிப்பாளரிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் அதே பொருள் தொடர்பில் இது விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும்.

எனினும், ஏதேனும் சுங்கப்பிரகடன பதிவு மையத்திலிருந்தான சுங்கப் பிரகடனங்களை ஆற்றுப்படுத்துகின்ற அலுவலர்கள் அல்லது வழங்கப்படும் விதிமுறையுடன் உடன்படாத இறக்குமதியாளர்கள்/ஏற்றுமதியாளர்கள், பொருள் வகையேட்டுக் குழுவிற்கு அல்லது உலக சுங்க அமைப்பக இயையுபடுத்தப்பட்ட முறைமைக் குழுவிற்கு, தமது பொருட்களுக்கான உரிய வகைப்படுத்தலைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க முடியும்.

முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள்

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | 80 | 91 | 103 | 43 | 68 | 46 | 22 | 60 | 5 | 12 | 4 | 13 | **547** |
| குறித்த மாதத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து முடிவுறுத்தப்பட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | 62 | 72 | 54 | 33 | 39 | 23 | 6 | 9 | 0 | 0 | 1 | | **299** |
| முன்னைய விதிமுறைகள் அடங்கலாக குறித்த மாதத்தில் வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளது மொத்த எண்ணிக்கை | 52 | 78 | 62 | 53 | 62 | 39 | 39 | 21 | 3 | 11 | 32 | 6 | **458** |



உள்ளக வகைப்படுத்தல் ஆலோசனைகள்

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜுலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | 53 | 39 | 67 | 50 | 51 | 40 | 53 | 67 | 52 | 60 | 37 | 27 | **596** |
| குறித்த மாதத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருது முடிவுறுத்தப்பட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | 51 | 38 | 62 | 45 | 48 | 30 | 44 | 54 | 23 | 34 | 12 | 8 | **449** |
| முன்னைய விதிமுறைகள் அடங்கலாக குறித்த மாதத்தில் வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளது மொத்த எண்ணிக்கை | 52 | 49 | 51 | 37 | 58 | 37 | 50 | 29 | 30 | 43 | 40 | 36 | **512** |




| முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு | | | |
|---|---|---|---|
| **1.** முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள் | | | |
| வருடம் | பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | நிறைவு விகிதம் |
| **2017** | 630 | 387 | 61% |
| **2018** | 547 | 299 | 55% |




| முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு | | | |
|---|---|---|---|
| **2.** உள்ளக வகைப்படுத்தல் ஆலோசனைகள் | | | |
| வருடம் | பெறப்பட்ட மனுக்களது எண்ணிக்கை | வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளது எண்ணிக்கை | நிறைவு விகிதம் |
| **2017** | 647 | 528 | 82% |
| **2018** | 596 | 449 | 75% |




சுங்க ஆய்வுகூடப் பிரிவு

இப்பிவானது, ஏற்றுமதி செய்யப்படும் / இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தல் தொடர்பில் திணைக்கள மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபபட்டவர்களுக்கு உதவும் வகையில் நிறுவப்பட்டதாகும். இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகள் அவை சந்தேகத்திற்கிடமாக இருப்பின் அதனை இரசாயன கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அத்தகைய தயாரிப்புகளது வகைப்படுத்தலுடன் சர்ச்சைகள் எழும்போது இப்பிரிவினரின் அபிப்பிராயத்திற்காக ஆவணங்கள் இப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இப்பிரிவானது ஒரு தொழிற்நுட்ப கூறாகவிருந்துகொன்டு, பல்வேறு பேரவைகள் மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிமுறைகள் என்பவற்றினை அமுல்படுத்துவதில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களுடன் கூட்டிணைப்பினையும் பேணியுள்ளன.

செயலாற்றுகை - 2018

| | | பெறப்பட்டவை | முடிவுறுத்தப்பட்டவை | நிறைவு விகிதம் |
|---|---|---|---|---|
| சுங்கப் பிரகடனங்களது மொத்த எண்ணிக்கை | அடையாளப்படுத்தலுக்கு மாத்திர சுங்கப் பிரகடனங்களது பகுப்பாய்வு | 74 | 69 | 93% |
| | சுங்கப் பிரகடனப் பகுப்பாய்வு மற்றும் வகைப்படுத்தல் மாத்திரம் | 144 | 132 | 92% |
| | வகைப்படுத்தலுக்கு மாத்திரம் சுங்கப் பிரகடனம் | 10 | 10 | 100% |
| விதிமுறைகள் மற்றும் பிற கோவைகளது மொத்த எண்ணிக்கை | சீ.சீ கிளையிலிருந்து அனுப்பப்பட்ட விதிமுறை கோவைகள் | 207 | 199 | 96% |
| | பிற கிளைகளில் இருந்து அனுப்பப்பட்ட பிற கோவைகள் | 62 | 61 | 99% |
| | மொத்தம் | **497** | **471** | **95%** |

இவ்வாண்டில் மேலதிக பதிவுகளாக அறவிடப்படவேண்டிய தொகை (ரூபா) - **46,586,006.00**




முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு

சுங்கப் பிரகடனங்கள், விதிமுறைகள் மற்றும் விடயக் கோவைகள்

| | பெறப்பட்டவை | முடிவுறுத்தப்பட்டவை | நிறைவு விகிதம் |
|---|---|---|---|
| 2016 | 212 | 209 | 99% |
| 2017 | 325 | 314 | 97% |
| 2018 | 497 | 471 | 95% |




அறவிடப்படவேண்டியிருக்கும் தீர்வைத் தொகை

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| மேலதிக பதிவுகளாக தீர்வைத் தொகை (ரூபா) | 16,124,800 | 37,084,599 | 6,586,006 |

இரத்தினக்கல் பிரிவு

இரத்தினக் கல், பெறுமதி மிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான ஆவண செயன்முறைப்படுத்தலானது இப்பிரிவில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் விசேடத்துவம் பெற்ற அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தொடர்பிலான பெறுமதி மதிப்பிடலானது இவ் அலுவலர்களால் தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்களது கூட்டிணைப்புடன் கணிக்கப்படுகின்றன.

- இவ்வாண்டுக்கான சகல ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் தொடர்பிலான சாராம்சம் வருமாறு :
- சுகல பெறுமதிகளும் இலங்கை ரூபாக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏற்றுமதிகள்

| ஏற்றுமதிகள் | மொத்தப் பெறுமதி | சதவீதம் |
|---|---|---|
| இரத்தினக்கல் | 24,419,455,423 | 35.12% |
| வைர ஆபரணங்கள் | 190,274,622 | 0.27% |
| ஏனைய ஆபரணங்கள் | 2,062,185,271 | 2.97% |
| வைரங்கள் | 19,393,239,496 | 27.90% |
| குஆடா மற்றும் தாதுப்பொருட்கள் | 18,875,695 | 0.03% |
| பரிசோதனை | 1,032,615,721 | 1.48% |
| தங்கம் மீள் ஏற்றுமதிகள் | - | - |
| கண்காட்சி இரத்தினக் கற்கள் | 22,031,440,796 | 31.69% |
| கண்காட்சி ஆபரணங்கள் | 372,781,346 | 0.54% |
| மொத்தம் | **69,520,868,370** | |




இறக்குமதிகள்

| இறக்குமதிகள் | மொத்தப் பெறுமதி | சதவீதம் |
|---|---|---|
| செப்பமிடப்படாத இரத்தினக்கற்கள் | 9,863,893,861 | 10.30% |
| சீ மற்றும் பீ இரத்தினக்கற்கள் | 8,749,669,957 | 9.14% |
| இரத்தினக்கல் | 8,196,137,778 | 8.56% |
| வெள்ளி | 135,175,697 | 0.14% |
| தங்கம் | 68,487,205,514 | 71.53% |
| ஆபரணம் | 236,901,689 | 0.25% |
| ஏனையவை (நுகரத்தக்கவை) | 74,858,259 | 0.08% |
| மொத்தம் | **95,743,842,755** | |




- மீள்-இறக்குமதிகள் - ரூபா **7,349,099,658**
- மீள்-இறக்குமதிகள் விகிதம **7.7%**

**ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளது எண்ணிக்கை**

| | சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை |
|---|---|
| ஏற்றுமதி | 8532 |
| இறக்குமதி | 4620 |



வரி அடையாளப்படுத்தல் இலக்கம்/ பெறுமதி சேர் வரி பதிவுப் பிரிவு

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 115அ இற்கு இணங்க, பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் தவிர்ந்து பிறர் பொருட்களை இலங்கைக்கு வெளியே ஏற்றுமதி செய்யவோ மற்றும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யவோ முடியாது. அவர்களைப் பதிவு செய்யும் வகையில், சுங்க வெப் தளத்திலுள் விண்ணப்பப்படிவம் மற்றும் அறிவுறுத்தலுக்கு இணங்க இறக்குமதியாளர்களால் அல்லது ஏற்றுமதியாளர்களால் பூரணப்படுத்திய விண்ணப்பத்தினை இப்பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ்வருடத்திலான செயலாற்றுகை

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை | 256 | 269 | 323 | 504 | 708 | 584 | 1055 | 1579 | 2053 | 3028 | 1498 | 804 | 12661 |
| 2 | தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | 33 | 34 | 24 | 21 | 33 | 31 | 42 | 41 | 29 | 24 | 38 | 30 | 380 |
| 3 | தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான வாகனங்களது எண்ணிக்கை | 690 | 754 | 1189 | 1194 | 1213 | 956 | 1084 | 842 | 542 | 434 | 360 | 270 | 9528 |
| 4 | பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை | 149 | 178 | 165 | 158 | 160 | 151 | 157 | 197 | 141 | 170 | 171 | 137 | 1934 |
| 5 | பதிவு செய்யப்பட்ட தனியுரிமையாளர் கம்பனிகளது எண்ணிக்கை | 106 | 112 | 104 | 79 | 91 | 110 | 103 | 109 | 81 | 94 | 87 | 81 | 1157 |
| 6 | பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனிகளது எண்ணிக்கை | 36 | 37 | 40 | 33 | 30 | 47 | 47 | 40 | 36 | 43 | 29 | 33 | 450 |
| 7 | ஏனைய ஆவணங்கள் (பெ.சேர்.வரி இற்றைப்படுத்தப்பட்டவை, கானே திட்டம், சீ.டீ.யு, அரசாங்கம், போன்றவை) | 910 | 789 | 839 | 731 | 913 | 917 | 917 | 1094 | 940 | 1023 | 1074 | 975 | 11152 |
| | பெறப்பட்ட ஆவணங்களது மொத்த எண்ணக்கை | 2180 | 2173 | 2684 | 2720 | 3148 | 2796 | 2796 | 3902 | 38220 | 4816 | 3257 | 2330 | 37262 |




| | | |
|---|---|---|
| 1 | பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை | 12661 |
| 2 | தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | 380 |
| 3 | தனிப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான இறக்குமதிகளது எண்ணிக்கை | 9528 |
| 4 | பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை | 1934 |
| 5 | பதிவு செய்யப்பட்ட தனியுரிமையாளர் கம்பனிகளது எண்ணிக்கை | 1157 |
| 6 | பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனிகளது எண்ணிக்கை | 450 |
| 7 | ஏனைய ஆவணங்கள் (பெ.சேர்.வரி இற்றைப்படுத்தப்பட்டவை, கானே திட்டம், சீ.டீ.யு, அரசாங்கம், போன்றவை) | 11152 |
| | பெறப்பட்ட ஆவணங்களது மொத்த எண்ணிக்கை | **37262** |



# மனித வளங்கள் கொத்தணி

# மனித வளங்கள் முகாமைத்துவப் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில் சுங்கத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மேற்கொள்வதற்காக மனித வளங்களை முகாமை செய்தலே இப்பணிப்பகத்தின் முதலான கடமையாகும்.

இந்தத் திணைக்களமானது, திணைக்களத்தின் பணிநோக்கினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் தொலைநோக்கினை அடைந்துகொள்வதற்கான திறமையும் தகைமையும் உடைய நபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் இந்நோக்கத்திற்குத் தேவையான மூலோபயத் திட்டத்தினை வகுத்தல் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகிறது. மனித வளங்கள் பணிப்பகமானது, ஊழியர்களின் முழுமையான பங்களிப்பினை அடைந்துகொள்வதற்கான பிரயத்தனங்களை எடுக்கின்ற அதேவேளை, அவர்களை ஊக்குவிப்புச் செய்து, அவர்களது திறமைகளை இனங்கண்டு, மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உரிய வேளையில் வழங்குவதற்கும் முயற்சிக்கின்றது.

மேலும், மனித வளங்கள் பணிப்பகமானது, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம், ஓய்வு பெறுதல், அத்துடன் பொதுச் சேவை ஆணைக் குழு, பொது நிருவாக அமைச்சு போன்ற அரச நிறுவனங்களால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளும் செயலாற்றுகையினைப் பேணுதல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

1. ஆட்சேர்ப்பு, நடைமுறைகளுக்கு இணங்க, பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்தலும் பதவியுயர்வுகளை வழங்குதலும்
2. ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
3. செயலாற்றுகையினை முகாமைத்துவம் செய்தல்.
4. அலுவலர்களது ஓய்வூதியத்துடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல்
5. உள்ளக இடமாற்றல் கொள்கையினை அமுல்படுத்தல்
6. நஷ்ட ஈட்டினை செலுத்துதல் மற்றும் ஊழியர்களது ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை முகாமை செய்தல்
7. நிறுவன ரீதியான திட்டங்களை தயாரித்தல்

செயலாற்றுகை

| பிரதான செயற்பாடு | இலக்கு | உண்மையான நிலைமை |
|---|---|---|
| 1. ஆட்சேர்ப்பு | சுங்க உதவி அத்தியட்சகர் பதவிக்கான 70 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு | ஆட்சேர்ப்பு நிறைவுபெற்றுள்ளது |
| | சுங்கப் பரிசோதகர் பதவியிலான 55 வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை நடாத்துதல் | ஆட்சேர்ப்பு நிறைவுபெற்றுள்ளது |
| | சுங்க காவலர் பதவியிலான 60 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்தல் | ஆட்சேர்ப்பு நிறைவுபெற்றுள்ளது |
| | சுங்க உதவி அத்தியட்சகர் பதவிக்கான 103 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு | பரீட்சை இடம்பெற்றுள்ளது |
| | சுங்கப் பரிசோதகர் பதவிக்கான 140 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சை நடாத்துதல் | பரீட்சை இடம்பெற்றுள்ளது. |
| 2. பதவியுயர்வு | பதவியுயர்வுகள் :-<br>மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் - 03<br>சுங்கப் பணிப்பாளர் - 18<br>சுங்க பிரதிப் பணிப்பாளர் - 37<br>சுங்க அத்தியட்சகர் - 62 | பதில் கடமைக்காக ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் பதவியுயர்வினை இற்றைப்படுத்துவதற்கும் மற்றும் அதனைத் தொடர்ந்து ஒப்புதலினைப் பெறுவதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | சுங்க பிரதி அத்தியட்சகர்<br>சுங்க உதவி அத்தியட்சகர்<br>சுங்க பிரதான பரிசோதகர் | உரிய முறையில் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர் |
| 3. ஊழியர்களின் பதிவேட்டினைப் பேணுதல் | தரவுத்தளம் ஒன்றினை உபயோகித்து பதிவேடுகளை உரிமுறையில் பேணிவரல் | பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| 4. செயலாற்றுகை | 2017ஆம் ஆண்டின் இறுதி காலாண்டு தொடர்பிலான செயலாற்று அறிக்கைகளை | நிறைவுபெற்றுள்ள. |

| | | |
|---|---|---|
| அறிக்கைகளை பெறல் | பெறல் | |
| | 2018ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் நடுக்காலாண்டுகள் தொடர்பிலான செயலாற்று அறிக்கைகளை பெறல் | நிறைவுபெற்றுள்ள. |
| 5. ஊழியர்களது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 2017 ஆம் ஆண்டின் இறுதி தவணை மற்றும் 2018 ஆம் ஆண்டின் முதல் தவணை ஆகியவற்றுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குதல் | தேவைப்பாட்டினை பூர்த்திசெய்துள்ள அலுவலர்களது ஊக்குவிப்புக் கொடுப்பனவானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது |
| | மொழி ஊக்கவிப்புக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் காப்புறுதி அனுகூலங்கன வழங்குதல். | நிறைவுபெற்றுள்ள. |
| 6. அலுவலர்களது ஓய்வூதியம் தொடர்பிலான தொழிற்பாடுகள் | அலுவலர்களது ஓய்வுபெறலுடன் தொடர்புபட்ட கோவைகளை நிர்ணயித்த திகதியில் நிறைவேற்றல் | உரிய திகதியில் ஓய்வூதியங்களுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை நிறைவு |
| 7. உள்ளக இடமாற்றல் கொள்கையினை அமுல்படுத்தல் | நிர்ணயித்த காலப்பகுதியினுள் இடமாற்றப்பட்டது. | நிறைவுபெற்றுள்ள. |

| | பரீட்சையின் பெயர் | விண்ணப்பங்களது எண்ணிக்கை | பரீட்சைத் திகதி |
|---|---|---|---|
| 1 | சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1) (2018) (புதிய பாடத்திட்டம்) | 216 | 16.01.2018 |
| | சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (11) (2018) (புதிய பாடத்திட்டம்) | 176 | 30.06.2018 |
| 2 | சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான 2ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1) (2018) (புதிய பாடத்திட்டம்) | 163 | 25.01.2018 |
| | சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான 2ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (11) (2018) (புதிய பாடத்திட்டம்) | 164 | 28.06.2018 |
| 3 | தரம் 11ஐ சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1) (பழைய பாடத்திட்டம்) | 08 | 30.11.2018 |
| | தரம் 1ஐ சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களுக்கான 2ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1)(2018) (பழைய பாடத்திட்டம்) | 03 | 09.01.2018 |
| | தரம் 11ஐ சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1)(2018) (புதிய பாடத்திட்டம்) | 155 | 27.01.2018 |
| | தரம் 11ஐ சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (11)(2018) (புதிய பாடத்திட்டம்) | 155 | 23.06.2018 |
| 4 | தரம் 111 ஐ சேர்ந்த சுங்கக் காவலர்களுக்கான 1ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை 2017 (1)(2018) | 82 | 25.07.2018 |

# மனித வள அபிவிருத்திப் பணிப்பகம்

தொலை நோக்கு

எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் தரம் மிக்க, வகைப்பொறுப்பு மிக்க, தொழில்வாண்மை மிக்க மற்றும் பல்தரப்பட்ட தொழிற்படையினை பெற்று, பயிற்சியளித்து அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளல்.

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகமானது, திணைக்களத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்தும் வகையிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

பிரதான தொழிற்பாடுகள்

மனித வளங்கள் திணைக்களப் பணிப்பகமானது பிரதானமாக திணைக்களத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இதில் உள்நாட்டுப் பயிற்சி மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளென வகைப்பாடு காணப்பட்டதோடு, வெளிநாட்டுப் பயிற்சியானது வெளிநாடுகளிலிருந்தான புலமைப்பரிசில் திட்டத்துடன் விசேடமாக நாடுகடந்த தன்மையில் சுங்கத் துறைசார்ந்த விடயங்களில் இடம்பெற்றது.உள்நாட்டுப் பயிற்சிகள் போட்டித்திறன் சார்ந்த அபிவிருத்தி மற்றும் சம்பந்தப்பட்ட துறையிலான அறிவு மற்றும் விழிப்புணர்வினை மேம்படுத்தல் போன்ற தன்மையிலமைந்தது. மேலும், மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகமானது, உலக சுங்க அமைப்பின் உதவியுடன் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு எனும் தலைப்பிலானதொரு செயலமர்வினை நாட்டினுள் இடம்பெறுவதற்கு வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது. திணைக்களத்தின் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான தொழிற்பாடுகள் தவிர, இப்பணிப்பகமானது அதன் ஈடுபாட்டாளர்களுக்கான திறன் கட்டியெழுப்புகை மற்றும் பயிற்சியளிப்பு தொடர்பிலான உதவிகளை வழங்குவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு.

குறிக்கோள்கள்

- அலுவலர்களை திணைக்களத்தின் தரம் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினை விருத்தி செய்யும் வகையில் இயங்காற்றல்மிக்க முன்னெடுப்பைக் கொண்டதொரு குழுவாகத் திகழ்வதற்குத் தயார்படுத்தல்.
- திணைக்களத்தின் தேவைப்பாட்டுக்கிணங்க எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அலவலர்களது திறன்கள் மற்றும் அறிவினை விருத்தி செய்தல்.
- ஊழியர்களுக்கான மிகச் சிறந்ததும் சமகாலத்திற்கேற்றதுமான பயிற்சிகளை வழங்குகின்ற உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு உள்ளடங்கலான சர்வதேச மற்றும் உள்நாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.
- பொருத்தமான பயிற்சி வாய்ப்புகளை அடையாளங்காணும் வகையில் அலவலர்களுக்கு உதவுதல்.
- சுங்க அலுவலர்களுக்கு அவர்களது உயர் கல்விக்கான நிதி உதவி உள்ளடங்கலான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- வெளிநிலை நிறுவனங்கள் மற்றும் சுங்கத்துடன் தொடர்புடையவர்களுக்கு அவர்களது தேவைப்பாடுகளின் பேரிலான பயிற்சிகளை வழங்குதல்.
- திணைக்களத்தின் இலட்சியங்களை அடைந்துகொள்ளும் வகையிலான குறிப்பிடத்தக்க பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து அவற்றுக்கு வசதியளித்தல்.
- திறமைமிக்க, ஒழுக்கமுடைய சுங்க இல்ல முகவர்களை அறிமுகம் செய்யும் வகையில் சுங்க இல்ல முகவர் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.

பதவியணியினர் ஒருக்கீடு

| தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் | தற்போதுள்ள பதவியணினர் |
|---|---|---|
| சுங்கப் பணிப்பாளர் | 01 | 01 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 02 | 02 |
| சுங்க அத்தியட்சகர் | 03 | 01 |
| சுங்க பிரதி அத்தியட்சகர் | 08 | 00 |
| சுங்க உதவி அத்தியட்சகர் | 08 | 07 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 | 03 |
| மொத்தம் | **25** | **14** |

இவ்வாண்டுக்காலப்பகுதியிலான சாதனைகள்

2018ஆம் வருட பயிற்சித்திட்டம் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பிற விசேட பயிற்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு இணங்க, உள்நாட்டு பயிற்சித் திட்டங்களும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டதுடன் இப் பயிற்சித் திட்டங்களின் கீழ் பங்கேற்றவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 3,100 ஆகும்.

இவ்வாண்டில் பயிற்சி நிகழ்வுகளிலான பங்கேற்பு

தரம் வாரியாக

| தரங்கள் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | - | 8 |
| சுங்க மேலதகப் பணிப்பாளர் நாயகம் | 2 | 13 |
| சுங்கப் பணிப்பாளர் | 22 | 33 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 56 | 75 |
| சுங்க அத்தியட்சகர் | 131 | 58 |
| சுங்க பிரதி அத்தியட்சகர் } | 1,317 | 37 |
| சுங்க உதவி அத்தியட்சகர் } | | 78 |
| ஏனையவர்கள் | 1,244 | 26 |
| மொத்தம் | 2,772 | 328 |

உள்நாட்டு/ வெளிநாட்டு பயிற்சித் திட்டம் - 2018

| | |
|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - மொத்தம் 48 | |
| வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - மொத்தம் 194 | |
| பற்குபற்றியோர் - உள்நாடு | |
| சுங்க அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேல் | - 211 |
| சுங்க உதவி அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேல் | - 1317 |
| ஏனையோர் | - 1244 |

| பற்குபற்றியோர் - வெளிநாடு | |
|---|---|
| கருத்தரங்குகள் | 13 |
| செயலமர்வுகள் | 36 |
| நிகழ்ச்சித் திட்டங்கள் | 17 |
| பயிற்சி நெறிகள் | 24 |
| கலந்துரையாடல் | 59 |
| பட்டப்பின்படிப்பு திட்டங்கள் | 5 |
| மாநாடுகள் | 18 |
| ஏனையவைகள் | 22 |

சுங்க அலுவலர்களுக்கான தமிழ் மொழி பற்றிய செயலமர்வு

மனித வழங்கள் பணிப்பகமானது, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து பின்வரும் எண்ணிக்கையுடைய அலுவலர்களுக்கு தமிழ் மொழிக்கான செயலமர்வினை முன்னெடுத்துள்ளது.

| வருடம் | உ.சு.அ | சு.ப | சு.க |
|---|---|---|---|
| **2018** | 364 | 108 | 140 |

சுங்க இல்ல முகவர்களுக்கான பாடநெறியும் மற்றும் பரீட்சையும்

| பரீட்சை | பங்கேற்றவர்கள் | சித்திகள் | விகிதம் |
|---|---|---|---|
| குழு I | 118 | 90 | 76.3 % |
| குழு II | 125 | 108 | 86.4 % |
| குழு III | 119 | இடம்பெற்று வருகின்றது | |

சுங்க நூலகம்

சுங்கத்தின் நூலகமானது மனிதவள அபிவிருத்திக்கான பிரதானமானதொரு கருவியாகவிருப்பதோடு, இது 2005.01.26 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டதாகும். நூலகத்திற்குப் பொருத்தமானதொரு இடத்தினைத் தெரிவுசெய்தல் கடினமாகவிருந்தமையினால், மனிதவள அபிவிருத்திப் பணிப்பாளரின் குறியிலக்கின் கீழ் இணைந்த அலகொன்றாக இது நிறுவப்பட்டது.

இந்த நூலகம் தொடர்பில் எதிபாராதளவு சாதகமான பதிலளிப்புக்கள் பணியாட்தொகுதியினரிடமிருந்து கிடைத்துள்ளதோடு, தற்போதைய அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளதுடன் கிடைக்கத்தகு புத்தகங்களின் எண்ணிக்கையானது அதிகரிக்கப்பட்டுள்ளது. சுங்க அலுவலர்கள் முகாமைத்துவத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் நஷ்டஈட்டு நிதி ஆகியன நூலகத்திற்கான புத்தகங்கள் கொள்வனவிற்கு உதவியாகவுள்ளன.

திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கான வசதிகள் காணப்படுவதுடன் அங்கத்தவர் அல்லாதவரும் நூலகத்தைப் பயன்படுத்த முடிகின்றது. புத்தகங்கள் தவிர, பருவகால செய்திப் பத்திரிகைகள் மற்றும் பல்வேறு சஞ்சிகைகளும் கிடைக்கின்றன. திணைக்களக் கட்டளைகள், வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்கின்ற அதிகாரிகளின் அறிக்கைகள் மற்றும் எதிர்கால குறிப்புதவிக்கான திணைக்களத்தின் ஏனைய வெளியீடுகளும் இங்கு கிடைக்கப்பெறுகின்றன.

நிரந்தர நூலகர் இல்லாத போதிலும், நூலகத்தின் தொழிற்பாடுகள் சுமுகமாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

நூலகத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. அத்தகைய வசதிகளாவன,

(அ) ஏனைய பணியாளர்களுடன் பொருத்தமான நூலகர் ஒருவர் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நூலக மென்பொருள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.

(இ) அதி நவீன வசதியைக் கொண்ட கணினிகளுடனான இணைய வசதி வழங்கப்படல் வேண்டும்

(ஈ) புத்தகங்களை வழங்குதல் மற்றும் மீளப் பெறல் தொடர்பில் அட்டை முறையினை அமுல்படுத்தல்.

நூலக சேவை

| விபரங்கள் | 2017 | 2018 |
|---|---|---|
| புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 85 | 95 |
| கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 448 | - |
| அன்பளிப்பாகப் பெறப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 01 | 06 |
| புத்தகங்களது எண்ணிக்கை | 7675 | 7681 |

# ஊழியர் சேவைகள் பணிப்பகம்

குறிக்கோள்

ஊழியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பிற்கானதொரு சூழலை வழங்குவதோடு, திணைக்களத்தின் இலக்குகளை அடையும் செயற்பாடுகளிலும் பங்கேற்றல்.

பிரதான தொழிற்பாடுகள்

**I.** அரச கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் :
சுகல பணிப்பகஙகளுடனும் கூட்டிணைப்பினை வைத்திருத்தல் மற்றும் கணக்காய்வு அதிபதியிலால் எழுப்பபடும் வினாக்களுக்கு பதிலளித்தல்

**II.** நலன்புரி முகாமைத்துவம் :

தற்போது வழங்கப்பட்டிருக்கும் சகல நலன்புரி வசதிகளையும் மற்றும் தரமானதொரு நலன்புரிச் சேவையினை வழங்குவதற்கான படிமுறைகளை எடுக்கும் வகையில் அவா்களது தற்போதைய தரங்களை அடையாளங்காணல். சகல மட்டங்களிலுமுள்ள ஊழியா்களுடன் ஆலோசனைகளைப் பெற்று நலன்புரித் திட்டங்களை அடையாளங்கண்டு அவற்றை அமுல்படத்தல்.

**II.** ஒழுக்காற்று முகாமைத்துவம் :
சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருப்பின் அது தொடா்பில் ஆரம்ப விசாரணைகளையும் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளையும் மேற்கொள்ளல். சுங்க ஒழுக்காற்று நடைமுறை தொடா்பில் ஒன்றாக்கப்பட்ட நன்னடத்தைக் கோவையினை நடைமுறைப்படுத்தல்.அலுவலா்கள் நன்னடத்தைக் கோவையைப் பின்பற்றுவதைக் கண்காணித்தல் மற்றும் நன்னடத்தைக் கோவையினை மீறுபவா்களுக்கு எதிராக முடியுமானளவு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதன் மூலம் நன்னடத்தைக் கோவையை திறம்பட செயற்படுத்தல்.

**V.** ஊழியா் மனக்குறைபாடுகள் தொடா்பான முகாமைத்துவம்**:**
முகாமைத்துவம் மூலம் ஊழியா்களிடையே அதிக திருப்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் மற்றும் திருப்தியற்ற நிலையை குறைப்பதற்குமாக மனக்குறைபாடு தொடா்பான விடயங்களைக் கையாளுதல். தொடா்பினை கட்டியெழுப்பும் நோக்கில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுடன் முறையான கலந்துரையாடல்களைப் பேணுதல். சச்சரவுக்குரிய விடயங்கள் தொடா்பில் தீா்மானங்களை எடுக்கும் வகையில் பேச்சுவார்த்தைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஊழியா் பிரச்சினைகளை அடையாளங்காண்பதுடன் அவற்றைத் தீா்த்து வைப்பதற்கான பேச்சுவாா்த்தைகளையும் மேற்கொள்ளல்.

செயலாற்றுகை

- ஒழுக்காற்று முகாமைத்துவம்
  ஆரம்ப விசாரணைகள் **:**

| இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை | முடிவுற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை | முடிவுறாத ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை |
|---|---|---|
| 06 | 04 | 02 |

* 2 விடயங்களின் ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதோடு, ஒழுக்காற்றுக் கட்டளை நிலுவையிலுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைகள் :

| இடம்பெற்ற ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை | முடிவுற்ற ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை | மீதமாகவுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 03 | 00 | 03 |

- கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் :

| பெறப்பட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை | பதிலளிக்கப்ட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை | பூர்த்தியாகாத கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை |
|---|---|---|
| 39 | 36 | 03 |

- நலன்புரி

சிற்றுண்டிச்சாலையினால் வழங்கப்படுகின்ற சேவையின் தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில், குழுக் கூட்டங்கள் இரண்டு இடம்பெற்றதுடன் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சிற்றுண்டிச்சாலை முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

- விளைதிறன் :

அரச துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க ஆரம்பித்து வைக்கப்பட்ட உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டமானது, இலங்கைச் சுங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளை பயனுறுதிமிக்கதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் மேம்படுத்துவதற்கான முறைமைசார் அணுகுமுறையொன்றினை அறிமுகப்படுத்தும் வகையில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் வழங்கப்பட்ட உதவியுடன் பின்தொடரப்பட்டது.

அனேகமான அலுவலர்கள் ஏனைய பணிப்பகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதனால் அல்லது திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றமையினால்,புதியதொரு வழிப்படுத்தல் குழுவினை நியமிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை,குழுவினை ஆய்வு செய்து, பயிற்சியளித்து மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டன.

# பொருள் விநியோகப் பணிப்பகம்

அறிமுகம்

திணைக்களத்தின் அனைத்துப் பணிப்பகங்களுக்கும் பேணுகை மற்றும் சேவைகள் உள்ளிட்ட அனைத்து தேவைப்பாடுகளையும் திறன்மிக்க முறையிலும் மற்றும் வெளிப்படையாகவும் விநியோகிப்பதே இந்தப் பணிப்பகத்தின் குறிக்கோள்களாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. திணைக்களத்தின் சகல தொழிற்பாடுகளை தடையின்றி தொடர்ந்து பேணும் வகையில், உரிய நேரத்தில் தரமான பொருட்களையும் சேவையினையும் வேண்டுகின்ற பிரிவுகளுக்கு வழங்குதல்.
2. திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் தேசிய பொருள் கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க தெளிவான முறையில் பொருள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
3. உரிய முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொருள் பதிவேட்டில் பதிதல் மற்றும் உரிய களஞ்சியக் கட்டுப்பாடு, திறமையான களஞ்சிய முகாமைத்துவ முறைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி அனுகூலமான பலன்களைப் பெறுதல்.
4. சுங்கத் திணைக்களத்தினது அசையும், அசையாச் சொத்துக்களை முகாமை செய்தல்.
5. அட்டவணைக்கேற்ப புதிய சுங்கத் தலைமை அலுவலகத்தின் நிர்மானப் பணியின் திருப்திகரமான பூர்த்தி மற்றும் உரிய வளாகங்களது முகாமைத்துவத் திட்ட அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.
6. செயற்பாட்டு நிலையிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பராமரிப்பதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இவ்வாண்டுக்கான பிரதான செயற்பாடு

| பிரதான செயற்பாடுகள் | இலக்கு | இடம்பெற்றவை | இடம்பெறாவிடின், அதற்கான காரணம் |
|---|---|---|---|
| தேவைப்படுகின்ற பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் | பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் | 80% நிறைவு பெற்றுள்ளன | - |
| தலைமை காரியாலயக் கட்டடம் மற்றும் வெளி வளாகங்க அலுவலகங்களின் பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குதல். | திணைக்களத்தின் அலுவலர்களுக்காக துப்பரவான மற்றும் தூய்மையா சுற்றாடலைப் பேணுதல் | 100% நிறைவு பெற்றுள்ளன | - |
| உரியவாறான களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் சொத்துகள் முகாமைத்தவ முறைமையினை விருத்தி செய்தல் | முறைமையூடாக சகல சரக்கிருப்பு பொருட்களை கண்காணித்தலும் பேணுதலும் | 95% நிறைவு பெற்றுள்ளன | இடம்பெற்று வருகின்றது |
| 2018 ஆம் ஆண்டுக்கான பொருட்களது வருடாந்த ஒப்பாய்வு | பொருத்தமான சொத்துகள் முகாமைத்துவத்தினை பேணுதல் | 25% நிறைவு பெற்றுள்ளன | இடம்பெற்று வருகின்றது |
| இலங்கைச் சுங்கத்திற்கு புதியதொரு கொள்கலன் ஸ்கேனிங் முறைமையினை கொள்வனவு செய்தல் | ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கலன்கள் அனைத்தையும் உரிய முறைப்படி ஸ்கேன் பரிசோதனை செய்தல் | ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. சிவில் நிர்மாணிப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. | கருத்திட்டம் இடம்பெற்று வருகின்றது |
| குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து பயணிகளது விபரங்களை பெறும் வகையிலானதொரு மென்பாக விருத்தியினை கொள்வனவு செய்தல் | தீர்வையற்ற சரிபார்ப்புக்கான பயணிகள் விபரங்களை பெறல் | ஒப்பந்தகாரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். | கருத்திட்டம் இடம்பெற்று வருகின்றது |
| திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பேணுதல் | சிறந்த இயங்கு நிலையிலுள்ள வாகனங்களை கிரம அடிப்படையில் பழுதுபார்த்து சேவை வழங்குவதன் மூலம் கண்காணித்தல் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கிணங்க, செலவு கூடிய காலாவதியாகிய வாகனங்கள் அனைத்தையும் விற்றுத்தீர்த்தல். 3/2018 ஆம் இலக்க என்.டீ.பீ சுற்று நிருபத்திற்கு ஏற்ப புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல். | 100% நிறைவு பெற்றுள்ளன பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்கல்)<br><br>70% நிறைவு பெற்றுள்ளன<br><br>(விற்றுத் தீர்த்தல் செயற்பாடுகள்)<br><br>95% நிறைவு பெற்றுள்ளன (புதிய கொள்வனவுகள்) | |

# பிராந்தியக் கொத்தணி

# பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம்

பயணிகள் சேவைப் பணிப்பகமானது கட்டுநாயக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் அமையப்பெற்றுள்ளதுடன் விமான நிலையம் தொடர்பில் கட்டுப்பாடு/கண்காணிப்பினை மேற்கொள்கின்றது. விமான நிலையத்தில் அமையப்பெற்றுள்ள இச் சுங்க அலுவலகமானது கடத்தல் செயற்பாடுகளுக்கு எதிராக நாட்டின் முதலாவது பாதுகாப்பினை வழங்கும் நிறுவனமாகக் காணப்படுகின்றது. இப்பணிப்பகமானது பின்வரும் விடயங்களுக்கு பொறுப்பாயுள்ளது.

- நேர்மையான விமான பயணிகளது சுதந்திர நடமாட்டத்திற்கு வசதியளித்தல்
- அரச வருவாய் மற்றும் சமூகத்தின் நலன்கருதி சமூக-பொருளாதார, கலாச்சார மற்றும் தொல்பொருள் ஆகியவற்றினை காப்பதற்கு உத்தரவாதமளித்தல்
- சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்களின் கீழ் நிலைநாட்டப்பட்டுள்ள அமுல்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- விமானப் பயணங்களுடன் தொடர்பான எல்லை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும்.
- பாதுகாப்பு அமைச்சு, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை தர நிர்ணய நிறுவகம், அழகு சாதரப் பொருட்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகளது ஒழுங்குவிதிகள் மற்றும் பிற சட்டங்கள் மூலம் சுங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தல்.

பிரதான தொழிற்பாடுகள்

- வெளிச்செல்லுகின்ற மற்றும் உள்வருகை தருகின்ற நேர்மையான பயணிகள் மற்றும் அவர்களது பொதிகளின் வெளியாக்கத்தினை இலகுபடுத்தல்.
- உரிய அரச வருவாயினை சேகரித்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தலினை தடைசெய்தல்.
- பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் மிகவும் முக்கியமான நபர்களது வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
- விமானப் பணியாட்கள் மற்றும் விமானங்கள் இலங்கையை விட்டு வெளிச்செல்லல் மற்றும் வருகையினைச் செயன்முறைப்படுத்தல்.
- பயணிகள் பொதி தொடர்பில் தீர்வையற்ற சலுகைகளை வழங்கும் அதேவேளை அத்தகைய வசதிகளை கண்காணித்தலும் மற்றும் அதனைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல்.
- ஏ.ரீ.ஏ. கானே, உத்தரவாதங்கள் மற்றும் விசேட சேமிப்புகள் தொடர்பில் பொருள் விடுவித்தல்.
- சுங்கம்/ தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்ட இரத்தினக்கல்/ ஆபரணம் மற்றும் பொதிகளைப் பாதுகாத்தல்.
- வருகை தரும்/ வெளிச்செல்லும் பயணிகளால் பிரகடனப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயமாற்றுப் பிரகடனங்களை சோதனை செய்து அங்கீகரித்தல்.
- பயணி வெளிச்சென்ற பின்னர் அவருடன் வராத பொதிகளை வெளியாக்குவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்டவாறாக அதிகாரத் தத்துவத்தை வழங்குதல் தொடர்பில் பொதிச் சலுகையினை குறிப்பீடு செய்தல்.
- சந்ததேசத்தின் பேரில் அல்லது தேவையான பொழுது உடன்வரும் பொதிகளைப் பரிசோதித்தல்.
- அவசியமானவிடத்து பிரத்தியேக தேடுதல்களை முன்னெடுத்தல். குற்றச்செயல்களைக் கண்டறிந்து அத்தகை செயற்பாடுகள் தொடர்பில் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் முன்னெடுத்தல். வெளிச் செல்லும் விமானங்களுக்கான சான்றுப்படுத்தலை வழங்கல். வர்த்தகத் தன்மையிலான பொருட்களைக் கொண்டுவருகின்ற பயணிகளிடமிருந்து தீர்வைகளையும் ஏனைய அறவீடுகளையும் சேகரித்தல்.

அரசிறை சேகரிப்பு

| தீர்வைகளும் ஏனைய வரிகளும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜனவாரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
| தீர்வை | 1,021,110 | 906,589 | 749,406 | 987,671 | 992,393 | 877,841 | 1,211,418 | 982,458 | 1,390,045 | 1,642,734 | 1,630,036 | 867,384 | 13,259,085 |
| பெ.சே.வரி | 5,510,486 | 8,175,080 | 10,547,186 | 5,836,890 | 9,491,510 | 7,535,919 | 9,054,828 | 9,008,760 | 12,739,866 | 10,827,638 | 8,689,846 | 6,349,593 | 103,767,602 |
| துவிஅ | 1,004,305 | 1,027,398 | 849,899 | 822,325 | 981,967 | 1,027,919 | 1,512,798 | 2,274,184 | 2,343,492 | 1,528,467 | 1,587,227 | 942,558 | 15,902,539 |
| உற்பத்தி வரி | | - | - | 8,150 | | | | | | | | | 8,150 |
| இறக்குமதி செஸ் வரி | 7,248,640 | 11,887,811 | 16,244,072 | 7,581,180 | 13,457,167 | 10,277,043 | 10,062,672 | 9,296,856 | 12,410,199 | 12,562,534 | 9,571,148 | 7,458,365 | 128,057,687 |
| அபராதம் | 7,285,376 | 9,740,993 | 12,821,261 | 7,053,561 | 11,483,485 | 9,373,966 | 9,492,675 | 7,551,769 | 10,684,414 | 10,834,309 | 8,725,519 | 7,743,799 | 112,791,127 |
| வி.ப.அறவீடு | 16,760 | 34,252 | 31,500 | 14,000 | 42,620 | 27,480 | 18,000 | 11,132 | 5,775 | 53,090 | 40,400 | 30,000 | 325,009 |
| தே.க.வரி | 908,011 | 1,220,191 | 1,653,770 | 873,852 | 1,569,491 | 1,273,376 | 1,330,505 | 2,133,255 | 1,752,110 | 1,582,628 | 1,323,042 | 987,588 | 16,607,819 |
| ஏனையவை | 1,200 | - | 900 | 3,000 | 2,100 | 300 | 3,695 | 1,695 | 2,533 | 6,458 | 21,000 | 1,050 | 43,931 |
| பொ.சே.வரி | 828 | 1,585 | 1,453 | 1,100 | 1,869 | 2,938 | 4,765 | 1,623 | 1,253 | 14,625 | 54,428 | 1,500 | 87,967 |
| மொத்தம் | 22,996,716 | 32,993,899 | 42,899,447 | 23,181,729 | 38,022,602 | 30,396,782 | 32,691,356 | 31,261,732 | 41,329,687 | 39,052,483 | 31,642,646 | 24,381,837 | 390,850,916 |
| ஏனைய கட்டணங்கள் | | | | | | | | | | | | | |
| காப்பறை கட்டணம் | 68,750 | 59,000 | 38,200 | 31,800 | 31,750 | 34,250 | 34,400 | 29,650 | 53,500 | 42,250 | 51,850 | 37,300 | 512,700 |
| மேலதிக நேரம் | 788,225 | 678,900 | 841,875 | 490,500 | 681,525 | 736,375 | 626,480 | 717,400 | 541,200 | 663,400 | 712,075 | 623,300 | 8,101,255 |
| டீ.எப்.எஸ் சுங்க கட்டணங்கள் | 65,000 | 61,550 | 55,150 | 39,900 | 46,000 | 59,000 | 55,000 | 51,000 | 37,000 | 44,000 | 63,900 | 55,000 | 632,500 |
| கணனி கட்டணம் | 351,000 | 425,000 | 501,000 | 357,500 | 421,750 | 355,000 | 387,000 | 312,250 | 402,500 | 419,000 | 507,600 | 328,500 | 4,768,100 |
| மொத்தம் | 1,272,975 | 1,224,450 | 1,436,225 | 919,700 | 1,181,025 | 1,184,625 | 1,102,880 | 1,110,300 | 1,034,200 | 1,168,650 | 1,335,425 | 1,044,100 | 14,014,555 |
| முழு மொத்தம் | 24,269,691 | 34,218,349 | 44,335,672 | 24,101,429 | 39,203,627 | 31,581,407 | 33,794,236 | 32,372,032 | 42,363,887 | 40,221,133 | 32,978,071 | 25,425,937 | 404,865,471 |

| கண்டுபிடிப்புகள் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜனவாரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
| கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை | 12 | 11 | 20 | 15 | 39 | 23 | 32 | 16 | 23 | 24 | 31 | 10 | 256 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா) | 2,140,000 | இல்லை | 2,144,500 | 9,472,500 | 1,463,500 | 1,260,000 | 133,487,294 | 58,134,415 | 67,942,835 | 46,191,206 | 114,930,435 | 55,373,522 | 492,540,207 |
| பறிமுதல் செய்யப்பட்ட நாணயங்களது பெறுமதி (ரூபா) | 305,000 | இல்லை | 13,472,643 | இல்லை | 17,957,846 | 61,247,679 | 89,714,619 | 10,061,615 | 41,292,026 | 13,903,880 | 52,052,529 | 1,141,410 | 301,149,247 |
| மத்திய புலனாய்வு பணிப்பகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 22,994,365 | இல்லை | இல்லை | 22,994,365 |
| பறிமுதல் செய்யப்பட்ட | இல்லை | இல்லை | 49,733 | இல்லை | 269,809 | 190,742 | 178,431 | 78,994 | இல்லை | இல்லை | இல்லை | 105,672 | 873,381 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தீர்வையற்ற பொருட்களது பெறுமதி | | | | | | | | | | | | | |
| பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கற்களது பெறுமதி (ரூபா) | இல்லை | இல்லை | 24,121,917 | இல்லை | இல்லை | 8,400,000 | 15,137,828 | 4,913,600 | 1,075,600 | 382,766 | 644,010 | இல்லை | 54,675,721 |
| பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தினது பெறுமதி (ரூபா) | 18,375,537 | 7,897,020 | 13,689,115 | 18,034,810 | 224,920,908 | 72,085,205 | 103,751,685 | 51,419,421 | 49,449,235 | 35,842,440 | 97,411,425 | 16,536,600 | 709,413,401 |
| பறிமுதல் செய்யப்பட்ட வெள்ளிப் பொருட்களது பெறுமதி(ரூபா) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | - |
| பறிமுதல் செய்யப்பட்ட புகையிலை உற்பத்திகளது பெறுமதி(ரூபா) | 1,194,000 | 3,810,000 | 9,580,900 | 7,184,000 | 7,916,000 | 3,341,000 | இல்லை | 1,147,400 | 980,000 | 6,580,000 | 15,325,000 | 4,873,000 | 61,931,300 |
| கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருட்களது எண்ணிக்கை | இல்லை | 1,204 | இல்லை | 13,272 | இல்லை | 850 | 628 | இல்லை | இல்லை | 1,018 | இல்லை | 1,990 | 18,962 |
| பறிமுதல் செய்யப்பட்ட ஏனைய பொருட்களது பெறுமதி(ரூபா) | Nil | 19,602,000 | இல்லை | 13,272,000 | இல்லை | 1,300,000 | இல்லை | 575,000 | 16,060,000 | 2,368,000 | 1,550,000 | 4,008,250 | 58,735,250 |
| மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளது எண்ணிக்கை | 12 | 11 | 20 | 15 | 39 | 23 | 32 | 16 | 23 | 24 | 31 | 10 | 256 |
| தடுத்துவைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களது எண்ணிக்கை | 2 | 1 | 2 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 5 |
| பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட் பெட்டிகளது எண்ணிக்கை | 119 | 381 | 939 | 851 | 767 | 333 | 604 | 97 | 98 | 784 | 1,522 | 443 | 6,938 |
| தடுத்துவைக்கப்பட்ட ஏனைய பொதிகளது எண்ணிக்கை (மதுபானம் போன்றவை) | இல்லை | இல்லை | 12 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 12 |

| வழங்கப்பட்ட சேவைகள் (வருகை கருமபீடம்) | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜனவாரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
| வந்திறங்கிய விமானங்களது எண்ணிக்கை | 2,906 | 2,631 | 2,812 | 2,697 | 2,694 | 2,552 | 2,612 | 2,536 | 2,410 | 2,651 | 2,365 | 2,675 | 31,541 |
| வந்திறங்கிய பயணிகளது எண்ணிக்கை | 515,483 | 455,158 | 479,151 | 448,741 | 428,070 | 421,155 | 467,740 | 441,709 | 411,483 | 416,504 | 386,959 | 575,962 | 5,448,115 |
| சிவப்பு வாயிலூடாக வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை | 10,673 | 9,197 | 9,846 | 9,506 | 8,610 | 10,486 | 10,614 | 10,124 | 7,986 | 8,464 | 8,495 | 7,645 | 111,646 |
| தீர்வை மற்றும் ஏனைய வரிகளது செலுத்துகையின் பின்னர் | 1,404 | 1,700 | 2,004 | 1,430 | 1,691 | 1,420 | 1,548 | 1,249 | 1,610 | 1,676 | 2,030 | 1,314 | 19,076 |
| தீர்வையற்ற கொடுப்பனவின் கீழானவை | 9,269 | 7,497 | 7,842 | 8,076 | 6,919 | 9,066 | 9,066 | 8,875 | 6,376 | 7,235 | 6,465 | 6,331 | 93,017 |
| மிகவும் முக்கிய பிரமுகர்களது எண்ணிக்கை - வருகை | 195 | 158 | 251 | 303 | 215 | 240 | 240 | 324 | 352 | 401 | 180 | 152 | 3,011 |
| மிகவும் முக்கிய பிரமுகர்களது எண்ணிக்கை ï செல்லுகை | 196 | 199 | 234 | 279 | 233 | 227 | 227 | 265 | 439 | 260 | 144 | 181 | 2,884 |
| தவறான கையாளுகை மூலம் வெளியாக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை | 3,309 | 2,452 | 2,544 | 2,159 | 1,949 | 3,211 | 4,200 | 3,708 | 3,414 | 3,618 | 1,926 | 3,884 | 36,374 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களது எண்ணிக்கை | 27 | 53 | 58 | 22 | 40 | 69 | 55 | 41 | 69 | 31 | 38 | 60 | 563 |
| பதிவு செய்யப்பட்ட கானே விடயங்களின் எண்ணிக்கை | 18 | 13 | 14 | 12 | 10 | 30 | 9 | 10 | 11 | 29 | 18 | 7 | 181 |
| வெளியாக்கப்பட்ட கப்பல் பாகப் பொருட்களது எண்ணிக்கை | 8 | 9 | 22 | 12 | 15 | 14 | 11 | 18 | 16 | 17 | 20 | 12 | 174 |
| வினியோகிக்கப்பட்ட நாணய பிரகடன சான்றிதழ்களது எண்ணிக்கை | 87 | 73 | 105 | 92 | 91 | 92 | 153 | 124 | 122 | 142 | 109 | 152 | 1,342 |
| வழங்கப்பட்ட சேவைகள் (செல்லுகை கருமபீடம்) | | | | | | | | | | | | | |
| வெளிச்சென்ற விமானங்களது எண்ணிக்கை | 2,977 | 2,706 | 2,764 | 2,712 | 2,752 | 2,586 | 2,646 | 2,658 | 2,576 | 2,471 | 2,410 | 2,721 | 31,979 |
| வெளிச்சென்ற பயணிகளது எண்ணிக்கை | 258,103 | 466,429 | 460,954 | 463,060 | 425,405 | 408,602 | 431,076 | 419,316 | 127,317 | 168,459 | 246,795 | 433,073 | 4,308,589 |
| கையாளப்பட்ட இரத்தினக்கல் பொதிகளது எண்ணிக்கை | 255 | 184 | 243 | 174 | 223 | 205 | 240 | 175 | 254 | 47 | 241 | 187 | 2,428 |
| பெறப்பட்ட பிரகடனங்களது எண்ணிக்கை | 13 | 16 | 19 | 15 | 16 | 30 | 21 | 31 | 30 | 14 | 10 | 18 | 233 |
| குறிப்பீடு இடப்பட்ட அற்றோனி தத்துவங்களின் எண்ணிக்கை | 110 | 88 | 91 | 80 | 133 | 92 | 127 | 118 | 171 | 70 | 57 | 70 | 1,207 |
| சான்றுபடுத்தப்பட்ட எப்.ஆர்.ஐ.சீ களது எண்ணிக்கை | 5 | 12 | 10 | 8 | 5 | 10 | 12 | 9 | 8 | 8 | 9 | 1 | 97 |
| பதிவு செய்யப்பட்ட கானே விடயங்களின் எண்ணிக்கை | 25 | 18 | 44 | 30 | 22 | 50 | 22 | 31 | 32 | 47 | 59 | 32 | 412 |

| பதவியணியினர் பதவி | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| சு.ப | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| சு.பி.ப | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| சு.அ | 6 | 6 | 6 | 6 | 6 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| உ.பொ.அ | 31 | 31 | 31 | 31 | 31 | 30 | 28 | 28 | 28 | 28 | 28 | - |
| சு.பி.பரிசோதகர் | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| சு.பரிசோதகர் | 22 | 22 | 22 | 22 | 22 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 |
| அ.மு.உ | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| அலுவலக உதவியாளர் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| சாரதி | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| காசாளர் | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| சு.கா | 9 | 9 | 9 | 9 | 9 | 8 | 12 | 12 | 8 | 8 | 8 | 8 |
| இரவு | | | | | | | | | | | | |
| க.அ | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| சு.அ | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| உ.பொ.அ | 33 | 33 | 33 | 33 | 33 | 33 | 33 | - | 33 | 33 | 33 | 33 |
| சு.பி.பரிசோதகர் | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| சு.பரிசோதகர் | 22 | 22 | 22 | 22 | 22 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 |
| காசாளர் | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| அலுவலக உதவியாளர் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| சு.கா | 17 | 9 | 9 | 9 | 9 | 8 | 12 | 12 | 8 | 8 | 8 | 8 |

# அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக்க) பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்கமானது கட்டுநாயக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் விமானச் சரக்குச் சாலையில் அமையப்பெற்றுள்ளது. இப்பணிப்பகமானது உரிய அரசிறையினை சேகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டுள்ளதுடன் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் எல்லைக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை உறுதிப்படுத்தி விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்குகளை வெளியாக்க வசதியளிக்கின்றன.

இலங்கைச் சுங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சேவைகளை வழங்கும் நோக்கில், ஸ்ரீலங்கன் விமான சேவைகள் (பிறை) லிமிடட் ஆனது விமானச் சரக்குத் தளத்தில் பாரியளவில் பொருட்களைக் கையாள்கின்ற முகவராக தொழிற்படுவதுடன் எஸ்.எல்.எப்.எப்.ஏ. கார்கோ சேவிசஸ் லிமிடட் மற்றும் எக்ஸ்போ ஏவியேசன் லிமிடட் என்பன சரக்குத் தளம்-11 இல் பிற பொருட்களைக் கையாள்கின்ற முகவர்களாகவும் சுயமாகக் கையாள்கின்ற சேவைகளை வழங்குபவர்களாகவும் செயற்படுகின்றனர். கூரியர் சரக்கினை மிக விரைவாக வெளியாக்கும் வகையில் எம்/எஸ் டீ.எச்.எல். (பிறை) லிமிடட் மற்றும் எம்/எஸ் கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸ் (பிறை) லிமிடட் ஆகியவற்றில் செயற்படுத்தப்படுகின்ற பிணைப்படுத்தப்பட்ட களஞ்சிய சாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

1. விமானம் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் வரிகள் மற்றும் கட்டணங்களை மதிப்பிடலும் சேகரித்தலும்.
2. பொருள் பிரகடனங்களை செய்முறைப்படுத்தலும் வெளியாக்க அனுமதித்தலும்.
3. கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகத்தின் கீழ் செயற்படுகின்ற பல்வேறு ஏற்றுமதி நோக்கிய வசதியளித்தல்கள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வெளியாக்கல் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்கல்.
4. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களுக்காக அனுப்பப்பட்ட இறக்குமதிப் பொருட்களை வெளியாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
5. பழுதடையக்கூடிய பொருட்கள, கூரியர் சரக்கு, இராஜதந்திரிகளின் பொருட்கள் மற்றும் அஞ்சற் பொதி போன்றவை அடங்கலாக விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படும் அவசரப் பொருட்களை விரைவாக வெளியாக்கும் வகையில் முழு நேரமும் செயற்படல்.
6. திரும்பி வருகின்ற பயணிகளது அவர்கள் உடன் வராத பொதிகளை பல்வேறு பயணிகள் உடன் வராத பொதி இல்லங்களுக்கு மாற்ற வசதியளித்தல்.
7. முதலீட்டுச் சபை, முதலீட்டுச் சபை சாராத, கூரியர் மற்றும் பழுதடையக் கூடிய பொருட்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட இறக்குமதிச் சரக்குகள் சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலும் மற்றும் ஏற்றுமதக் கப்பல் ஏற்றுகைக்காக வெளியாக்கல் அனுமதியினை வழங்குதலும்.

| தொ. இல | விபரம் | குறியீடு | விமானச் சரக்கு | விமானச் சரக்கு | டி.எச.எல் | கொழும்பு காகோ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுங்க இறக்குமதித் தீர்வை | CID | | 2,039,985,371.00 | 238,670,841.00 | 127,802,504.00 | **2,406,458,716.00** |
| 2 | பெறுமதி சேர் வரி | VAT | | 6,137,433,120.00 | 738,043,981.00 | 394,144,185.00 | **7,269,621,286.00** |
| 3 | துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | PAL | | 5,194,110,989.00 | 427,834,219.00 | 227,352,897.00 | **5,849,298,105.00** |
| 4 | சமூக பாதுகாப்பு அறவீடு | SRL | | - | - | - | **-** |
| 5 | விசேட பண்ட அறவீடு | SCL | | 123,067,742.00 | 197,942.00 | 71,142.00 | **123,336,826.00** |
| 6 | ஒருங்கிணைந்த வரி | CON | | 2,656,450.00 | - | - | **2,656,450.00** |
| 7 | சுங்க இறக்குமதி மேலதிகக் கட்டணம் | SUR | | - | - | - | **-** |
| 8 | உற்பத்தி வரி | XDO | | 12,807,146.00 | 227,620.00 | 192,153.00 | **13,226,919.00** |
| 9 | பொருளாதார சேவைக் கட்டணம் | ESC | | - | 8,545.00 | 2,876.00 | **11,421.00** |
| 10 | தேச கட்டுமான வரி | NBT | | 2,504,467,362.00 | 160,730,705.00 | 83,491,710.00 | **2,748,689,777.00** |
| 11 | இறக்குமதி செஸ் வரி | EIC | | 925,523,661.00 | 124,028,559.00 | 61,302,587.00 | **1,110,854,807.00** |
| 12 | கனணிக் கட்டணம் | COM | | 15,876,000.00 | 7,436,000.00 | 5,196,750.00 | **28,508,750.00** |
| 13 | பரிசோதனைக் கட்டணம் | EXM | | 15,175,800.00 | 8,909,600.00 | 6,236,700.00 | **30,322,100.00** |
| 14 | மேலதிக செலுத்துகை | OVP | | 933,196.00 | - | - | **933,196.00** |
| 15 | மேலதிக நேரக் கட்டணங்கள் | OTC | | 71,851,404.00 | 7,080,000.00 | 1,732,500.00 | **80,663,904.00** |
| 16 | சீல் கட்டணங்கள் | SEL | | 557,850.00 | - | 300.00 | **558,150.00** |
| 17 | அபராதம் | PTY | | 44,855,935.00 | 41,611,421.00 | 12,561,985.50 | **99,029,341.50** |
| 18 | சரிபார்ப்புக் கட்டணம் | VCS | | - | 8,826,198.00 | 1,616,896.56 | **10,443,094.56** |
| 19 | ஏனையவைகள் | MISC | | 13,408,414.00 | - | - | **13,408,414.00** |
| 20 | விசேட சேமிப்பு | SPD | | - | - | - | **-** |
| 21 | ஏனையவை (திருத்தக் கட்டணம்) | AMD | | - | 14,500.00 | 66,500.00 | **81,000.00** |
| | மொத்தம் (ரூபா.) | | | **17,102,710,440.00** | **1,763,620,131.00** | **921,771,686.06** | **19,788,102,257.06** |
| 22 | பெறப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை | | | 6753 | 29785 | 20787 | **57325** |
| 23 | பிணையிடல் ,இன்பக் மற்றும் ரீப் ஆகியவற்றின் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை | | | 2929 | 0 | 229 | **3158** |
| 24 | முதலீட்டுச் சபையின் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை | | | 10295 | 28719 | 10037 | **49051** |
| | இறக்கி ஏற்றலாக | | 05 | 227 | 0 | 0 | **227** |
| 25 | எஸ்.ஆர். விண்ணப்பங்களின் எண்ணிக்கை (டி.ஆர்.ஏ.) | | | 1 | 0 | 5 | **6** |
| 26 | ஏற்பாடுகளின் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | | 1 | 0 | 49 | **50** |
| 27 | 19அ/விலக்களிப்புகளின் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | | 1079 | 0 | 0 | **1079** |
| 28 | மாற்றிஏற்றலின் கீழ் வெளியாக்கப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை | | | 5479 | 0 | 714 | **6193** |
| 29 | வெளிநாட்டு தூதுவராலய பொருட்களது எண்ணிக்கை | | | 370 | 0 | 0 | **370** |
| 30 | கானே இன் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | 04 | 80 | 0 | 0 | **80** |
| 31 | வங்கி உத்தரவாதத்தின் பேரில் (வி.வ.வா/டீ.எச்.எல்/சீ.சீ)வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | 07 | 124 | 0 | 0 | **124** |
| 32 | ISAFTA/SAFTA இன் கீழ் வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | 08 | 164 | 0 | 0 | **164** |
| 33 | தனிப்பட்ட உத்தரவாதத்தின் பேரில் (வி.வ.வா/டீ.எச்.எல்/சீ.சீ)வெளியாக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை | | 04 | 15 | 0 | 0 | **15** |
| 34 | இரத்தினக்கல் பதிவு | | | 670 | 0 | 0 | **670** |
| | மொத்தம் | | | **21434** | **58504** | **31821** | **111759** |
| 35 | வினியோகிக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை | | | 0 | 0 | | **0** |

# அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மாகம்புர ஆகிய வெளித்துறைமுகங்களிலான சரக்குகள், பயணிகள் உடன் வராத பொதிகள் மற்றும் தபால் பொதிகள் என்பவற்றினை வெளியாக்கும் வகையிலான சேவைளுடன் தொடர்புபட்ட சகல சுங்க தொழிற்பாடுகளையும் முகாமை செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன் உரிய வருவாயினை சேகரிப்பதனையும் உறுதிப்பதுத்தும் பொறுப்பினையும் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

1. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீதான உரிய வருவாயினை சேகரித்தல்.
2. நாட்டினது சமூக பொருளாதார பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் எல்லைக் கட்டுப்பாடுகளை பேணல்.
3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சரக்குகளை பரிசோதனை செய்தலும் விடுவித்தலும்.
4. பிராந்திய மட்டத்திலான குத இல்லங்களில், பணயிகள் உடன் வராத பொதிகள் மற்றும் தபால் மூலமான பொதிகளை வெளியாக்குவதற்கான வசதியினை வழங்குதல்

அரசிறை சேகரிப்பு

| தீர்வை மற்றும் பிற அறவீடுகள் | காலி | திருகோணமலை தபால் | திருகோணமலை துறைமுகம் | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் தபால் | யாழ்ப்பாணம துறைமுகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| சுங்க இறக்குமதித் தீர்வை | 21,144.00 | 54,080.00 | 37,053.00 | 1,011,029.87 | 181,241.00 | - | 1,304,547.87 |
| பெறுமதி சேர் வரி | 450,388.40 | 406,667.00 | 171,299.78 | 10,178,049.94 | 594,257.00 | - | 11,800,662.12 |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 190,117.50 | 818,630.00 | 70,459.50 | 805,562.25 | 1,275,816.00 | - | 3,160,585.25 |
| உற்பத்தி வரி | - | - | - | - | - | - | - |
| தேச கட்டுமான வரி | 71,056.96 | 534,198.00 | 22,955.71 | 304,728.72 | 892,383.00 | - | 1,825,322.39 |
| இறக்குமதி செஸ் வரி (EDB) (EIC) | 51,070.00 | 1,132,709.00 | 1,100.00 | 61,600.00 | 1,564,443.00 | - | 2,810,922.00 |
| விசேட பண்ட அறவீடு | - | - | - | - | - | - | - |
| மொத்தம் (தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகள்) | 783,776.86 | 2,946,284.00 | 302,867.99 | 12,360,970.78 | 4,508,140.00 | - | 20,902,039.63 |
| ஏனைய கட்டணங்கள் | | | | | | | |
| கணனிக் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| பரிசோதனைக் கட்டணம் | 550.00 | - | 1,776,000.00 | 4,800.00 | - | - | 1,781,350.00 |
| காப்பறைக் கட்டணம் | 1,498,400.00 | 86,050.00 | - | 5,200.00 | 12,800.00 | - | 1,602,450.00 |
| மேலதிக நேரக் கட்டணம் | 18,627,264.50 | - | 17,639,686.00 | 260,510.00 | - | 734,152.00 | 37,261,612.50 |
| ஆவணக் கையாளுகை கட்டணம் | - | - | - | - | - | - | - |
| போட்டோ பிரதி கட்டணம்.·. ஏனையவை | - | - | - | - | - | - | - |
| அபராதம் | 480,903.00 | - | 10,000.00 | 192,900.50 | 8,000.00 | 4,050,000.00 | 4,741,803.50 |
| விசேட சேமிப்பு | - | - | - | - | - | - | - |
| விடுவித்தல் மற்றும் ஏற்றுதல் கட்டணங்கள் | - | - | - | - | - | - | - |
| துறைமுக வெளியாக்கல் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| துறைமுக வெளியாக்கல் கட்டணம் | - | - | 1,867,136.00 | 10,693,576.82 | - | - | 12,560,712.82 |
| ஏனைய கட்டணங்கள் | 20.835.967.50 | 86,050.00 | 21,292,822.00 | 11,156,987.32 | 20,800.00 | 4,784,152.00 | 58,176,508,82 |
| | | | | | | | |
| இவ்வருடத்திற்கான முழு மொத்தம் | **21.619.474.36** | **3,032,334.00** | **21,595,689.99** | **23,517,958.10** | **4,528,940.00** | **4,825,940.00** | **79,078,548.45** |

# சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்

# முறைமை மற்றும் நடைமுறை இணக்கப்பாட்டு கணக்காய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன், இலங்கைக் கணக்காய்வாளர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அலுவலரால் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்புதிய பணிப்பகம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்ப்புகளானது, ஒழுங்கீனங்கள் அடிக்கடி நிகழ்வதனையும் மற்றும் ஒருமைப்பாட்டிலான தளர்வுகளையும் தடுக்கும் வகையில் முறையான விருத்தியில் செயற்பாட்டு முகாமையாக உதவுதல், மற்றும் உள்ளாக்கப்படும் இடர்களுக்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தலும் விருத்தி செய்தலுமாகும்.

திறமையான முறையில் கணக்காய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சகல முக்கிய செய்முறைகளில் வளப் பயபாட்டினை சிக்கனப்படுத்தல் மற்றும் திணைக்களத்தினூடாக சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய செய்முறைகளை ஆதரித்தல் என்பன இப்பணிப்பகத்தின் நோக்காகும்.

பிரதான தொழிற்பாடுகள்

